# தெனாலிராமன் விகடக் கதைகள்

## ( 48 கதைகள் அடங்கியமுழு நூல்)

முல்லை பி எல். முத்தையா

## இதில் உள்ள கதைகள்


| | | | |
|---|---|---|---|
| 1. | தெனாலிராமன் பிறந்த கதை | ... | 1 |
| 2. | விகடகவியான தெனாலிராமன் | ... | 2 |
| 3. | அரச குருவிடம் சவால் | ... | 5 |
| 4. | ஜால வித்தைக்காரன் தோல்வி | ... | 8 |
| 5. | தத்துவ நிபுணரின் தவிப்பு | ... | 10 |
| 6. | பால் குடிக்காத பூனை | ... | 11 |
| 7. | பேராசைக்குச் சூடு | ... | 14 |
| 8. | குதிரையும் பூனையும் விற்பனை | ... | 17 |
| 9. | அரச குரு பட்ட பாடு | ... | 20 |
| 10. | கூன் நிமிர்ந்த கதை | ... | 24 |
| 11. | கடன் தீர்ந்து விட்டது | ... | 29 |
| 12. | அரைப் பணத்துக்குப் போதும்! | ... | 30 |
| 13. | வாய் உள்ள பிள்ளை பிழைக்கும் | ... | 32 |
| 14. | பேராசைக்காரர்கள் | ... | 35 |
| 15. | பாத்திரங்கள் குட்டி போடும் அதிசயம் | ... | 38 |
| 16. | வீரச்செயல் | ... | 41 |
| 17. | எலியும் பூனையும் | ... | 42 |
| 18. | இழந்தால் இரட்டிப்பு லாபம் | ... | 43 |
| 19. | மைத்துனனுக்கு விடுதலை | ... | 46 |
| 20. | பளு தாங்கவில்லை | ... | 48 |
| 21. | பூனையைக் கண்ட கிளிகள் | ... | 49 |
| 22. | உடலுக்குச் சுகம் எப்பொழுது? | ... | 52 |


RangaRakes

tamilnavarasam.com

23. கத்தரிக்காய் குழம்பு ... 54
24. இறந்தவன் எழுந்துவிட்டான் ... 58
25. இங்கும் அங்கும் ... 60
26. மக்களுக்குத் தேவை எது? ... 63
27. உளவாளியின் சதி ... 66
28. சோதிடரின் முடிவு ... 69
29. கிருஷ்ணன் வாங்கிய அடி ... 75
30. அவமானம் அடைந்த அரசர் ... 79
31. தலையைக் காட்டாதே! ... 82
32. அரச குருவின் கலக்கம் ... 84
33. புதுமையான ஓவியம் ... 88
34. தலை தப்பியது ... 90
35. மணலா? சர்க்கரையா? ... 92
36. கொட்டாவி விடாதவர் யார்? ... 94
37. குளிர் காய வசதி ... 96
38. தனக்கு வந்தால் தெரியும் ... 98
39. மாறு வேடத்தில் ஒற்றன் ... 101
40. மல்யுத்த சாஸ்திரம் ... 107
41. பண்டிதருக்குத் தெரியாத நூல் ... 110
42. தூக்குத் தண்டனை ... 114
43. அறிவுள்ளவனே அறிவாளன் ... 115
44. இயற்கையும் செயற்கையும் ... 118
45. அறிவினால் உயர்வு பெறு ... 121
46. டில்லியில் தெனாலிராமன் ... 124
47. திருடர்களின் ஏமாற்றம் ... 128
48. தெனாலிராமனின் பிரிவு ... 130


# 1

## தெனாலிராமன் பிறந்த கதை

**ஆ**ந்திர தேசத்தில், கிருஷ்ணா மாவட்டத்தில் காலபடு என்னும் கிராமத்தில், மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள குடும்பத்தில், இராமய்யர் - இலட்சுமி அம்மாள் இருந்து வந்தனர்.

அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு இராமலிங்கன் என்று பெயர் இட்டனர். அந்தப் பெயரானது தெனாலி என்னும் கிராமத்தில் இருந்த இராமலிங்க சுவாமியின் பெயராகும். இராமனின் தாயார் பிறந்த ஊர் தெனாலி.

இராமன் பிறந்த மூன்றாம் நாள் அவன் தந்தை காலமானார்.

ஆதரவை இழந்த நிலையில், இலட்சுமி அம்மாள் தம் மகனைத் தூக்கிக்கொண்டு, பிறந்த ஊரில் உள்ள சகோதரன் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்.

உரிய வயதில், மகனைப் பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைத்தார்.

RangaRakes tamilnavarasam.com

ஆனால், இராமனுக்குப் படிப்பு ஏறவில்லை. விகடமான பேச்சுக்களும், குறும்புத்தனங்களும், நகைச்சுவை மிகுந்த உரையாடல்களும் மதி நுட்பமும் அவனிடம் காணப்பட்டன.

அதனால் இராமனுக்குப் படிப்பில் கவனம் செல்லவில்லை.

பள்ளி ஆசிரியர் மிகவும் வருத்தப்பட்டு அவனை வீட்டுக்கு அனுப்பி விட்டார்.

அவனை ஆதரிப்பவர் யாரும் இல்லை. வறுமை வாட்டியது. ஆனால் அவனுடைய தன்னம்பிக்கை தளரவில்லை. விகடப் பேச்சோடும், குறும்புத்தனத்தோடும் வளர்ந்து வாலிபப் பருவத்தை அடைந்தான்.

கமலா என்னும் மங்கையை இராமன் மணம் செய்து, எப்படியோ வாழ்க்கையை வறுமையோடு கழித்தான். வறுமையிலும் மனைவியைச் சிரிக்க வைத்து உற்சாகமாக இருந்தான். தாயாரும் அவனோடு இருந்தாள்.

## 2

## விகடகவியான தெனாலிராமன்

**தெ**னாலி நகரில் மழை இல்லாமல் கடும் வறட்சி ஏற்பட்டது. மக்கள் குடிக்கக் கூட தண்ணீர் கிடைக்காமல் அவதிப்பட்டனர்.



அப்பொழுது, ஒரு துறவி அந்த ஊருக்கு வந்தார். அவர் வந்ததும், பெரு மழை பெய்து ஏரி, குளம், குட்டை முதலானவற்றில் நீர் நிறைந்து செழிப்படைந்தது.

'துறவி வந்த வேளை மழை பொழிந்தது' என ஊர்மக்கள் எல்லோரும் துறவியை வணங்கி, உபசரித்து, புகழ்ந்து கொண்டாடினார்கள்.

இராமன் மட்டும் அதை ஒப்புக்கொள்ளவில்லை. 'அது தற்செயலாக நிகழ்ந்ததே தவிர, துறவிக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?' என்று கூறி, சிரிக்கத் தொடங்கினான்.

அதைக் கண்ட துறவி கோபம் கொள்ளாமல், இராமனுடைய மதிநுட்பத்தையும், துணிவையும் கண்டு வியப்புற்றார்.

உடனே இராமனைக் கனிவோடு தனியாக அழைத்துச் சென்றார்.

"இராமா! நீ இளைஞனாக இருந்தபோதிலும், உன்னிடம் அறிவாற்றலைக் காண்கிறேன். நீ பகுத்தறிவுக்கு ஏற்பச் சிந்திக்கிறாய். இதை நான் பாராட்டுகிறேன்" என்றார் துறவி.

"பெரியவரே, உங்களுடைய வாழ்த்துக்கு மிகவும் நன்றி!" என்று கூறி, அவரை வணங்கினான் இராமன்.

"இராமா! புராணக் கதைகளைப் படித்தது உண்டா?" என்று கேட்டார் துறவி.

RangaRakes tamilnavarasam.com

"அறிவு சான்ற பெரியவரே! எனக்கு அவற்றில் விருப்பம் ஏற்படவில்லை. ஒரு சந்தேகம். காளி தேவிக்கு, ஆயிரம் முகங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. நமக்கு ஜலதோஷம் பிடித்தால், ஒரு மூக்கைச் சிந்த இரண்டு கைகள் போதவில்லையே. ஆயிரம் முகங்கள் உடைய காளிதேவிக்கு ஜலதோஷம் பிடிக்குமானால், தம்முடைய இரண்டுக் கைகளால் ஆயிரம் மூக்குகளை எவ்வாறு சிந்துவாள்? ரொம்பவும் திண்டாடிப் போகக் கூடும் அல்லவா?" என்று சொல்லிச் சிரித்தான். இராமனின் கேள்வி துறவிக்கு வியப்பாக இருந்தது.

"இராமா! உன்னுடைய பேச்சு சிந்தனையைத் தூண்டுகிறது. அதே சமயத்தில் நகைச்சுவையாகவும் இருக்கிறது. முற்காலத்தவர்கள், தங்களுடைய அறிவை அவ்வாறு கற்பனையில் புகுத்தி, மக்களை மகிழ்விக்க வேண்டும் என்ற நோக்கத்தில் எழுதி வைத்துள்ளார்கள். ஆகையால், அவற்றை ஆராய்ச்சி செய்து தோண்டிப் பார்க்க வேண்டியதில்லை. உன்னுடைய பேச்சில் சிந்தனையும், நகைச்சுவையும் பிரதானமாகக் காணப்படுவதால், உன்னை 'விகடகவி' என்று கூறுவது பொருத்தமாகும். ஆகையால், காலத்துக்கு ஏற்றவாறு, உன்னுடைய பகுத்தறிவும், நகைச்சுவையும் மக்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கட்டும்" என்று கூறி, தெனாலிராமனை வாழ்த்திவிட்டுச் சென்றார் துறவி.

துறவி கூறிய 'விகடகவி' என்பதை, தனக்குத் தானே சொல்லி மகிழ்ந்து, இடது பக்கமிருந்து சொன்னாலும் வலது பக்கமிருந்து சொன்னாலும் விகடகவி என்பது மாறவே மாறாது என்று எண்ணிச் சிரித்தான் தெனாலிராமன்.



## 3

# அரச குருவிடம் சவால்

**வி**ஜயநகர சாம்ராஜ்யத்தைக் கிருஷ்ணதேவராயர் புகழோடு ஆட்சி செய்து வந்தார்.

தெனாலி என்ற ஊரில் வளர்ந்து, 'விகடகவி' எனப் பெயர் பெற்ற இராமன், 'தெனாலி இராமன்' என்ற பெயரோடு விஜயநகர மன்னர் கிருஷ்ண தேவராயரிடம் செல்லத் தீர்மானித்தான்.

தன்னுடைய அன்னையின் பூர்வீகச் சொத்தான வீடு, நிலங்களை விற்றுப் பணத்தைச் சேகரித்துக் கொண்டு, தாய், மனைவி, மக்களையும் அழைத்துக் கொண்டு, நடையாகவே விஜயநகரத்தை அடைந்து, அங்கே இருந்த தர்ம சத்திரத்தில் குடும்பத்தினரைத் தங்கி இருக்கும்படி செய்து விட்டு, அரசகுருவின் இல்லத்தை நோக்கிச் சென்றான்.

அரச குரு தாத்தாச்சாரியார் மிகவும் செல்வாக்கு உள்ளவர். அவரிடம் அரசர் அளவற்ற மதிப்பு வைத்திருந்தார்.

RangaRakes tamilnavarasam.com

அதனால், கலைஞர்கள், ஊழியர்கள் எவரானாலும், முதலில் அரச குருவைப் பார்த்து விட்டு, அவருடைய அனுமதியோடுதான் அரசரைக் காண்பது வழக்கம். ஆகையால், அவருடைய இல்லத்தில் எப்பொழுதும் கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். காவலர்களைக் கடந்து அவரைப் பேட்டி காண்பது மிகவும் கடினமாக இருக்கும்.

தெனாலிராமன், "நான் அரச குருவின் முதலாவது சீடன்" என்று கூறிக்கொண்டு காவலரை மீறி, மிக விரைவாக உள்ளே சென்று விட்டான்.

அரசகுரு அப்பொழுது சிலருடன் பேசிக் கொண்டிருந்தார். அந்தப் பேச்சிலிருந்து, அவர் தற்புகழ்ச்சிக்கு மயங்குபவர் என்பதைப் புரிந்து கொண்டான்.

அவரை வணங்கி, "குருதேவர் பெருமானே! சகலகலாவல்லவரே, ஏழைகளுக்கு இரங்கி உதவி புரியும் வள்ளலே! நான் உம்முடைய சீடன். நீர் சிபாரிசு செய்து, அரச சபையில் எனக்கு விதூஷகன் வேலை வாங்கித் தந்து ஆதரிக்க வேண்டும்; அப்பொழுது உம்மை, அரச சபையிலே இன்னும் அதிகமாகவே புகழ்ந்து பேசுவேன்" என்றான் தெனாலிராமன்.

அவனுடைய சாதுர்யமான பேச்சைக் கண்ட அரசகுரு. அவனால் அரச சபையில் தமக்கு இருக்கும் மதிப்புக் குறைந்து விடும் என ஐயுற்று, "இந்த முட்டாள் யார் என்றே எனக்குத் தெரியாது. இவனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுங்கள்" என்று காவலருக்கு உத்தரவிட்டார்.



காவலர்கள் தெனாலிராமனைப் பிடித்துத் தள்ள முற்பட்டனர். அப்பொழுது அங்கிருந்தோர் அனைவரும் ஏளனமாகச் சிரித்தனர். அதனால் அவமானத்துக்கு ஆளான தெனாலிராமன், அரச குருவைப் பார்த்து, "அரச சபைக்கு நான் நேராகச் செல்லாமல், நந்தி போல் இருக்கும் உம்மிடம் சிபாரிசுக்கு வந்ததால், நான் முட்டாள்தான். ஆனால், என்னைக் காட்டிலும் மற்றவர்கள் அனைவரும் முட்டாள்கள் என்பதை இனி மேல் நிரூபித்துக் காட்டுகிறேன்" என சவால் விட்டு, நேராக அரச சபைக்குச் சென்றான்.

தன்னை அவமானப் படுத்திய அரச குருவை என்றாவது ஒரு நாள் பழிவாங்காமல் விடுவதில்லை என உள்ளத்தில் உறுதியாக எண்ணினான் தெனாலிராமன்.

O அந்தக் காலத்து அரச சபையில் விதூஷகன் இருப்பது வழக்கம். விதூஷகன் என்றால் நகைச் சுவையாகப் பேசுபவன் 'விகடகவி' என்று பொருள். அரசருடைய செல்லப்பிள்ளை போல எங்கும் சென்று, எல்லோரிடமும் பேசுவான்.

RangaRakes

tamilnavarasam.com

# 4

## ஜாலவித்தைக்காரன் தோல்வி

அமைச்சர்கள், அதிகாரிகள் முதலானோர் சூழ அரசர் கிருஷ்ண தேவராயர் மாபெரும் சபையில் வீற்றிருந்தார்.

அரச குருவினால் சிபார்சு செய்யப் பெற்ற ஜாலவித்தைக்காரன் ஒருவன், சபையில் பல வித்தைகளைக் காட்டி, எல்லோரையும் மகிழ்வித்துக் கொண்டிருந்தான். அரசரும் வியப்போடு கண்டு களித்தார்.

பெருமையில் மூழ்கியிருந்த ஜால வித்தைக்காரன், "இந்த வித்தையில், எனக்கு நிகர் எவரும் இல்லை; ஆயிரம் பொன் பரிசு கொடுத்தாலும், மன்னர்பிரான் இதைப் போன்ற வித்தைகளைக் காணவே முடியாது" என்று கர்வத்தோடு கூறினான்.

அப்பொழுது சபையில் நுழைந்த தெனாலிராமன், ஜாலவித்தைக்காரன் கூறியதைச் செவிமடுத்தான்.

அவனை நோக்கி, 'கண்ணை மூடிக்கொண்டு நான் செய்வதை, நீ கண்ணைத் திறந்து கொண்டு செய்ய முடியாது. இந்தப் போட்டியில் நீ வெற்றி பெற்றால், ஆயிரம் பொன்னை எடுத்துக் கொள். இல்லையானால், நான் எடுத்துக் கொள்வேன்' என்று கூறினான் தெனாலிராமன்.



ஜாலவித்தைக்காரனுக்கு ஆத்திரம் தாங்கவில்லை.

"நான் எவ்வளவோ அரச சபைகளில், ஜால வித்தைகள் செய்து, பல பரிசுகளைப் பெற்றிருப்பவன். நீயோ ஒரு கோமாளி போல இருக்கிறாய். நீ கண்ணை மூடிக்கொண்டு செய்வதை, என்னால் கண்ணைத் திறந்துகொண்டு செய்ய இயலாதா?" என்று கூறி, மீசையை முறுக்கிவிட்டு, தெனாலிராமன் சவாலை ஏற்றான்.

சபையின் மத்தியில் தெனாலிராமன் உட்கார்ந்தான். தன்னுடைய இரண்டு கண்களையும் இறுக மூடிக் கொண்டான். இரண்டு கைகள் நிறைய மணலை அள்ளி, தன் கண்களின் மீது கொட்டிக் கொண்டான். சபையோர் ஆவலோடு பார்த்து வியப்படைந்தனர்.

சிறிது நேரத்தில், தெனாலிராமன் கம்பீரமாக எழுந்து, ஜாலவித்தைக்காரனைப் பார்த்து, "இதைப் போல நீ கண்களைத் திறந்து கொண்டு செய், பார்க்கலாம்" என்றான்.

தெனாலிராமன் செய்ததைப் பார்த்ததுமே ஜாலவித்தைக்காரன் திடுக்கிட்டான். தெனாலிராமன் கூறியதைக் கேட்டதும் அதிர்ச்சி அடைந்தான்.

கைகளைப் பிசைந்தபடியே, ஜாலவித்தைக்காரன் தன் தோல்வியை ஒப்புக்கொண்டான்.

RangaRakes tamilnavarasam.com

சபையோர் கர ஒலி எழுப்பி ஆரவாரம் செய்தனர். அவை தெனாலிராமனுக்கு கிடைத்த பாராட்டுகள் ஆகும்.

போட்டியின் நிபந்தனைப்படி, ஆயிரம் பொன்னையும் அரசர் தெனாலிராமனிடம் அளித்தார்.

தெனாலிராமனைப் பார்த்து, "நாளையும் நம்முடைய அரச சபைக்கு வருக!" என்று கூறினார் அரசர்.

5

## தத்துவ நிபுணரின் தவிப்பு

அரச சபைக்கு தத்துவ ஞானி ஒருவர் வந்தார். தத்துவம் என்பதைப் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தி விட்டு இறுதியில், "நாம் கண்ணால் காண்பது, நாவினால் சுவைப்பது, மூக்கினால் நுகர்வது எல்லாமே நாம் அனுபவிப்பதாகத் தோன்றுமே தவிர, செய்யும் ஒவ்வொரு செயலும் நாம் நினைக்கக் கூடிய எண்ணங்களினாலே ஏற்படக் கூடிய வெறும் பிரமையே தவிர, உண்மையில் நாம் அப்படிச் செய்வதில்லை" என்று கூறி, தத்துவ நிபுணர் என்பதற்கு ஏற்ப குழப்பமாகக் கூறி முடித்து, தம் கருத்தை சபையோர் ஏற்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

பொறுமையோடு கவனித்துக் கொண்டிருந்த தெனாலிராமன் எழுந்து, "ஐயா, தத்துவ நிபுணரே! நாம்



சாப்பிடுவதும்கூட வெறும் பிரமை தானா? நாம் சாப்பிடுவதற்கும் சாப்பிடுவதாக நினைப்பதற்கும் வேறுபாடு இல்லையா?" என்று கேட்டான்.

"இல்லை," என்று ஆணித்தரமாகக் கூறினார் தத்துவ நிபுணர்.

"இன்று மன்னர்பிரான் வழங்கும் அறுசுவை விருந்தில் நாம் அனைவரும் கலந்து மகிழ்ச்சியோடு சாப்பிடலாம். அப்பொழுது, இந்தத் தத்துவ நிபுணர் மட்டும் சாப்பிடாமல் - சாப்பிடுவதாக நினைத்துக் கொண்டு வயிற்றை நிரப்பிக்கொள்ளட்டும்" என்று கூறினான் தெனாலிராமன்.

சபையில் ஒரே ஆரவாரம்.

தத்துவ நிபுணர் தலை குனிந்தார்.

தெனாலிராமனின் நகைச்சுவையை அரசர் ரசித்து, அவனை ஆஸ்தான விகடகவியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அரச குருவுக்கு வேறு வழி இல்லை. அதனால் அவை ஆட்சேபிக்க முடியவில்லை.

6

## பால் குடிக்காத பூனை

விஜயநகரத்தில் எலி, பெருச்சாளிகளின் தொல்லை தாங்காமல் பொதுமக்கள் மிகவும் துன்புற்றார்கள். அரசரிடம் சென்று முறையிட்டார்கள்.

RangaRakes tamilnavarasam.com

குடிமக்களின் தொல்லைகளை நீக்குவதற்காக அரசர் பாரசீக நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான பூனைக் குட்டிகளை வரவழைத்து, வீட்டுக்கு ஒரு பூனையைக் கொடுத்து, அதற்குப் பால் ஊற்றி வளர்ப்பதற்காக, வீட்டுக்கு ஒரு பசுவும் அளித்தார்.

எல்லோருடைய வீட்டிலும் பசுவின் பாலைக் குடித்து பூனைகள் வளர்ந்து, எலிகளைத் துரத்திப் பிடித்து அவற்றை அழித்துக் கொண்டிருந்தன. ஆனால், மக்கள் எலும்பும் தோலுமாக வாழ்ந்தனர்.

தெனாலிராமனோ பசுவின் பாலைக் கறந்து, தானும் தன் மனைவி மக்களும் குடித்து மகிழ்ந்து, பூனையைப் பட்டினியாகப் போட்டான்.

சில மாதங்களுக்குப் பிறகு, அரசர் தாம் அளித்த பூனைகளைப் பார்வையிட எண்ணி, ஒரு குறிப்பிட்ட நாளில், அரண்மனை வளாகத்துக்குப் பூனைகளைக் கொண்டுவருமாறு உத்தரவிட்டார்.

அவ்வாறே ஒவ்வொருவரும் தாங்கள் வளர்த்த பூனைகளைக் கொண்டுவந்தனர். பூனைகள் எல்லாம் கொழு கொழு என்று வளர்ந்து இருந்தன. ஆனால், அதை வளர்த்தவர்களோ எலும்பும் தோலுமாகக் காணப் பட்டனர்.

அரசர் ஒவ்வொருவருடைய பூனையையும் பார்த்துக்கொண்டு வரும்போது, மெலிந்த பூனை ஒன்றைக் கண்டு, "இது யார் வளர்த்த பூனை?" என்று கேட்டார்.



அருகில் நின்றுகொண்டிருந்த தெனாலிராமன் "நான் வளர்த்த பூனை!" என்று கூறினான்.

அரசர் கோபமுற்று, உன்னுடைய பூனைக்குப் பால் கொடுக்காமல் ஏன் பட்டினியாகப் போட்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

"அரசே என் பூனை பாலைக் கண்டாலே குடிக்காமல் ஓட்டம் பிடிக்கிறது, அதற்கு நான் என்ன செய்வேன்?" என்றான் தெனாலிராமன்.

அதைக் கேட்ட அரசர் வியப்படைந்து, "பால் குடிக்காத பூனை எங்கேயாவது உண்டா? நீ கூறுவது உண்மையானால், உனக்கு நூறு பொன் பரிசு அளிப்பேன்" என்றார்.

பாலைக் கொண்டு வரச் செய்து, அந்தப் பூனையின் முன்னே வைக்கும்படி கட்டளையிட்டார் அரசர்.

பாலைக் கண்டதும் பூனை ஓட்டம் எடுத்தது.

காவலர்கள் அதைப் பிடித்துவந்து பார்த்தபோது, அதன் வாய் வெந்து புண்ணாகி இருப்பது தெரிந்தது.

"அடே சுயநலமி, பாலைச் சுடவைத்துப் பூனைக்கு வைத்தாயா? அதுதான் சூடு கண்ட பூனை பாலைக் கண்டதும் ஓட்டம் பிடிக்கிறது. அதன் வாய் வெந்து புண்ணாகி இருப்பதும் தெரிகிறது" என அரசர் கோபத்தோடு கூறினார்.

"மன்னர் பெருமானே! என்னை மன்னிப்பீர்களாக! பூனைகளுக்குப் பால் வார்த்து, வளர்ப்பதைக் காட்டிலும்,

RangaRakes

tamilnavarasam.com

குடிமக்களுக்குப் பாலும் உணவும் கிடைப்பதற்கு வழி செய்வதே அரசரின் கடமை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்" என்றான் தெனாலிராமன்.

தெனாலிராமனின் பரந்த மனப்பான்மையைப் பாராட்டி, வாக்களித்தபடி நூறு பொன் பரிசையும் அளித்தார் அரசர்.

உடனே பூனைகளை எல்லாம் காட்டிற்குள் ஓட்டி விடுமாறு கட்டளையிட்டார்.

## 7

## பேராசைக்குச் சூடு

அரசரின் தாயார் இறந்து, ஒரு ஆண்டு நிறைவு பெற மூன்று நாட்கள் இருந்தன. அப்பொழுது அரசரிடம் புரோகிதர் வந்து, திவசம் கொடுப்பதற்கு நினைவு படுத்தினார்.

அதற்கான ஏற்பாட்டை விரிவாகச் செய்யுமாறு அரசர் கட்டளையிட்டார்.

பிறகு அரச குருவை அழைத்து, "என் அன்னை மரணம் அடைவதற்கு முன் மாம்பழம் சாப்பிட ஆசைப்பட்டார். அதை வரவழைத்துக் கொடுப்பதற்கு முன் அவருடைய உயிர் பிரிந்து விட்டது. அவருடைய* ஆத்மா சாந்தி அடைய என்ன செய்யலாம்?" என்று ஆலோசனை கேட்டார்.



"அரசே! தங்கத்தால் மாம்பழம் செய்து. வெள்ளித் தட்டில் வைத்து, நூற்று எட்டு அந்தணர்களுக்கு, திவசத்தின் போது தானமாக வழங்கினால், தங்கள் அன்னையார் ஆத்மா சாந்தி அடையும்" என்றார் அரசகுரு.

அவ்வாறே செய்யுமாறு கட்டளையிட்டு, திவசத்தின்போது அது நிறைவேற்றப்பட்டது.

வெள்ளித்தட்டும், மாம்பழமும் பெற்றுக் கொண்ட அந்தணர்களுக்குக் கொண்டாட்டமாக இருந்தது.

அந்தணர்களின் பேராசையைக் கவனித்த தெனாலிராமன், இரண்டு நாட்களுக்குப் பிறகு "என் தாயாருக்குத் திவசம், நூற்று எட்டு அந்தணர்கள் என் வீட்டுக்கு வந்து, நான் கொடுக்கும் பரிசைப் பெற்றுச் செல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

அந்தணர்கள் தெனாலிராமன் வீட்டுக்குச் சென்றனர்.

அவர்களை ஒரு அறையில் இருக்கும்படி சொன்னான்.

தன் மனைவியிடம் சொல்லி, சூட்டுக்கோலை அடுப்பில் காய வைக்கும்படி செய்திருந்தான்.

அந்தணர்களை ஒவ்வொருவராக அறையிலிருந்து வெளியே வருமாறு சொல்லி, தெனாலிராமன் வாசற் படியில் நின்று கொண்டு, சூட்டுக்கோலை எடுத்துவரச்

RangaRakes
tamilnavarasam.com

செய்து. ஒவ்வொருவர் கையிலும் சூடு போட்டு அனுப்பினான்.

சூடு பெற்ற அந்தணர்கள் கதறிக்கொண்டு அரசரிடம் ஓடி, தங்களுக்கு உண்டான வேதனையைத் தெரிவித்தனர்.

அரசர் மிகுந்த கோபத்தோடு, தெனாலிராமனை அழைத்து வரச் செய்து, "அந்தணர்களுக்குச் சூடு போட்டது பெரிய குற்றம் அல்லவா?" என்று கேட்டார்.

"அரசே! என் தாயார் ஆத்மா சாந்தி அடைய அவ்வாறு செய்தேன். நான் குற்றம் ஏதும் செய்யவில்லை. தங்கள் தாயார் ஆத்மா சாந்தி அடைய, தாங்கள் தங்க மாம்பழங்களை வழங்கிச் சாந்தி செய்தீர்கள் அல்லவா?" என்றான்.

"தானம் வழங்குவதா, சூடு போடுவதா? " என்று மிகவும் கோபத்தோடு கேட்டார் அரசர்.

"அரசே! என் தாயாருக்கு வலிப்பு வந்து துன்புற்றார். அப்பொழுது சூட்டுக் கோலால் சூடு போட்டால், வலிப்பு நோய் குணமாகும் என்று சிலர் கூறினார்கள். நான் போய் சூட்டுக்கோலைக் கொண்டு வருவதற்குள் என் தாயார் உயிர் பிரிந்து விட்டது. அதற்கு என்ன பரிகாரம் என்று கேட்டேன். நூற்று எட்டு அந்தணர்களுக்கு, திவசத்தின் போது சூடு போட்டால் என் தாயின் ஆத்மா சாந்தி அடையும் என்று கூறினார்கள். ஆகையால் அவ்வாறு செய்தேன்" என்று பணிவோடு கூறினான் தெனாலிராமன்.



அந்தணர்களின் பேராசையையும், தம்முடைய அறியாமையையும் உணர்ந்ததோடு தெனாலிராமனின் பகுத்தறிவையும் அரசர் மிகவும் பாராட்டினார்.

## 8

# குதிரையும் பூனையும் விற்பனை

**தெ**னாலிராமனுக்கு எதிர்பாராமல் காய்ச்சல் ஏற்பட்டது. ஒரு வாரம் ஆயிற்று. மருந்து சாப்பிட்டும் குணமாகவில்லை. அவனுடைய மனைவி மிகவும் கவலைப்பட்டாள்.

புரோகிதரிடம் சென்று தன் கணவனின் நிலையைக் கூறி, ஏதாவது சாந்தி செய்து குணம் அடையச் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள்.

தெனாலிராமனிடம் சூடு பட்டவர்களில் புரோகிதரும் ஒருவர். ஆகையால், வஞ்சம் தீர்த்துக் கொள்ள சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

"உன் கணவன் அந்தணர்களுக்குச் சூடு போட்டது மகா பாவம். அந்தத் தோஷம் காரணமாகவே அவனுக்கு காய்ச்சல் ஏற்பட்டிருக்கிறது. மருந்துகளால் அந்தக் காய்ச்சல் தீராது. தோஷ பரிகாரம் செய்ய வேண்டும். அதற்கு நூறு பவுன் செலவாகும்" என்றார் புரோகிதர்.

RangaRakes tamilnavarasam.com

"எங்களிடம் இப்பொழுது நூறு பவுன் இல்லை. எங்களிடம் ஒரு குதிரை இருக்கிறது. அவர் குணமானதும் அந்தக் குதிரையை விற்கச் செய்து உங்களுக்குச் சேர வேண்டியதைத் தருகிறேன். இப்பொழுது நீங்கள் கருணை கூர்ந்து தோஷ பரிகாரம் செய்து என் கணவரைக் குணப்படுத்த வேண்டும்" என்று மன்றாடினாள்

"நீ ரொம்பவும் கேட்டுக் கொள்வதால், நான் பரிகாரம் செய்கிறேன். ஆனால், அந்தக் குதிரையை என்ன விலைக்கு விற்றாலும், அந்தத் தொகையை, அப்படியே என்னிடம் தந்துவிட வேண்டும். சரியா?" என்று புரோகிதர் பேராசையோடு கேட்டார்.

தெனாலிராமன் மனைவி அதற்குச் சம்மதித்தாள்.

புரோகிதர் தோஷ பரிகாரம் செய்தார்.

அதன் பலனோ அல்லது இயற்கையின் விளைவோ தெனாலிராமன் காய்ச்சல் குணமாகி எழுந்துவிட்டான்.

ஒரு வாரத்திற்குப் பிறகு புரோகிதர் வந்து, "குதிரையை விற்று விட்டாயா? என்ன விலைக்கு விற்றாய்? எனக்குச் சேரவேண்டியதைக் கொடு" என்று கேட்டார்.

"இன்னும் விற்கவில்லை; தருகிறேன்; என்று சமாதானம் சொன்னான் தெனாலிராமன்.

தான் நோயால் படுத்திருந்தபோது, மனைவி செய்த முட்டாள்தனத்துக்கு வருத்தப்பட்டு யோசிக்கலானான் தெனாலிராமன்.

RangaRakes



தினமும் புரோகிதர் வந்து நச்சரிக்கலானார்.

புரோகிதர் தொந்தரவு பொறுக்காமல் குதிரையை விற்கப் புறப்பட்டான் தெனாலிராமன். கூடவே வீட்டிலிருந்த ஒரு பூனையையும் கொண்டு சென்றான்.

குதிரையோ கொழு கொழு என்று இருந்தது. அது அராபியக் குதிரை.

நூறு பவுனுக்கு மேல் விலை போகும். அந்தத் தொகை பூராவும் தனக்கே சேரும் என்ற எண்ணம் புரோகிதருடைய பேராசையைத் தூண்டியது.

"அவசரப்பட்டு விற்று விடாதே! பூனையையும் எதற்குக் கொண்டு வருகிறாய்?" என்றார் புரோகிதர்.

"உமக்குக் குதிரை விற்ற பணம் கிடைக்கும். பூனையைப் பற்றி உமக்கு ஏன் கவலை?" என்றான் தெனாலிராமன்.

சந்தையில், குதிரையை விலை கூறினான், என்ன விலை என்று கேட்டனர்.

"என்னுடைய பூனையின் விலை இரு நூறு பவுன். குதிரையின் விலை ஒரு காசு. இரண்டையும் சேர்த்தே விற்பேன்" என்றான்.

தெனாலிராமனுடைய பேரம் விசித்திரமாயிருந்தது.

"பூனைக்கு இரு நூறு பவுன் கொடுக்க முடியுமா?"

tamilnavarasam.com

என்று கேட்டுவிட்டுப் பலர் போய் விட்டனர்.

சிலர் இந்தப் பேரம் புரியாமல் திகைத்துக் கொண்டிருந்தனர்.

புரோகிதர் உள்ளூர மகிழ்ச்சியோடு இருந்தார்.

துணிந்து ஒருவன் வந்து இரு நூறு பவுனும் ஒரு காசும் தெனாலிராமனிடம் கொடுத்து பூனையையும் குதிரையையும் வாங்கிக்கொண்டு சென்றான்.

தெனாலிராமன், இரு நூறு பவுனை எடுத்துத் தன் மடியில் வைத்துக்கொண்டு, ஒரு காசை எடுத்து, புரோகிதரிடம், 'இதோ குதிரை விற்ற காசு' என்று சொல்லிக் கொடுத்தான்.

புரோகிதர் அதிர்ச்சி அடைந்தார்.

தெனாலிராமனின் தந்திரத்தை அறிந்து எல்லோரும் புகழ்ந்தனர்.

புரோகிதரோ ஏமாற்றத்தோடு வீட்டுக்குச் சென்றார்.

## 9

## அரசகுருபட்டபாடு

தெனாலிராமன் ஒரு சமயம் காலை வேளையில் நடந்து போய்க் கொண்டிருந்தான். ஏதோ சிந்தனையில், விஜயநகரத்தை ஒட்டியுள்ள ஆற்றங்கரையை அடைந்தான்.



சுற்றும் முற்றும் பார்த்தான். ஒரு மரத்தின் கிளையில் உடைகள் தொங்கிக் கொண்டிருந்தன. ஆற்றை நோக்கினான். அரச குரு தாத்தாச்சாரியார் உடை எதுவும் இல்லாமல், ஆனந்தமாக குளித்துக் கொண்டிருந்தார்.

கன்னிப் பெண்கள் நீராடும் பகுதியாகும் அது! அரச குரு தெனாலிராமனைக் கவனிக்கவில்லை.

அரச குருவின் உடைகளை எடுத்துச் சுருட்டிக் கொண்டு "குருதேவரே! வணக்கம்!" என்று கூறிவிட்டு நகர்ந்தான்.

அப்பொழுதுதான் அரச குரு தன் நிலையை உணர்ந்தார். எனினும், கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல், "இராமா! என்னிடமா விளையாட்டு? என் உடைகளைக் கீழே வை!" என்று அதிகார தோரணையில் கூறினார்.

"மக்களுக்கு அறிவு போதிக்க வேண்டிய அரச குருவாகிய தாங்கள் கன்னியர்கள் நீராடும் பகுதியில் நிர்வாணமாக நீராடிக் கொண்டிருக்கலாமா? அரச சபையில் இதைப் பற்றி விவாதிப்போம். அங்கே வாருங்கள்!" என்றான் தெனாலிராமன்.

அரச குருவுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

"இராமா! உனக்கு என்ன வேண்டும்? கேள். தருகிறேன். இதை எவரிடமும் சொல்லாதே! என் உடைகளைக் கொடு!" என்று அழாத குறையாக அவனிடம் கெஞ்சினார்.

RangaRakes

tamilnavarasam.com

"உம்மிடமிருந்து நான் எதையும் விரும்பவில்லை. உம்முடைய கர்வத்தை அடக்கி, பழி வாங்குவதே என் நோக்கம்" என்றான்.

பணிவான குரலில், மீண்டும் அவனிடம் வேண்டினார்.

"ஒரு நிபந்தனை! உடைகளை அணிந்து கொண்டு உம்முடைய தோளில் என்னைச் சுமந்து கொண்டு ராஜவீதி வழியாகச் செல்ல வேண்டும். இல்லாவிட்டால் உம்முடைய செயலை எங்கும் பறைசாற்றுவேன்" என்றான் தெனாலிராமன்.

வேறு வழியின்றி, அரச குரு அதற்குச் சம்மதித்தார்.

அதிகாலையில், அரசர் மாளிகையின் முற்றத்தில் உலாவிக் கொண்டிருந்தார்.

ஒருவனை மற்றொருவன் சுமந்து செல்வதைப் பார்த்தார் அரசர், "என்ன அறிவீனம்! மனிதனை மனிதன் சுமப்பதா?" என்று கூறி, காவலரை அழைத்து, சுமப்பவனை விட்டுவிட்டு, தோளில் உட்கார்ந்து இருப்பவனை நையப்புடைத்து இங்கே இழுத்து வாருங்கள்" என்றார்.

அரசரின் பார்வை பட்டுவிட்டதை உணர்ந்த தெனாலிராமன், திடீரென கீழே குதித்து, "அரச குருவே! என் குற்றத்தை மன்னித்து விடுங்கள். உங்களுக்கு வேதனை அளித்து விட்டேன். அந்தப் பாவத்தைப் போக்க, தாங்கள்



என் தோள்மீது அமர்ந்துகொள்ள வேண்டும்" என்று கூறி அவரை தன் தோளில் அமருமாறு வற்புறுத்தினான்.

"தெனாலிராமனுக்கு இப்பொழுதுதான் புத்தி வந்தது போலும்" என்று எண்ணி அகம்பாவத்தோடு அவன் தோளில் அமர்ந்தார்.

சிறிது தூரம் சென்றதும், காவலர்கள் அரசரின் உத்தரவுப்படி தோளில் அமர்ந்திருந்த அரச குருவை அடித்து, நையப்புடைத்து அரசர் முன் இழுத்துச் சென்றனர்.

"அரசே! தெனாலிராமன் என்னை ஏமாற்றி விட்டான். வழியில், மயக்கமுற்று, பேச்சு மூச்சின்றிக் கிடந்தான். தண்ணீர் தெளித்து மயக்கம் தெளியச் செய்தேன். 'என்னால், நடக்க முடியவில்லை; சாகப் போகிறேன்' என்றான். நான் இரக்கப்பட்டு, என் தோளில் சுமந்து வந்தேன். அரண்மனைக்கு அருகில் வந்ததும், வேகமாகக் குதித்து, வலிய தன் தோளில் என்னை ஏற்றிக் கொண்டான்" என்று பொய்யும் மெய்யும் கலந்து கூறினார்.

தெனாலிராமன் ஏதோ தந்திரம் செய்து, அரச குருவை ஏமாற்றி, அடிபடும்படி செய்திருக்கிறான் என்பதை உணர்ந்து கொண்டார் அரசர்.

தான் எண்ணியபடி, அரச குருவை பழி வாங்கிவிட்டான் தெனாலிராமன்.

மற்றொரு சமயத்தில் தெனாலிராமனிடம் அரச குருவுக்கும் அவனுக்கும் ஏற்பட்ட சச்சரவு என்ன என்பதை [illegible] ந்துகொண்டார் அரசர்.

RangaRakes
tamilnavarasam.com

ஆயினும், அரச குரு வயதானவர், நீண்ட நாட்களாக இருப்பவர் என்பதால், அவரை நீக்கிவிடாமல் அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும் என்று தம் பெருந்தன்மையைக் காட்டினார் அரசர்.

## 10

## கூன் நிமிர்ந்த கதை

**நா**கதாளி என்னும் ஒரு மூலிகையைக் கொண்டு அதோடு மயக்கம் உண்டாக்கக்கூடிய சில பொருள்களையும் சேர்த்து மருந்து ஒன்றைத் தயாரித்துக் கொண்டு போலித் துறவி ஒருவன் விஜயநகர எல்லைப் பகுதியில் சுற்றித் திரிந்தான்.

அது தொழிலாளர்கள் வசிக்கக் கூடிய பகுதியாகும். அங்கே அப்பாவியான ஒரு சலவைத் தொழிலாளியை நண்பனாக்கிக் கொண்டான் போலித் துறவி.

சலவைத் தொழிலாளியின் உதவியால், அந்தப் பகுதியில் இருக்கும் மூடர்களை அறிந்து, அவர்களின் வீட்டுக்குச் சென்று, அவர்களுடைய நோய்களை அறிந்து கொண்டான் போலித் துறவி.

தெய்விக சக்தி வாய்ந்த மருந்து தன்னிடம் இருப்பதாகக் கூறி, பலருக்குக் கொடுத்து, நிறையப் பணம் சம்பாதித்தான் போலித் துறவி.



ஆனால், அவனிடம் மருந்து வாங்கிச் சாப்பிட்டவர்கள் சிலர் உயிர் இழந்தார்கள். மற்றும் சிலருக்கு பைத்தியம் பிடித்து விட்டது. அவர்கள் தெருவில் அலைந்தார்கள்.

அந்தத் துன்ப நிகழ்ச்சிகளைக் கேள்வியுற்றான் தெனாலிராமன். அந்தப் பகுதிக்குப் போய்ப் பார்த்து, சோக நிகழ்ச்சிகளைக் கேட்டு, வருந்திச் சிந்திக்கலானான்.

சமூகத் துரோகியான அந்தப் போலித் துறவி அவனுடைய மருந்தின் மூலம் மக்களைச் சாகடிக்காமலும், பைத்தியம் பிடிக்கச் செய்யாமலும் பாதுகாக்க அவனைச் சந்தித்தான் தெனாலிராமன்.

"என் உறவினர் ஒருவருக்கு ஒரு நோய் இருக்கிறது. அது என்ன நோய் என்று என்னால் அறிய முடியவில்லை. நீங்கள் வந்து அறிந்து குணப்படுத்த இயலுமா?" என்று கேட்டான் துறவியிடம்.

"அது சிக்கலான நோயாக இருக்கும். நான் அறிந்து, அதை என்னுடைய சிறந்த மருந்தினால் குணப்படுத்தி விடுவேன்" என்று தெனாலிராமனிடம் சொன்னான் போலித் துறவி.

இதுவே சரியான சந்தர்ப்பம் என்று, துறவியின் மருந்து சாப்பிட்டுப் பைத்தியமாக அலைந்து திரிந்த ஒருவரிடம் துறவியை அழைத்துச் சென்றான் தெனாலிராமன்.

துறவியை அடையாளம் கண்டு கொண்ட பைத்தியக் காரன் வெறி கொண்டு அவனுடைய முடியை இழுக்க

RangaRakes tamilnavarasam.com

பிடித்து இழுத்துத் தரையில் மோதி அடித்தான். துறவியோ அந்த இடத்திலேயே மூளை சிதறிச் செத்தான்.

தெனாலிராமன் நிம்மதி அடைந்தான். எனினும், துறவியின் கொலைக்குக் காரணமாக இருந்ததற்காக தெனாலிராமனை காவலர்கள் அரசரிடம் கொண்டு போய் நிறுத்தி, விவரத்தைக் கூறினார்கள்.

விசாரணை தொடங்கியது. "ஒருவன் எத்தகைய கொடிய குற்றம் செய்த போதிலும், அரசரிடமே அதை முறையிட வேண்டும். அதற்கு அரசரே தீர்ப்பு அளிப்பார். பொது மக்கள், தாங்களே தண்டனை வழங்கவோ, தீர்ப்பு அளிக்கவோ முற்பட்டுவிடக் கூடாது. அப்படிச் செய்தால் நீதி வழுவிவிடும். ஆகையால், துறவியைக் கொலை புரியக் காரணமாயிருந்த தெனாலிராமனை கழுத்தளவு புதைத்து, யானையின் காலால் அவன் தலையை இடறச் செய்ய வேண்டும்" என்று அரசரிடம் கூறினார் அரச குரு. தெனாலிராமனை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும் என்பதுதானே அவருடைய குறிக்கோள்.

அரச குரு கூறியபடி, செய்யுமாறு அரசரும் உத்தரவிட்டார்.

தெனாலிராமன் கூறிய சமாதானம் எடுபடவில்லை.

காவலர்கள் தெனாலிராமனைப் பிடித்துக் கொண்டு நகரத்தின் எல்லையில் இருந்த பொட்டலில் - மண் தரையில் கழுத்து அளவு குழி தோண்டி, தெனாலிராமனை அந்தக் குழியில் இறக்கி, தலை நீங்கலாக கழுத்தளவு



அவனைப் புதைத்துவிட்டு, யானையைக் கொண்டு வரச் சென்றனர்.

அப்பொழுது, முன்பு போலித் துறவிக்கு நண்பனாக இருந்த சலவைத் தொழிலாளி, அழுக்குத் துணிகளைக் கழுதை மீது ஏற்றிக் கொண்டு அந்த வழியாக வந்து கொண்டிருந்தான். அவனோ ஒரு கூனன்! தெனாலிராமன் அவனைக் கண்டதும் கூவி அழைத்தான். அவன் வந்து, "என்ன விஷயம்?" என்று விசாரித்தான்.

"உன்னைப் போல் நான் ஒரு கூனன். என்னுடைய கூனை நிமிர்த்துவதற்காக, இப்படிக் குழியில் இருக்க வேண்டும் என்று ஒரு சித்தர் கூறினார். நான் வெளியே வந்து என் கூன் நிமிர்ந்து விட்டதைப் பார்க்க வேண்டும். ஆகவே தயை கூர்ந்து என்னை வெளியே எடுத்துவிடு" என்று கேட்டுக் கொண்டான் தெனாலிராமன்.

அவன் கூற்றை நம்பிய சலவைத் தொழிலாளியாகிய கூனன் மண்ணைத் தோண்டி அவனை வெளியே தூக்கிவிட்டான்.

வெளியே வந்த தெனாலிராமன் தன் கூன் முதுகு நிமிர்ந்து விட்டதைப் போல, நிமிர்ந்து நடந்து மகிழ்ச்சி கொள்வதைப் போல் நடித்தான்.

சலவைத் தொழிலாளி கூனனுக்கு ஆசை மேலிட்டு, "என் கூன் முதுகைக் கண்டு என் மனைவி என்னிடம் பிரியம் இல்லாமல், அலட்சியம் செய்கிறாள். தயவுசெய்து

RangaRakes

tamilnavarasam.com

அந்தக் குழியில் என்னை இறக்கி வைத்துவிட்டு, கழுதையைக் கொண்டுபோய் என் வீட்டில் விட்டுவிட வேண்டும்" என்று மிகவும் தயவுடன் கேட்டுக் கொண்டான்.

தெனாலிராமன், சலவைத் தொழிலாளி ஆசைப்படி அவனைக் குழியில் இறக்கிவிட்டு, கழுதையை ஓட்டிக்கொண்டு சென்றான்.

சிறிது நேரத்தில் யானையுடன் வந்த காவலர்கள், குழியில் இருப்பது யார் என்றே பாராமல், யானையைக் கொண்டு தலையை இடறும்படி செய்தார்கள்.

சலவைத் தொழிலாளி கூனை மாண்டு விட்டான்!

காவலர்கள் அரசர் கட்டளைப்படி, தெனாலிராமனைக் கழுத்தளவு குழியில் இறக்கி விட்டு, யானையைக் கொண்டு தலையை இடறச் செய்து விட்டோம் என்று தெரிவித்தனர்.

செய்தியைக் கேட்டதும் அரசருக்கு வருத்தம் உண்டாயிற்று.

'அரச குருவின் ஆலோசனையைக் கேட்டு, தெனாலிராமனுக்கு மரண தண்டனை அளித்திருக்க வேண்டியதில்லை. புத்திசாலியான தெனாலிராமனை இழப்பது நாட்டுக்குப் பெரிய இழப்பு' என்று எண்ணி கவலைப்பட்டார் அரசர்.



சிறிது நேரத்தில் தெனாலிராமன் அரசர் முன் வந்து வணங்கினான்.

அரசர் வியப்படைந்தார். தெனாலிராமன் நடந்ததை விவரமாகக் கூறினான். மேலும், தக்க சமயத்தில் அங்கே வந்து, தனக்கு உதவி செய்து, அதனால் உயிர் இழந்த சலவைத் தொழிலாளியின் மனைவிக்கு மாதந்தோறும் அரண்மனையிலிருந்து பணம் கொடுக்குமாறு அரசரிடம் வேண்டிக் கொண்டான்.

# 11

## கடன் தீர்ந்து விட்டது

**அ**வசரத் தேவைக்காக ஒரு சமயம் அரசரிடம் கொஞ்சம் கடன் வாங்கியிருந்தான் தெனாலிராமன்.

ஆனால், அந்தத் தொகையைத் திருப்பிக் கொடுக்க வழி இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தான். ஆனாலும் ஒரு தந்திரம் செய்தான்.

தெனாலிராமனிடம் கடனை வசூலிக்க அரசரே அவன் வீட்டுக்கு நேரில் வந்தார்.

அங்கே வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த தெனாலிராமனின் மனைவி, "மன்னர் பிரானே! கடன் கவலை தாளாமல், என் கணவர் கவலையோடு படுத்த படுக்கையாகக் கிடக்கிறார். கடன் தீர்ந்து விட்டது என்று அவர் காது குளிர, தாங்கள் சொன்னால்தான் அவருடைய ஆத்மா சாந்தி அடையும்" என்று கவலையோடு கூறினாள்.

RangaRakes
tamilnavarasam.com

அதைக் கேட்டதும் அரசர் மனம் வருந்தி, "இராமா! நீ எனக்குத் தர வேண்டிய கடன் தீர்ந்து விட்டது. நீ சாகும்போது கவலைப்பட வேண்டாம்" என்று உரக்கக் கூறினார்.

அவ்வளவுதான்! அரசருடைய அந்த இனிப்பான செய்தி காதில் விழுந்ததும், படுக்கையிலிருந்து திடீரென எழுந்து, அரசர் முன் வந்து வணங்கி, "அரசர் பெருமானே! தங்கள் கடன் சுமை தாங்காமல் நான் சாகக்கிடந்தேன். இப்பொழுது தாங்கள் அந்தச் சுமையை நீக்கிவிட்டதால் நான் பிழைத்து எழுந்து விட்டேன்" என்று கூறிச் சிரித்தான்.

அவனுடைய தந்திரமான நகைச்சுவையை அரசர் மிகவும் ரசித்தார்.

## 12

## அரைப் பணத்துக்குப் போதும்!

அரச சபையில் இருப்போர் பலருக்கு தெனாலிராமனிடம் வெறுப்பும், பொறாமையும் உண்டு. அவனுடைய குறும்புத்தனமான பேச்சும், நகைச்சுவையும், புத்திசாலித்தனமுமே அதற்குக் காரணம்.

வைஷ்ணவ ஆச்சாரியார் ஒருவர் அரச சபையில் இருந்தார். தெனாலிராமனை வைஷ்ணவனாக



ஆக்கிவிட்டால், அவன் மரியாதையோடு நடந்து கொள்வான் என்று நினைத்தார் ஆச்சாரியர். ஒரு நாள் தம் கருத்தைத் தெனாலிராமனிடம் தெரிவித்தார் ஆச்சாரியார். மேலும், "நீ வைஷ்ணவன் ஆக மாறிவிடு, உனக்கு வேண்டியதை எல்லாம் அரசரிடம் கூறி நான் வாங்கித் தருகிறேன்" என்று வாக்களித்தான்.

அவருடைய எண்ணத்தைப் புரிந்துகொண்ட தெனாலிராமன், அதற்கு இணங்குவதாகக் கூறி, "ஆச்சாரியார் அவர்களே! நான் வைஷ்ணவன் ஆவதற்கு முன்பாக எனக்கு ஆயிரம் வராகன்கள் தேவைப் படுகின்றது. அதை அரசரிடமிருந்து வாங்கிக்கொடுங்கள்" என்று கேட்டான்.

ஆச்சாரியாரும் அவ்வாறே அரசரிடமிருந்து ஆயிரம் வராகன்கள் வாங்கிக்கொடுத்தார்.

தெனாலிராமன் மிகுந்த மகிழ்ச்சியோடு, ஆச்சாரி யார் அவர்களே! நான் வைஷ்ணவனாகும் சடங்கு நாளில் 'பந்தி போஜனம்' முதலான சகல செலவுகளையும் நீங்களே செய்ய வேண்டும். குருதட்சணையாக நான் ஒரு பணம் மட்டும் தருவேன்" என்றான்.

அதற்கும் ஆச்சாரியார் சம்மதித்தார். சடங்குக்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டார்.

தெனாலிராமன் வைஷ்ணவன் ஆகும் நாளில் குருவானவர் சடங்குகளை எல்லாம் நடத்தி, சக்கராந்தம் செய்வதற்கு, அக்கினியில் போட்டிருந்ததை எடுத்துத் தெனாலிராமனின் தோள்பட்டையில் வைத்தார். உடனே

RangaRakes
tamilnavarasam.com

வலி தாங்க முடியாதவனைப் போல் நடித்து, "ஆச்சாரியாரே! அரைப் பணத்துக்குப் போதும்!" என்று கூறிக் கொண்டே ஓடத் தொடங்கினான்.

கூடியிருந்தவர்களுக்கெல்லாம் சிரிப்பை அடக்க முடியவில்லை.

ஆச்சாரியாருக்கோ ஏமாற்றம்!

தெனாலிராமனுக்கு ஆயிரம் வராகன்கள் லாபம்!

**13**

## வாய் உள்ள பிள்ளை பிழைக்கும்

அரண்மனைப் பூந்தோட்டத்தில், வித விதமான செடிகளும், மரங்களும், கொடிகளும் பசுமையாகக் காட்சி அளிக்கும். பூத்துக் குலுங்கும் மலர்களோ கண்கொள்ளாக் காட்சியாகும்.

தெனாலிராமனின் மகன் சிறுவன் ஒருநாள் காவலருக்குத் தெரியாமல் பூந்தோட்டத்திற்குள் புகுந்து விட்டான். அழகான ரோஜா மலர்களைப் பார்த்தான். ஆசையோடு சில மலர்களைப் பறித்து எடுத்து வந்து தன் தாயாரிடம் கொடுத்தான். தாயார் மகிழ்ச்சி அடைந்தாள். தினமும் பூந்தோட்டத்திற்குச் செல்வதும், பூக்களைப் பறித்து எடுத்து வருவதும், வழக்கமாகக் கொண்டான்.



ஒரு நாள் சிறுவனைக் கையும் களவுமாகக் காவலாளிகள் சிலர் பிடித்து அங்கே அடைத்து வைத்தனர்.

மகனைக் காணாமல் தேடிக்கொண்டு வந்த தெனாலிராமனிடம், எதிரில் வந்த பூந்தோட்டக் காவலாளிகள், "உம்முடைய மகன் ரோஜாப் பூக்களைத் திருடி, மடியில் கட்டிவைத்திருக்கிறான். அவனைத் தோட்டத்தினுள் அடைத்து வைத்திருக்கிறோம். சிறிது நேரத்தில், அரச சபைக்குக் கொண்டு சென்று அரசரால் விசாரிக்கப்பட்டுத் தண்டனை பெறுவான்" என்றனர்.

தெனாலிராமன், தோட்டத்திலுள்ள அறையை எட்டிப்பார்த்தான். மகன் பயத்தோடு நின்று கொண்டிருந்தான்.

"காவலாளிகளே என் மகன் வாயுள்ள பிள்ளையானால் பிழைத்துக்கொள்வான் நீங்கள் நினைப்பது போல். ரோஜாமலர்களைத் திருட வந்திருக்கமாட்டான். தன் தாய்க்காக மருந்துச் செடிகளைப் பறித்து மடியில் கட்டிக்கொண்டிருப்பான்" என்று உரத்த குரலில் மகன் காதில் கேட்கும்படியாகக் கூறினான் தெனாலிராமன்.

தெனாலிராமன் மகன் அல்லவா! தந்தை கூறியவை காதில் விழுந்ததும், மடியில் இருந்த ரோஜாமலர்களை எல்லாம் மென்றுதின்று விட்டான். அப்பொழுது கைக்கு அகப்பட்ட சில கொடிகளைப் பறித்து மடியில் கட்டிக்கொண்டான்.

RangaRakes
tamilnavarasam.com

அரசர் முன் கொண்டுவந்து சிறுவன் நிறுத்தப் பட்டான்.

'தெனாலிராமனின் தந்திரம் இதில் பலிக்காது, இது அவனுக்கு அவமானம் அல்லவா!' என்று பலரும் கிசுகிசுத்தனர்.

"சிறுவனே! ரோஜா மலர்களைப் பறித்து, மடியில் வைத்திருக்கிறாயா?" என்று கேட்டார் அரசர்.

"ராஜாவே, என் தாய்க்கு ஒரு மூலிகைச் செடியைத் தேடிப் போனேன். காவலாளிகள் தூங்கிக் கொண்டிருந்தனர். மூலிகையைப் பறித்து மடியில் வைத்திருக்கிறேன். ரோஜா மலர்களை நான் பறிக்கவே இல்லை," என்று கூறி, மடியை அவிழ்த்தான். மூலிகைச் செடியே இருந்தது. ரோஜா மலர்களே இல்லை.

சபையோர் வியப்படைந்தனர்.

காவலாளிகள் திடுக்கிட்டனர்.

தெனாலிராமன் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அரசர் கோபம் அடைந்து, காவலாளி தூங்கியதற்கும், சிறுவன் மீது பொய்க் குற்றம் சாட்டியதற்கும் தண்டனை வழங்கினார்.

வாயுள்ள தன் மகனை தெனாலிராமன் கட்டித் தழுவிக் கொண்டான்.

RangaRakes



# 14

## பேராசைக்காரர்கள்

"**நா**ட்டுக்கு முக்கியமானவர்கள் யார்?" என்பதைப் பற்றி அரசர் ஒரு நூல் எழுதிக் கொண்டு இருந்தார்.

அப்பொழுது அவருக்கு ஒரு சந்தேகம் எழுந்தது.

சபையைக் கூட்டி அதில் விவாதித்துத் தெரிந்து கொள்ள விரும்பினார்.

அரச சபை கூடியது!

'ஒரு நாட்டின் சிறப்புக்கும் செழிப்புக்கும் மிக முக்கியமானவர்கள் யார்?' என்ற கேள்வியை அரசர் எழுப்பினார்.

'அரசனே முக்கியமானவன்!' என்று கூறினர் இராஜ விசுவாசிகள்.

'அமைச்சர்களே முக்கியமானவர்கள்!' என்று கூறினார் அமைச்சர்களில் ஒருவர்.

'நாட்டு மக்களே முக்கியமானவர்கள்!' என்றார் இளவரசி.

'பரிசுத்தமான அந்தணர்களே முக்கியமானவர்கள்' என்றார் அரச குரு தாத்தாச்சாரியார்.

தெனாலிராமன் எழுந்து, "இளவரசியார் கூறியது போல் பொதுமக்களே முக்கியமானவர்கள். அரச குரு

tamilnavarasam.com

கூறுவது தவறு. அந்தணர்கள் போஜனப் பிரியர்கள். அவர்களில் பெரும்பான்மையோர் பொன், பொருள், நிலம் முதலிய தானங்களுக்கு ஆசைப்பட்டுத் தங்களுடைய பரிசுத்தத்தையும் ஒழுக்கத்தையும் கைவிடத் தயங்கமாட்டார்கள்" என்றான் தெனாலிராமன்.

"நீ கூறியதை நிரூபிக்க முடியுமா?" என்று கோபத்தோடு கேட்டார் அரச குரு.

"நாளையே நான் நிரூபிக்கிறேன் இல்லையானால், அந்தணர்களை அவமதித்த குற்றத்திற்கு நான் ஆளாகிறேன்" என்றான் தெனாலிராமன்.

சபை கலைந்தது.

முன்பு ஒரு சமயம், கோவில் தெருவிலுள்ள அந்தணர்கள் சிலர் தெனாலிராமனை அவமானப் படுத்திவிட்டனர். அவர்களை இப்பொழுது பதிலுக்கு அவமானப்படுத்த ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது என்று நினைத்தான்.

மறுநாள் அந்த அந்தணர்கள் காலைக் கடன்களை முடிப்பதற்கு ஆற்றங்கரைக்குச் சென்று, மலம், ஜலம் கழித்துக் கொண்டிருந்தனர்.

தெனாலிராமன் வேகமாக அவர்களிடம் சென்று, "நம்முடைய அரசர் சூரிய உதயத்திற்குள் (இன்னும் சிறிது நேரத்தில்) பத்து அந்தணர்களுக்கு மானியம் அளிக்கத் தீர்மானித்திருக்கிறார். நீங்கள் பத்துப் பேரும் இப்பொழுதே அரசரிடம் ஓடி வாருங்கள். நேரம் தாழ்த்தினால் கிடைக்காது" என்று கூறி, அவசரப்படுத்தினான்.



அவர்களும் நிலத்திற்கு ஆசைப்பட்டு, பல் துலக்காமல், குளித்து, பூஜை முதலியன செய்யாமல், தண்ணீரைத் தலையில் தெளித்துக் கொண்டு பரிசுத்தமானதாகக் கருதி அரசரிடம் ஓடோடி வந்தனர்.

அரசரிடம், அந்தணர்கள் மானியம் பெற வந்திருக்கிறார்கள் என்பதை தெனாலிராமன் தெரிவித்தான்.

அந்தணர்களின் தோற்றத்தைக் கண்டதும் அரசர், "நீங்கள் எல்லோரும் பல் துலக்கி, குளித்து, பூஜை முடித்து, நெற்றிக்கு இட்டு வரவில்லை என்று உங்கள் தோற்றத்திலிருந்து தெரிகிறதே. எதற்காக இப்படி வந்தீர்கள்?" என்று கேட்டார்.

உடனே தெனாலிராமன், அவர்கள் வந்த நோக்கத்தை விளக்கி, "அரசே! இந்த அந்தணர்கள் பத்துப் பேரும் மானியம் [illegible] பெறும் ஆசையினால் பரிசுத்தத்தைக் கைவிட்டு வந்திருக்கிறார்கள். சாஸ்திர ரீதியாக தண்ணீரைத் தலையில் தெளித்துக் கொண்டு [illegible] [illegible] [illegible] [illegible] விட்டுத் [illegible] [illegible] [illegible] தவிர [illegible] [illegible] சிறப்புகளை [illegible] [illegible] நேற்று சபையில் [illegible] சபையில் [illegible] விட்டபடி இப்போது [illegible] [illegible]" என்றான்.

சபையில் சிரிப்பொலி எழுந்தது.

அரச குரு அவமானத்தால் தலை குனிந்தார்.

RangaRakes tamilnavarasam.com

பத்து அந்தணர்களும் தங்களுடைய மடமையை நொந்துகொண்டு திரும்பிச் சென்றனர்.

'இத்தகையவர்களுக்கா, இதற்கு முன் நில தானம் செய்து வந்திருக்கிறேன்' என்று வருந்தினார் அரசர்.

**15**

## பாத்திரங்கள் குட்டி போடும் அதிசயம்

**வ**ட்டிக் கடை வைத்திருக்கும் மார்வாரிகள் விஜயநகரத்தில் நிறைய இருந்தனர். அவர்களில் கிராத்சந்த் என்பவன் தடி வட்டி வாங்குபவன். கொஞ்சம் கூட இரக்கம் இல்லாதவன். ஆனால் அவன் நகரில் பிரபலமானவன்.

ஏழை விவசாயிகள், பால்காரர்கள், சிறு தொழில் செய்வோர் இப்படியாகப் பலர் கிராத்சந்திடம் வட்டிக்குக் கடன் வாங்குவார்கள்.

நூற்றுக்கு ஐம்பது வீதம் வட்டி வாங்கும் கல் நெஞ்சன் அவன். வட்டியைக் குறைத்துக் கொள்ளுமாறு எவ்வளவு கெஞ்சினாலும் குறைக்க மாட்டான். கொஞ்சம் கூட அசைய மாட்டான். 'உங்கள் ஆடு, மாடுகள் குட்டி போடுவது போல் என் பணமும் குட்டி போடும்' என்பான்.

தன் நெருங்கிய நண்பர் ஜக்கையா என்பவன் மூலம் தெனாலிராமன் இதைத் தெரிந்து, அதற்கு ஒரு திட்டம் தீட்டினான். ஜக்கையா அடிக்கடி கடன் வாங்குபவர்.



தெனாலிராமனின் திட்டப்படி, ஒரு நாள் ஜக்கையா கிராத்சந்திடம் சென்று, தன் வீட்டில் நடைபெற இருக்கின்ற மணவிழாவுக்காக, பன்னிரண்டு பெரிய பித்தளைப் பாத்திரங்களை பத்து நாட்களுக்கு இரவலாகத் தருமாறு கேட்டான். கிராத்சந்தும் கொடுத்தான்.

பத்து நாட்கள் கழித்து, அசலான பன்னிரண்டு பெரிய பித்தளைப் பாத்திரங்களுடன் சிறிய பித்தளைப் பாத்திரங்களையும் கொண்டு வந்து கிராத்சந்திடம் கொடுத்தான்.

"இந்தச் சிறிய பாத்திரங்கள் ஏது?" என்று கேட்டான் கிராத்சந்த். "ஐயா, தாங்கள் கொடுத்த பாத்திரங்கள் என் வீட்டில் இருந்தபோது குட்டி போட்டன. அவையே இவை" என்றான் ஜக்கையா.

அதைக் கேட்ட கிராத்சந்த், அவனுடைய ஏமாளித்தனத்தை கண்டு மனதிற்குள் சிரித்துக் கொண்டு சாமர்த்தியமாக, "ஆமாம், உன்னிடம் பெரிய பாத்திரங்களைக் கொடுக்கும்போது அவை கருவுற்றிருந்தன. அதை அப்போது சொல்ல மறந்துவிட்டேன். நீ மிகவும் நேர்மையானவன்" என்று அவனைப் புகழ்ந்தான். மேலும், "உனக்கு எப்பொழுது என்ன பொருள் வேண்டுமானாலும் என்னிடம் வந்து வாங்கிச் செல்லலாம்" என்று தாராளமாகக் கூறினான்.

ஒரு மாதத்திற்குப் பிறகு, தன் வீட்டில் நடக்கப் போகும் மற்றொரு விழாவுக்காக, கிராத்சந்திடம் ஜக்கையா வந்து பன்னிரண்டு தங்கப் பாத்திரங்களும், பன்னிரண்டு வெள்ளிப் பாத்திரங்களும் இரவல் கேட்டான்.

RangaRakes
tamilnavarasam.com

கிராத்சந்த் தடை சொல்லாமல் உடனே கொடுத்து, "இந்தப் பாத்திரங்கள் யாவும் இப்பொழுது கர்ப்பத்தோடு - பிரசவிக்கும் தருணத்தில் இருப்பதால், நீ திருப்பித் தரும்போது அதன் குட்டிகளுடன் - சிறு பாத்திரங்களுடன் தர வேண்டும்" என்று சொல்லி அனுப்பினான்.

ஜக்கையா பாத்திரங்களைக் கொண்டு வந்தான். ஆனால், குறிப்பிட்ட நாட்கள் கழிந்தன, பாத்திரங்களை திருப்பிக் கொண்டுபோய்க் கொடுக்கவில்லை.

ஜக்கையா வீட்டுக்குப் போய்க் கேட்டான் கிராத்சந்த்.

"ஐயா, உம்முடைய பாத்திரங்கள் யாவும் பிரசவத்தின் போது குட்டி போட்டவை அல்லவா? இறந்து [illegible] அதற்காக மிகவும் வருந்துகிறேன்" என்று [illegible] ஜக்கையா.

[illegible] கோபமும் கொண்ட கிராத்சந்த், ஜக்கையாவை இழுத்துக் கொண்டு அரசரிடம் சென்று, "ஜக்கையா கூறுவது அநியாயமல்லவா?" என்று முறையிட்டுக் கூறினான்.

அரசர் வழக்கை விசாரித்தார்.

அப்பொழுது [illegible] அங்கே சென்று, "மன்னா! [illegible] [illegible] போது பாத்திரங்கள் குட்டி [illegible] அதிசயமா? மேலும் கிராத்சந்த் [illegible] குட்டி போட்ட [illegible] பாத்திரங்களை முன்பு ஒரு முறை ஜக்கையாவிடமிருந்து



வாங்கிக் கொண்டது அதிசயம் இல்லையா? இப்பொழுது பிரசவத்தினால் தங்க - வெள்ளிப் பாத்திரங்கள் இறந்து விட்டன என்பது மட்டும் என்ன அதிசயம்?" என்று கேட்டான்.

கிராத்சந்தை அரசர் கேட்டார்: முன்பு, பித்தளைப் பாத்திரங்கள் குட்டி போட்டதுடன் ஜக்கையாவிடமிருந்து தான் வாங்கிக் கொண்டது உண்மையே என ஒப்புக் கொண்டான் அவன்.

"முன்பு குட்டிகளுடன் வாங்கியிருக்கும் போது, இப்பொழுது அவை இறந்து போனதில் என்ன அதிசயம்? அது நியாயமே!" என்று கூறி, உண்மையை அறிந்த அரசர், கிராத்சந்தின் பேராசையைக் கண்டித்து அனுப்பினார்.

சபையோரும், பொது மக்களும் தெனாலி ராமனுடைய தந்திரத்தை மிகவும் பாராட்டிப் புகழ்ந்தனர்.

## 16

# வீரச் செயல்

ஒரு சமயம் அரச சபையில், அரசர் முன்னிலையில், அண்மையில் நிகழ்ந்த போரில், தாங்கள் செய்த வீரதீரச் செயல்களைப் பெருமையாகக் கூறிக்கொண்டிருந்தனர் சில வீரர்கள்.

பொறுமையோடு அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த தெனாலிராமன் எழுந்து, "நீங்கள் செய்ததாகக் கூறும்

RangaRakes tamilnavarasam.com

செயல்கள் எல்லாம் நான் செய்த ஒரு செயலுக்கு இணையாகுமா?" என்றான்.

"நீ செய்த வீரச் செயல் என்ன?" என்று கேட்டார் அரசர்.

"போர்க்களத்தில், எதிரியின் சேனாதிபதியின் முன்னே துணிந்து சென்று அவனுடைய ஒரு காலை வெட்டி வீழ்த்தி விட்டேன்" என்று கூறினான் தெனாலிராமன்.

அதைக் கேட்ட அனைவரும் ஆச்சரியம் அடைந்து, "சேனாதிபதியின் தலையை வெட்டாமல், காலை ஏன் வெட்டினாய்?" என்று கேட்டனர்.

"சேனாதிபதியின் தலையை, எனக்கு முனனே எவனோ வெட்டிக் கொண்டு போய்விட்டான். கால் மிஞ்சி இருந்தது!" என்றான் தெனாலிராமன்.

சபையோர் விழுந்து விழுந்து சிரித்தனர்.

## 17

## எலியும் பூனையும்

**தெ**னாலிராமன் வீட்டில் எலிகள் தொல்லை அதிகரித்துக் கொண்டிருந்தது. அதற்காக ஒரு பூனையைக் கொண்டு வந்து வளர்த்தான்.

தெனாலிராமன் வீட்டுப் பூனை, பக்கத்து வீட்டுக்காரன் வளர்த்த கிளியைக் கொன்றுவிட்டது.



அந்தப் பூனையை விரட்டி விடுமாறு பக்கத்து வீட்டுக்காரன் தெனாலிராமனிடம் சொன்னான். அவன் மறுத்து விட்டான்.

பக்கத்து வீட்டுக்காரன் 'பூனை இல்லாமலேயே எலிகளைப் பிடிக்க முடியும்' என்று கூறி, அந்தப் பூனையைக் கொன்று விட்டான்.

மறுநாள் தெனாலிராமன், ஒரு கூடை நிறைய எலிகளை பக்கத்து வீட்டுக்கு அனுப்பி, "ஐயா! பூனையின் உதவி இல்லாமலேயே எலிகளைப் பிடிக்க முடியும் என்று நீர் கூறியதை நிரூபிப்பதற்காக, இக்கூடை நிறைய எலிகளை அனுப்பியிருக்கிறேன்" என்று கடிதம் எழுதி அனுப்பினான்.

பக்கத்து வீட்டுகாரனின் பட்டுத் துணிகளையும், புடவைகளையும் அந்த எலிகள் கடித்துப் பாழாக்கிவிட்டன.

அவற்றை அவன் விரட்டி, விரட்டி அடித்துக் கொல்லும்போது இரத்தினச் சமுக்காளம் முதலானவையும் கெட்டுப் போயிற்று.

## 18

## இழந்தால் இரட்டிப்பு லாபம்

**தெ**னாலிராமன் ஒரு குதிரை வாங்கி சவாரி செய்யப் பழகி வந்தான். ஆனால், குதிரையோ தொந்தரவு கொடுப்பதாயும் வந்தது.

RangaRakes
tamilnavarasam.com

ஒரு நாள் அரசரும், தெனாலிராமனும் அவரவர் குதிரையில் ஏறி, உலாவச் சென்றனர்.

தெனாலிராமனுடைய தொத்தல் குதிரையைப் பார்த்து, "இராமா! உன்னுடைய தொத்தல் குதிரையை, என் குதிரைக்குச் சமமாக ஓட்டி வர நினைக்கிறாயா?" என்று ஏளனமாகக் கேட்டார்.

"அரசர்பிரானே! தாங்கள் நூறு பொன் பந்தயம் கட்டினால், தங்கள் குதிரையைக் கொண்டு, தாங்கள் செய்ய முடியாத காரியத்தை, என் குதிரையைக் கொண்டு நான் செய்து காட்டுவேன்" என்றான் தெனாலிராமன்.

பந்தயத்திற்கு அரசர் சம்மதித்தார்.

ஆற்றுப் பாலத்தின் மீது இருவரும் குதிரையில் சென்று கொண்டிருந்தனர். வெள்ளப் பெருக்கு கரை புரண்டு ஓடியது.

தெனாலிராமன் உடனே குதிரையை விட்டு கீழே இறங்கி, உடனே தன்னுடைய குதிரையை ஆற்று வெள்ளத்தில் தள்ளிவிட்டான். குதிரையை வெள்ளம் அடித்துச் சென்றது.

அரசரைப் பார்த்து, "அரசர் பெருமானே! பந்தயப்படி என் குதிரையை நான் செய்ததுபோல் நீங்களும் செய்து காட்டுங்கள்" என்றான் தெனாலிராமன்.



அரசருடைய குதிரையோ அரபுநாட்டிலிருந்து வாங்கி வந்தது. உயர் ரகமானது. ஆயிரம் பொன் கொடுத்து வாங்கியது.

"இராமா! பந்தயத்தில் வெற்றி பெறுவதற்காக பாவம், உன் குதிரையை ஆற்று வெள்ளத்தில் தள்ளிவிட்டாயே" என்றார் அரசர்.

மேலும், தம்முடைய உயர் ரகக் குதிரையை, பந்தயத்துக்காக இழப்பதைக் காட்டிலும், தெனாலிராமனுக்கு நூறு பவுன் பந்தயத் தொகையைக் கொடுத்து விடுவதே மேல் என்று தீர்மானித்தார் அரசர்.

"அரசே! ஐம்பது பொன் கூட விலைபோகாத அந்தப் பயனற்ற குதிரை இப்பொழுது மிகப் பயன் உள்ளதாக ஆகிவிட்டதே! அதைச் சந்தைக்கு இழுத்துச் சென்று விற்கும் சிரமம் இல்லாமல் இரண்டு மடங்கு பொன் கிடைத்து விட்டது! மேலும், பயனற்ற அந்தக் குதிரையைப் பராமரிக்கும் வீண் செலவும் எனக்கு மீதமாயிற்று. அது வெள்ளத்தில் மூழ்கி இறந்து போனதால், அதற்கு வேதனையும் தீர்ந்தது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது, தாங்கள் இழக்க விரும்பாத குதிரையைக் காட்டிலும் நான் சுலபமாக இழந்துவிட்ட என் குதிரையால் லாபமும் பயனும் அதிகமாகும்" என்றான் தெனாலிராமன்.

தெனாலிராமனின் சாமர்த்தியத்தைப் பாராட்டி, பந்தயத் தொகையான நூறு பொன்னைக் கொடுத்து விட்டார் அரசர்.

RangaRakes tamilnavarasam.com

19

# மைத்துனனுக்கு விடுதலை

**பா**ரசீக நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டுப் பயிரிடப்பட்ட, புதுமையான மரங்கள், கனிகளுடன் அரண்மனைத் தோட்டத்தில், அழகாகக் காட்சி தந்தன.

அரசர் தினமும் அந்தப் பழங்களைச் சாப்பிட்டு மகிழ்வார்.

பழங்களை யாராவது திருடினால் கடுமையான மரணதண்டனை விதிக்கப்படும் என்பது அரசருடைய கட்டளை.

தெனாலிராமனின் மைத்துனன் (மனைவியின் தம்பி) கிராமத்திலிருந்து அங்கே வந்திருந்தான். ஒரு சமயம் அவன் அரண்மனைத் தோட்டத்துப் பக்கம் போய்க் கொண்டிருக்கும்போது, புதுமையான பழங்களைப் பார்த்து ஆசைப்பட்டு, பறித்துத் தின்றுகொண்டிருந்தான். அப்பொழுது காவலாளிகள் வந்து அவனைப் பிடித்து, சிறையில் அடைத்து வைத்துவிட்டு, அரசரிடம் போய் தெரிவித்தார்கள்.

அதைக் கேள்விப்பட்ட தெனாலிராமன் மனைவி, கணவனிடம் "என் அருமைத் தம்பியை நீங்கள் எப்படியாவது மரணதண்டனையிலிருந்து விடுவிக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டாள்.



மனைவியின் வேண்டுகோளை நிராகரிக்க முடியுமா? உடனே தெனாலிராமன் அரசரிடம் சென்றான்.

தெனாலிராமனைக் கண்டதும் அவனுடைய நோக்கத்தைப் புரிந்துகொண்டு, "இராமா! நீ வருவாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால் உன்னுடைய தந்திரம் எதுவும் இம் முறை பலிக்காது. பழம் திருடித்தின்ற உன் மைத்துனனை என்ன செய்ய வேண்டும் என்று நீ விரும்பிக் கேட்கப் போகிறாயோ, அதை நான் உறுதியாகச் செய்யமாட்டேன். அதற்கு மாறாகவே செய்வேன்! இது சத்தியம்" என்றார் அரசர்.

தெனாலிராமன் உடனே, "அரசர் பெருமானே! நீங்கள் செய்த சத்தியத்திலிருந்து கொஞ்சம் கூட மாறமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். பழம் திருடித் தின்ற என் மைத்துனனுக்குக் கொஞ்சம் கூட கருணை காட்டி மன்னிக்காமல், அவனுக்கு மரணதண்டனை விதிக்கவேண்டும் என்று தங்களிடம் விரும்பிக் கேட்கவே நான் வந்தேன்" என்றான்.

அரசர் திகைத்துப் போனார். தெனாலிராமனின் தந்திரம் பலித்து விட்டது.

"இராமா என்னுடைய பாதகமான வாக்கையே, உனக்குச் சாதகமாக மாற்றி அமைத்துக்கொண்ட உன் தந்திரத்தைப் பாராட்டி வியக்கின்றேன். என் வாக்குப்படி, உன் மைத்துனனுக்குப் பெரிதும் கருணை காட்டி, மன்னித்துத் தண்டனையிலிருந்து அவனை விடுவிக்கின்றேன்" என்றார் அரசர்.

RangaRakes tamilnavarasam.com

தெனாலிராமன் அரசருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டான்.

"இராமா! அந்தப் பழத் திருடன் இனி இங்கே இருக்கக்கூடாது. இன்றே இந்த நகரத்தைவிட்டுப் போய் விட வேண்டும்" என்று அரசர் கட்டளையிட்டார்.

அவ்வாறே அவனை அனுப்பி விட்டான் தெனாலிராமன்.

## 20

## பளு தாங்கவில்லை

அரசர் மட்டுமே செல்லக்கூடிய போர்க் குதிரை மீது தான் ஏறி, சவாரி செய்ய வேண்டும் என்ற ஆசை கொண்டிருந்தான் தெனாலிராமன்.

ஒரு சமயம், தன்னுடைய ஆசையை அரசரிடம் தெரிவித்தான் தெனாலிராமன்.

'அந்தப் போர்க் குதிரை மீது அவன் சவாரி செய்ய முடியாது. அவனைக் கீழே தள்ளி விடும். அவன் கீழே விழுந்து காயம் அடைவான்' என்று அரசர் நினைத்தார்.

ஆனாலும், 'அவன் ஆசைப்படி சவாரி செய்யட்டும்' என்று அரசர் அனுமதி கொடுத்தார்.



தன்னுடைய ஆசை நிறைவேறியதை நினைத்து, மிகவும் உற்சாகத்தோடு தெனாலிராமன் அந்தக் குதிரைமீது ஏறி உட்கார்ந்தான். திடீரென்று கிளம்பி சிறிது தூரம் செல்வதற்குள் தெனாலிராமனைக் கீழே தள்ளிவிட்டது.

அரசர் ஏளனமாகச் சிரித்தார். அருகில் இருந்தோரும் சிரித்து விட்டனர்.

உடனே தெனாலிராமன் சாமர்த்தியமாக, "அரசர் பிரானே! அந்தக் குதிரை இதுவரை, என்னைவிட எடை குறைந்தவர்களையும் வலிமையற்றவர்களையும் சுலபமாக சுமந்து சென்று இருக்கிறது. இதனால்தான் நீங்களும் அதன்மீது சவாரி செய்திருக்கிறீர்கள். ஆனால் என்னுடைய எடையை அது சுமக்க முடியாத அளவு பளுவாக இருந்ததால் பாரம் தாங்காமல் என்னைக் கீழே தள்ளிவிட்டது!" என்று கூறிச் சிரித்தான்.

## 21

## பூனையைக் கண்ட கிளிகள்

அரசருக்குத் திடீரென்று கிளிகள் வளர்க்க ஆசை உண்டாயிற்று.

உடனே அழகான கிளிகளை வரவழைத்து, அவற்றைக் கூண்டில் அடைத்து, அரண்மனையில் வைத்து வளர்க்கச் செய்தார்.

RangaRakes

tamilnavarasam.com

தினமும் பால், பழம், இனிப்புப் பொருள்கள் முதலியவற்றைக் கிளிகளுக்குக் கொடுத்து, மிகவும் பிரியமாக வளர்த்தனர்.

'இராமா', 'கிருஷ்ணா', 'கோவிந்தா', 'நாராயணா' என்று இறைவனின் திருப்பெயர்களைக் கிளிகளுக்குக் கற்றுக் கொடுத்து, அவை சொல்லுமாறு, பழக்கப்படுத்தி வைத்தனர் அரண்மனைச் சேவகர்கள்.

அவ்வாறு கிளிகள் இறைவன் திருப்பெயர்களைச் சொல்வதைக் கேட்டு, அரசர் மகிழ்ந்தார். மேலும், 'ஆகா! கிளிகளுக்கு எவ்வளவு தெய்வ பக்தி இருக்கிறது' என்று பெருமையாகக் கூறலானார்.

ஒரு நாள் அரச குரு, அமைச்சர் முதலானவர்களுடன் அரசர் உரையாடிக் கொண்டிருக்கும் போது, 'நம்முடைய கிளிகளுக்கு இருக்கும் தெய்வ பக்தியானது மக்களிடம் கூட இருக்க முடியாது' என்று கர்வத்தோடு கூறினார்.

அப்பொழுது தெனாலிராமன் எழுந்து "அரசர் பிரானே! பகுத்தறிவு உள்ள மனிதர்கள்தாம் தெய்வ பக்தி உள்ளவர்களாகவோ அல்லது தெயவ பக்தி இல்லாத நாத்திகர்களாகவோ இருக்க முடியும். ஊர்வன, பறப்பன முதலான ஜீவன்களுக்கு அத்தகைய இயல்பு கிடையாது. தவிர, சேவகர்கள் கொடுக்கும் பால், பழம், இனிப்புப் பொருள்களுக்கு ஆசைப்பட்டே, அக் கிளிகள் இறைவனின் திருப்பெயரைச் சொல்லுகின்றன. பக்தியால் அல்ல!" என்று கூறினான்.



அமைச்சர்கள், அரச குரு முதலானவர்கள் எதுவும் கூறாமல் மௌனமாக இருந்தனர்.

"இராமா! நீ சொல்வதற்கு என்ன ஆதாரம்? உன்னால் நிரூபிக்க இயலுமா?" என்று கேட்டார் அரசர்.

"அரசர் பெருமானே! நிச்சயமாக, நான் நிரூபித்துக் காட்டுகிறேன். இல்லாவிடில் தண்டனைக்கு ஆளாகிறேன் என்று கூறிவிட்டுச் சென்றான் தெனாலிராமன்.

மறுநாள், தெனாலிராமன் கையில் ஒரு கூட்டை யுடன் அரண்மனைக்கு வந்தான்.

எல்லோரும் ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தனர்.

நேராக, கிளிக் கூண்டுக்கு அருகில் சென்றான். தான் கொண்டு வந்திருந்த கூட்டையை அவிழ்த்தான். அதிலிருந்து முரட்டுப் பூனை ஒன்று மியாவ், மியாவ் என்று கிளிக் கூண்டை நோக்கித் தாவியது. எல்லாக் கிளிகளும் 'கீக் கீக் கீக்' என்று கத்திப் பயத்தால் சிறகுகளை அடித்துக் கொண்டன. ஆனால், அப்பொழுது, 'இராமா', 'கிருஷ்ணா' போன்ற இறைவன் திருப்பெயர்களைக் கூறவில்லை.

அரசர், 'இராமா', 'கிருஷ்ணா', 'கோவிந்தா' என்று சொல்லுமாறு கிளிகளை வற்புறுத்தினார். ஆனால், அவை பூனையைப் பார்த்தது முதல் பயத்தால் வெட வெட என்று நடுங்கிக் கொண்டிருந்தன.

RangaRakes

tamilnavarasam.com

அரசர் தெனாலிராமனைப் பார்த்து, புன்னகையோடு, "இராமா! இந்தப் பந்தயத்திற்குப் பரிசு தேவையா என்று கேட்டார்.

"அரசருடைய தண்டனையிலிருந்து நான் தப்பித்துக் கொண்டதே பெரிய பரிசு ஆயிற்றே!" என்றான்.

## 22

## உடலுக்குச் சுகம் எப்பொழுது?

ஒரு சமயம், அரசருடன் அமைச்சர்கள், அரச குரு முதலானவர்கள் உரையாடிக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது, "உடல் எந்த நேரத்தில் சுகமாக இருக்கும்?" என்று விவாதம் எழுந்தது.

ஒவ்வொருவரும் ஏதேதோ சொன்னார்கள்.

"கருணையே உருவான நம்முடைய மன்னர் பிரான் அளிக்கும் இனிய அறுசுவை விருந்தை உண்டபின் உடல் சுகமாக இருக்கும்" என்றார் அரசகுரு.

தெனாலிராமன் அவர் கூறியதை ஏற்கவில்லை.

"சிலருக்குப் பன்றியைப் போல், உண்ணத் தெரியுமே தவிர, அரச விருந்தின் சுகத்தை அறிய மாட்டார்கள்" என்று ஏளனமாக தெனாலிராமனை மனதில் கொண்டு அரச குரு மீண்டும் சொல்லலானார்.



தெனாலிராமன் எழுந்து, "விருந்தை உண்ட பிறகு, மலம் கழிப்பதால், உடலுக்குச் சுகமாக இருக்கும்" என்றான்.

அரச குரு அதை ஏற்கவில்லை.

அரண்மனையில், குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் அப்பொழுது இனிய விருந்து அளிக்கப்பட்டது.

விருந்து முடிந்ததும் ஒரு அறைக்கு அருகில் நின்று, அரச குருவும் அரசரும் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர்.

இதுவே சமயம் என்று எண்ணி அவர்கள் இருவரையும் அந்த அறைக்குள் போகும்படி ஏதோ சொன்னான் தெனாலிராமன். என்னவென்று புரியாமல் அவர்கள் அந்த அறைக்குள் சென்றனர். உடனே தெனாலிராமன் அறைக் கதவை வெளியில் இருந்தபடியே சாத்தி, தாழ்ப்பாள் போட்டு விட்டான்.

அவர்கள் இருவரும் வெகு நேரம் வரை அறையினுள் இருக்க வேண்டியதாயிற்று. மலம் கழிக்க அவஸ்தைப் பட்டனர். கதவைத் திறந்து விடுமாறு அரசர், தெனாலிராமனைக் கெஞ்சிப் பார்த்தார்; பயமுறுத்திப் பார்த்தார். பயன் இல்லை. அவர்களின் பொறுக்க முடியாத நிலையை உணர்ந்த தெனாலிராமன் கதவைத் திறந்து விட்டான்.

அரசர் மிக அவசரமாக மலம் கழித்து விட்டு "ஆகா! எவ்வளவு சுகம்! தெனாலிராமன் சொன்னது மிகவும் உண்மையே!" என்று புகழ்ந்தார்.

RangaRakes tamilnavarasam.com

தெனாலிராமன், "மகாராஜா! என்னால் தங்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்தை மன்னித்துவிட வேண்டும். உண்மையை அனுபவ பூர்வமாக அறிய வேண்டும் என்பதே என் நோக்கம்" என்றான்.

"இராமா! உன்மீது கோபம் எதுவும் இல்லை. நீ கூறியது உண்மை என்பதை அனுபவத்தில் உணர்ந்தேன்" என்றார் அரசர்.

தெனாலிராமனுக்கு இதிலும் வெற்றியே கிடைத்தது.

அரச குரு மௌனமாக நின்றார்.

## 23

## கத்தரிக்காய் குழம்பு

**அ**ருமையான பொருட்கள், சுவையான உணவு வகை, கவிராயர்களின் புகழ்மாலைகள், ஆடம்பரமான உடைகள் இவற்றை அரசர் விரும்புவது இயல்பே.

கன்னட ராஜ்யத்திலிருந்து வந்த பண்டிதர் ஒருவர் அரசரிடம் மிக அருமையான கத்தரிக்காய் இருப்பதாகக் கூறினார்.

உடனே, அங்கே இருந்து கத்தரிச் செடிகளை வரவழைத்து, அரண்மனைத் தோட்டத்தில் பயிரிடச் செய்தனர். அவை காய்த்துக் குலுங்கின.



ஒரு நாள் தெனாலிராமனை அழைத்துத் தம்முடன் உணவு அருந்தச் சொன்னார் அரசர். உணவில் கத்தரிக்காய் குழம்பு ஊற்றப்பட்டது. மிகவும் ருசித்துச் சாப்பிட்டான் தெனாலிராமன்.

அரசர் கத்தரிக்காயின் பெருமையைக் கூறியதோடு, அரண்மனைத் தோட்டத்திலிருந்து திருட்டுப் போகாதபடி, காவல் போடப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

கத்தரிக்காய் குழம்பின் ருசியை மறக்காத தெனாலிராமன் வீட்டுக்கு வந்து மனைவியிடம் புகழ்ந்தான்.

அவன் சொன்னதைக் கேட்டதும் அவன் மனைவிக்கு நாக்கில் நீர் ஊறியது.

"நீங்கள் மட்டும்தான் சாப்பிட வேண்டுமா? அந்த ருசியை நான் அனுபவிக்கக் கூடாதா? அத்தகைய சிறந்த கத்தரிக்காயை, எப்படியாவது பறித்துக் கொண்டு வாருங்கள். நம் வீட்டில் ருசியாகச் சாப்பிடலாம்" என்று தெனாலிராமனிடம் வற்புறுத்தினாள் அவன் மனைவி.

மனைவி சொல்லுக்கு மறுப்பு உண்டா? வேறு வழி இல்லாமல் நடு இரவில், தெனாலிராமன், அரண்மனைத் தோட்டத்திற்குள் புகுந்து, கத்தரிக்காய்களைப் பறித்துக்கொண்டு, வீட்டுக்கு வந்து விட்டான்.

அப்பொழுதே ஆவலோடு கத்தரிக்காய் குழம்பு வைத்துவிட்டாள் அவன் மனைவி. தெனாலிராமன் மிகவும் சுவைத்துச் சாப்பிட்டான்.

RangaRakes tamilnavarasam.com

வெளித் திண்ணையில் படுத்திருந்த மகனை எழுப்பி, கத்தரிக்காய் குழம்போடு உணவு கொடுக்க ஆசைப்பட்டாள் தெனாலிராமனின் மனைவி.

சிறுவனின் மூலம் கத்தரிக்காய் திருட்டு வெளியாகிவிடுமோ என்று தெனாலிராமன் தயங்கினான். என்றாலும், தாய்ப்பாசத்தை தடுக்க முடியாமல், வெளித் திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்த மகன் மீது ஒரு செம்புத் தண்ணீரை உயரத்திலிருந்து மழைத் துளிபோல் பொழியவிட்டு, அவனை எழுப்பி, 'மழை பெய்கிறது' என்று சொல்லி, அவனுடைய நனைந்த உடைகளை மாற்றிக் கொள்ளச் சொன்னான்.

அதன் பின் தாய், சிறுவனுக்குச் சோறு போட்டு, கத்தரிக்காய் குழம்பு ஊற்றிச் சாப்பிடச் சொன்னாள். அவன் சாப்பிட்டுவிட்டு மறுபடி போய்ப் படுத்துவிட்டான்.

மறு நாள் காலையில், கத்தரிக்காய் பறிக்கப் போன காவலாளி திடுக்கிட்டான். கத்தரிக்காய்கள் திருட்டுப் போயிருக்கின்றன. எவ்வாறு கண்டுபிடிப்பது? சாப்பிடக் கூடிய பொருள் அல்லவா திருடியவர்கள் சாப்பிட்டிருப்பார்களே!

அரசர் மிகவும் கோபத்தோடு இருந்தார்.

சிறிது புத்திசாலியான ஒரு அமைச்சர் "இது தந்திரசாலியான தெனாலிராமனுடைய வேலையாகத்தான் இருக்கும்" என்று சந்தேகப்பட்டு, தெனாலிராமனை



விசாரிக்கத் திறமை இன்மையால், அவனுடைய மகனை வரவழைத்து விசாரித்தார்.

சிறுவர்கள் பொய் சொல்லத் தெரியாதவர்கள்! 'முன் இரவு வீட்டில் கத்தரிக்காய் குழம்பு சாப்பிட்ட'தாகச் சொன்னான் தெனாலிராமனின் அருமை மகன்.

தெனாலிராமன் கத்தரிக்காய் திருட்டுக்குத் தண்டிக்கப்படுவான் என்று பலரும் எண்ணினர்.

உடனே தெனாலிராமன் வரவழைக்கப்பட்டான்.

"தெனாலிராமா! உன் மகன் முன் இரவு வீட்டில் கத்தரிக்காய் குழம்பு சாப்பிட்டதாகக் கூறிவிட்டான். முன் இரவு அரண்மனைத் தோட்டத்தில் அபூர்வக் கத்தரிக்காய்களை நீ தான் திருடியிருக்கிறாய் என்று நிரூபணமாகிவிட்டது! அரசரிடம் தெரிவித்து உனக்குத் தண்டனை அளிக்கச் செய்வேன்" என்று மிகவும் கம்பீரமாகக் கூறினார் அமைச்சர்.

தெனாலிராமன் மிகவும் அமைதியாக "அமைச்சரே! அவனோ சிறுவன், தூக்கத்தில் கத்தரிக்காய் குழம்பு சாப்பிட்டதாகக் கனவு கண்டிருக்கிறான். என்னிடம் கூட அப்படித்தான் சொன்னான். நேற்று இரவு மழை பெய்ததா இல்லையா என்று அறிவுசான்ற அமைச்சர் அவனை விசாரித்தால் சிறுவன் கூறுவது கனவா, உண்மையா என்பது தெரிந்துவிடும்" என்றான் தெனாலிராமன்.

RangaRakes

tamilnavarasam.com

"நேற்று இரவு மழை பெய்ததா? இல்லையா?" என்று சிறுவனிடம் விசாரித்தார் அமைச்சர்.

"ஆமாம்! நான் வெளித்திண்ணையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தேன். மழை பெய்து, என் உடைகள் நனைந்துவிட்டது. உடையை மாற்றிக் கொண்டு கத்தரிக்காய் குழம்பு சாப்பிட்டேன்." என்றான் சிறுவன் அழுத்தமாக.

அங்கு இருந்தவர்களுக்கு வியப்பாக இருந்தது!

'நேற்று இரவு மழையே பெய்யாததால், சிறுவன் ஏதோ கனவு கண்டிருக்கிறான்' என்று புத்திசாலி அமைச்சர், தெனாலிராமனை வீணாகச் சந்தேகப் பட்டதற்காக அவனிடம் வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

## 24

## இறந்தவன் எழுந்துவிட்டான்

தெனாலிராமன், "இராஜ தந்திரம் மிக்க அரசர்களை ஒரு போதும் நம்பி எதுவும் செய்யக் கூடாது" என்று கூறி வந்தான்.

அரசர் எத்தகையவர் என சோதிக்க வேண்டும் என்று எண்ணினான்.



ஒரு நாள் அரசரிடம் சென்று, "அரசர் பெருமானே! என்னுடைய இரும்புப் பெட்டியில் நான் பரிசு பெற்ற பொன் முடிப்புகள் நிறைய வைத்திருக்கிறேன். அவற்றை இனிமேல் என்னால் அனுபவிக்க இயலாது. இன்னும் ஒரு வாரத்தில் நான் இறந்து விடுவேன் என்று ஒரு மருத்துவர் கூறுகிறார். அவ்வாறு நான் மரணம் அடைந்து விட்டால், என் இரும்புப் பெட்டியைக் காப்பாற்றி வைத்து, என் மனைவி மக்களை ஆதரிப்பவர் யார்? அதுதான் எனக்குப் பெரிய கவலையாக இருக்கிறது" என்று பலவீனமான குரலில் கூறினான்.

அரசர், "இராமா! கவலைப் படாதே! நான் காப்பாற்றுகிறேன்" என்றார்.

அதன் பின்னர், நோய்வாய்ப்பட்டவன் போல் தெனாலிராமன் தன் வீட்டில் படுத்து விட்டான்.

ஒரு வாரத்தில், தெனாலிராமன் மரணம் அடைந்துவிட்டதாக அரண்மனைக்குச் செய்தி எட்டியது.

அந்தச் சமயம், இராணுவத்தைப் பலப்படுத்துவதற்கு அதிகமாகப் பணம் தேவையாயிருந்தது. அமைச்சர்களும் அரச குருவும் "அரசே! தெனாலிராமன் அடிக்கடி தங்களிடம் பரிசுகள் பெற்று, அரசாங்கக் கருவூலத்தையே பெரும் பகுதி காலி செய்து, அவன் வீட்டில் குவித்து வைத்திருக்கிறான். ஆகையால், அவன் வீட்டிலிருந்து இரும்புப் பெட்டியை அரண்மனைக்கு எடுத்து வந்து விடலாம். அவனுடைய மனைவி, மக்களுக்கு மாதம் தோறும் ஏதாவது ஒரு தொகை வழங்கி விடலாம்" என்று ஆலோசனை கூறினர்.

RangaRakes tamilnavarasam.com

அக்கருத்தை ஏற்றுக் கொண்ட அரசரும், தெனாலிராமன் வீட்டிற்கு ஆட்களை அனுப்பி, பெரிய கருவூலப் பெட்டியைத் தூக்கி வரச் செய்து திறந்து பார்த்தார். உள்ளே இருந்து தெனாலிராமன் எழுந்தான். அனைவரும் திடுக்கிட்டனர். அரசரும் வியப்போடு, "நீ இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டேனே!" என்றார்.

"அரசர் பெருமானே! ஏராளமான பொன் முடிப்புகளையும், மனைவி, மக்களையும் தனியே விட்டு விட்டு இந்தக் காலத்தில் யாரை நம்பி நான் சாவேன்? அதனால்தான் நான் பிழைத்து விட்டேன்! அரசர்களை நம்பக் கூடாது என்பதும் உண்மையாகி விட்டதே!" என்று கூறி கட கட என்று சிரித்தான் தெனாலிராமன்.

அரசர் வெட்கத்தோடு தலை கவிழ்ந்தார்.

## 25

## இங்கும் அங்கும்

**அ**ரச சபைக்குக் கவிராயர்கள், பண்டிதர்கள் வருவார்கள், புகழ் பாடுவார்கள், அரசரிடம் பரிசுகள் பெற்றுச் செல்வார்கள்.

ஒரு சமயம், பெரிய பண்டிதர் ஒருவர் அரசரைப் பற்றிப் புகழ்பாடி அரச சபையில் அரங்கேற்ற விரும்பினார்.



வந்த பண்டிதர், தாம் பெரிய பண்டிதர் என்று இறுமாப்போடு தெனாலிராமனை அலட்சியமாகப் பார்த்துவிட்டு, ஏட்டை அரசர் முன் சமர்ப்பித்தார்.

பண்டிதர் எழுதியிருந்த ஏட்டில் பாடல்கள் மிகவும் நெருக்கமாக எழுதப்பட்டிருந்ததால் அதை, தெனாலிராமன் தட்டுத் தடுமாறியபடி, சபையில் வாசிக்க நேரிட்டது.

ஒரு ஏட்டில், ஒரு பாடலின் இறுதி அடியைக் காணாததால் அதை முழுமையாக வாசிக்க முடியாமல், தெனாலிராமன் திணற வேண்டியதாயிற்று.

அந்த அடியை அதிலே எழுதுவதற்கு இடம் இல்லாததால், ஓர் அடையாளக் குறி மட்டும் இடப்பட்டு, ஆறாவது ஏட்டில், மற்றொரு அடையாளக் குறியிலிருந்து அந்த இறுதி அடி தொடங்கியது! இந்த மாறுபாட்டை அந்தப் பண்டிதர் சுட்டிக் காண்பித்து, ஏளனமாகச் சிரித்து விட்டு, 'தொடர்ந்து வாசியும்!' என்றார்.

அதிகமாகப் படித்த சிலர், மற்றவர்களுக்கு விளங்காமல், தங்களுடைய புலமையைக் காட்டி, குழப்பம் உண்டாக்கி விடுவது வழக்கம். தெனாலிராமன், தன்னை அவமானப்படுத்திய பண்டிதரைப் பதிலுக்கு அவமானப் படுத்தக் கருதினான்.

மறுநாள், தெனாலிராமன் அரச சபைக்கு வரும்போது, தன் குடுமியை வெட்டிக் கையில் வைத்துக்கொண்டு குடுமி இருக்க வேண்டிய தலையில் இரண்டு மூன்று கேசங்களை மட்டுமே வைத்துக் கொண்டு வந்தான்.

RangaRakes

tamilnavarasam.com

பண்டிதரின் பாடல்களுக்கு பரிசு அளிக்கு முன் சபையோரார் கருத்தைக் கேட்டார் அரசர். எல்லாரும் பாராட்டுத் தெரிவித்தனர்.

அரசர், குறிப்பாக தெனாலிராமனிடம், "இந்தப் பண்டிதரின் பாடலை எவ்வாறு மதிப்பிடலாம்?" என்று கேட்டார்.

அதற்கு தெனாலிராமன், தன்னுடைய தலைப்பாகையை எடுத்துவிட்டு குடுமியிருந்த இடத்தைத் தடவிப் பார்த்து, "அரசே! இவருடைய பாடலைப் பற்றி நினைக்கும்போது என்னுடைய தலை மயிர்தான் நினைவுக்கு வருகிறது. இன்று காலையில் நான் சவரம் செய்து கொள்ளும்போது ஞாபக மறதியாக என்னுடைய குடுமியை எடுத்து விடு என்று சவரத் தொழிலாளியிடம் சொன்னேன். பின்னர்தான் நாம் குடுமி இல்லாமல் இருக்கக் கூடாது என்ற நினைவு வந்தது. உடனே அந்த இடத்தில் குடுமி வைக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாக இரண்டு மூன்று மயிரை வைக்கச் சொல்லி, அதற்குப் பக்கத்தில் கிடந்த கேசங்களை எல்லாம் குடுமியாக முடிந்துகொண்டு வந்தேன். இதோ இந்தப் பெரிய பண்டிதர் ஒரு பாடலின் இறுதி அடியை அங்கே அடையாளமிட்டு ஆறாவது ஏட்டில் எழுதியுள்ளாரே அதை ஆதாரமாகக் கொண்டு, நானும் என் குடுமி விஷயத்தில் அடையாள வகைகளைக் கைக் கொண்டேன்!" என்றான்.

உடனே அரசர் முதலான அனைவரும் சிரித்து விட்டனர்.



அகம்பாவம் கொண்ட பண்டிதர் அவமானம் அடைந்தார்.

**26**

## மக்களுக்குத் தேவை எது?

**வி**ஜயநகர சாம்ராஜ்யத்துக்குப் பகை நாடாக விளங்கியது அண்டையிலுள்ள பாமினி ராஜ்யம்.

தம்முடைய குதிரைப் படைகளைக் கொண்டே அந்த நாட்டை வெற்றிக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டார் அரசர்.

அதற்காக அரேபிய தேசத்திலிருந்து ஆயிரம் குதிரைக் குட்டிகளை வரவழைத்தார்.

'நகரில் உள்ள ஒவ்வொருவரும் ஆளுக்கு ஒரு குதிரைக் குட்டியை வளர்த்துப் போர்க் குதிரையாக்க வேண்டும்' என்று கட்டளையிட்டு, 'அதற்காக நாள் ஒன்றுக்கு கொள்ளு முதலான செலவுக்கு மூன்று வராகன் வழங்கப்படும் என்றும் குதிரையின் வளர்ச்சியை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அரசரிடம் கொண்டு வந்து காட்ட வேண்டும்' என்றும் உத்தரவிட்டார் அரசர்.

அரசரின் கட்டளைப்படி, தெனாலிராமனும் ஒரு குதிரைக் குட்டியை வளர்க்க வேண்டிய நிலை உண்டாயிற்று.

RangaRakes tamilnavarasam.com

குதிரைக் குட்டியைத் தன் வீட்டுக் கொல்லையில் கட்டி வைத்து அதைச் சுற்றிலும், நான்கு புறமும் சுவர் எழுப்பி, குதிரையின் முகத்துக்கு நேராக சுவரில் சிறு துவாரம் செய்து வைத்திருந்தான்.

தெனாலிராமன் தினம் தோறும் அரண்மனையிலிருந்து மூன்று வராகன்களை வாங்கிவந்து தன்னுடைய குடும்பத்துக்குச் செலவு செய்து விடுவான். ஆனால், குதிரைக்குக் காய்ந்த புல்லைப் பிடுங்கி வந்து சுவரிலுள்ள துவாரத்தின் வழியாகக் கொடுத்து வந்தான். குதிரையோ பசி தாளாமல் அதை லபக்கென்று பிடுங்கித் தின்னும். இப்படியாக அந்தக் குதிரைக் குட்டியானது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் ஆகப் பட்டினியால் வாடி, வதங்கி, எலும்பும் தோலுமாக ஆகியது.

மூன்று மாதங்கள் கடந்தன. அரசர் முன்னர் அறிவித்தபடி, எல்லாக் குதிரைகளும், அரசர் பார்வைக்காக, அரண்மனை வளாகத்துக்குக் கொண்டு வரப்பட்டன. எல்லாக் குதிரைகளும் நன்றாக வளர்ந்து, சதைப்பிடிப்போடு இருந்தன. அரசர் கண்டு மகிழ்ந்தார்.

ஆனால், தெனாலிராமனுடைய குதிரையைக் காணாததால் "இராமா! உன் குதிரை மட்டும் ஏன் வரவில்லை?" என்று கேட்டார்.

அதற்குத் தெனாலிராமன், "அரசே! அந்தப் பொல்லாத குதிரையை என்னால் பிடித்துக் கொண்டு வர முடியவில்லை. அரண்மனைக் குதிரைப் பயிற்சித் தலைவரை அனுப்பினால் அதைப் பிடித்துக் கொண்டு வர முடியும்" என்றான்.



"அவ்வளவு முரட்டுக் குதிரையாகவா வளர்த்திருக்கிறாய்" என்று அரசர் வியப்போடு கேட்டு, உடனே அதைப் பிடித்துக் கொண்டு வருமாறு குதிரைப் பயிற்சித் தலைவனை அனுப்பினார் அரசர்.

குதிரைப் பயிற்சித் தலைவன், அராபிய நாட்டிலிருந்து வந்தவன். நீண்ட தாடியுடையவன். அவன் தெனாலிராமனுடன் சென்று, அவன் வளர்த்த குதிரையைத் துவாரத்திலிருந்து எட்டிப் பார்த்தான். வழக்கமாகத் தரும் காய்ந்த புல் என்று கருதிய குதிரை அவனுடைய தாடியை லபக்கென்று பிடித்துக் கொண்டது. அவனோ பதறினான். அரண்மனையிலிருந்து சேவகர்கள் வந்து, தாடியைக் கத்தரித்து அவனையும் குதிரையையும் விடுவித்தனர்.

குதிரையோ எலும்பும் தோலுமாக இருந்த இடத்தை விட்டு நகரக்கூடச் சக்தியற்று இருந்தது.

அரண்மனைச் சேவகர்கள், குதிரையை முன்னால் இருவர் இழுக்க பின்னால் மூவர் தள்ள எப்படியோ குதிரையைக் கொண்டு வந்து சேர்த்தனர்.

அதைப் பார்த்த அரசர் கோபத்தோடு, "இராமா! குதிரைக்குத் தீனி போடாமல் அதைச் சாகடிக்கும் நிலையில் வைத்து விட்டாயே?" என்றார்.

"அரசப் பிரபுவே! நான் கொஞ்சமாகத் தீனி போட்டு வளர்த்ததற்கே இந்தப் பொல்லாத குதிரை, குதிரைப் பயிற்சித் தலைவரின் தாடியைப் பிடித்து

RangaRakes tamilnavarasam.com

இழுத்து விட்டது! அதிகமாகத் தீனி போட்டிருந்தால், எத்தனை பேருடைய தாடியைப் பிடித்து இழுத்திருக்குமோ? மேலும், முன்னால் இருந்து இருவர் இழுக்க, பின்னாலிருந்து மூவர் தள்ளிக்கொண்டு வர வேண்டியதாயிற்று. நிறையத் தீனி போட்டிருந்தால், அதை நகர்த்த இன்னும் எத்தனை பேர் தேவைப்பட்டிருக்கும்? தவிர, குதிரைகளின் தீனிக்காக தங்கள் உணவைச் சுருக்கி, குதிரைகளை வளர்த்து வந்த மற்றவர்களைப் போல், நானும் மெலிந்து போக நேரிட்டிருக்குமே!" என்றான் தெனாலிராமன்.

அதைக் கேட்டுச் சிரித்த அரசர், 'குதிரைகளை வைத்து வளர்ப்பதிலும், இராணுவத்தைக் கொழுக்க வைப்பதிலும் கவனத்தையும் பணத்தையும் செலவிடாமல், அரசாங்கம் குடிமக்களின் உணவுப் பிரச்னையில் அதிகமான அக்கறை கொள்ள வேண்டும்' என்பதைத் தெனாலிராமன் வளர்த்த குதிரையினாலும், அவன் கூறிய சொற்களினாலும் அரசர் உணர்ந்தார்.

## 27

## உளவாளியின் சதி

**வி**ஜயநகர அரசர் கிருஷ்ண தேவராயரிடம் பகை உணர்வு கொண்டிருந்தான் கோல்கொண்டா ராஜ்யத்தின் அரசன். விஜயநகர அரசரை எப்படியாவது கொன்றுவிட்டால் எளிதில் அந்த நாட்டைத் தன் வசப்படுத்திக் கொள்ளலாம் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தான் அவன்.



தனக்கு நம்பிக்கையான உளவாளி ஒருவனை விஜயநகரத்துக்கு அனுப்பிவைத்தான் கோல்கொண்டா அரசன்.

விஜயநகர அரசரிடம் தெனாலிராமனுக்கு உள்ள செல்வாக்கை அறிந்து கொண்டான் அந்த ஒற்றன்.

ஒரு நாள் தெனாலிராமன் வீட்டிற்கு வந்து, வெகுதூரத்திலிருந்து வந்திருக்கும் அவன் தாய் வழி உறவினன், தன் பெயர் கனகராஜு என நயவஞ்சகமாகக் கூறினான். தெனாலிராமனுக்கும் அவன் மனைவி மக்களுக்கும் பல பரிசுப் பொருள்களைக் கொடுத்து அவனுடைய நம்பிக்கைக்கு ஆளானான். அங்கேயே தங்கிவிட்டான் அந்த ஒற்றன்.

ஒரு நாள் தெனாலிராமன் மனைவியோடு ஏதோ அலுவலாக, சொந்தக் கிராமத்திற்குச் சென்றான்.

இதுவே தக்க சமயம் என எண்ணிய ஒற்றன் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு, "அரசர் பெருமானே, உடனே என் வீட்டிற்கு தாங்கள் மட்டும் தனியாக வந்தால் காணமுடியாத ஒரு புதுமையைக் காணலாம்" என்று தெனாலிராமன் எழுதியதைப் போலவே கடிதம் எழுதி அரசருக்கு அனுப்பிவைத்தான்.

கடிதத்தைக் கண்டதும், அரசர் ஆவலோடு தெனாலிராமன் வீட்டுக்கு தனியே வந்து சேர்ந்தார். ஆனால், தெனாலிராமனைக் காணவில்லை. அப்பொழுது, அந்த நய வஞ்சக ஒற்றன் திடீரென

RangaRakes tamilnavarasam.com

கட்டாரியை எடுத்து அரசரைக் குத்திக் கொல்ல முயன்றான். நல்ல வேளையாக அரசர் உயிர் தப்பி, அந்த வஞ்சகனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கூச்சலிட்டார்.

கூச்சல் கேட்டதும் அக்கம் பக்கத்திலிருந்து மக்கள் வந்து திரண்டுவிட்டனர். அந்த ஒற்றனைப் பிடித்து நையப் புடைத்து அந்த இடத்திலேயே அவனைச் சாகடித்து விட்டனர்.

அரசர் அமைதியாக அரண்மனையை அடைந்தார்.

"என்னதான் முக்கிய அலுவல் இருந்த போதிலும், அரசர், "பாதுகாப்பு இன்றி தனியாகச் செல்லக் கூடாது" என்று அமைச்சர்கள் எச்சரித்தனர்.

"பகை நாட்டு ஒற்றன் ஒருவனுக்குத் தன் வீட்டில் இடம் அளித்து, அரசரின் உயிருக்கு ஆபத்தை உண்டாக்கக் காரணமாயிருந்த ராஜத் துரோகியான தெனாலிராமனுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும்" என கேட்டுக் கொண்டார் அரச குரு.

தெனாலிராமன் வந்து நிகழ்ந்ததை அறிந்து, "தெரியாத்தனமாக, உறவினன் என்று நம்பி இடம் கொடுத்தேன். அவன் நயவஞ்சகமான கொலைகாரனாக மாறுவான் என நான் எண்ணவே இல்லை. நான் நிரபராதி. ராஜ விசுவாசம் உள்ளவன். என்னை மன்னித்து அருள வேண்டும்" என்று அரசரிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டான்.

RangaRakes



"இராமா! நாட்டின் பொதுவான சட்டத்திற்கு விரோதமாக உன்னை மன்னிக்க இயலாது. ஆனால், உன் மீதுள்ள அபிமானத்தின் காரணமாக நீ எவ்வாறு சாக விரும்புகிறாயோ, அவ்வாறு சாகலாம். அதற்கு உத்தரவிடுகிறேன். அதுவே நான் அளிக்கக்கூடிய சலுகை" என்றார் அரசர்.

அதையே வாக்குறுதியாகப் பெற்றுக் கொண்ட தெனாலிராமன், "அரசர் பிரானே! எனக்கு வயது முதிர்ந்து தலை கழுத்தை விட்டுப் போக விரும்பும் தொண்டு கிழவனாயிருக்கும் நிலையிலேதான் நான் சாக வேண்டும் என்று விரும்புகிறேன்" என்று கூறிச் சிரித்தான்.

அரசரும், "நீ அவ்வாறே தொண்டு கிழவன் ஆகும்போது சாகலாம்" என்று கூறிச் சிரித்தார்.

தெனாலிராமன் விடுதலை செய்யப்பட்டான். உண்மையிலேயே அவன் குற்றமற்றவன் என்பதை உணர்ந்து கொண்டார் அரசர்.

## 28

# சோதிடரின் முடிவு

**து**ங்கபத்திரா நதியைக் கடந்துள்ள பீஜப்பூர் நாட்டின் மீது படையெடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை, அரசர் செய்து கொண்டிருந்தார்.

tamilnavarasam.com

அந்த ஏற்பாட்டை அறிந்த பீஜப்பூர் சுல்தான் மிகவும் கலக்கமுற்றான். திறமையும் வலிமையும் வாய்ந்த விஜயநகர மன்னர் கிருஷ்ணதேவராயரின் படையெடுப்பை எதிர்த்து நின்று வெற்றி கொள்ள இயலாது என்பதை உணர்ந்தான்.

அதனால் சூழ்ச்சியின் மூலம் படையெடுப்பைத் தவிர்க்கத் தீர்மானித்தான்.

பீஜப்பூர் சுல்தானின் உளவாளிகள் விஜய நகரத்துக்கு வந்து சுற்றித் திரிந்தனர். அரசருடைய அரண்மனைச் சோதிடரை அணுகி, ஒரு லட்சம் வராகனைக் கொடுத்து, "உங்கள் அரசர், பீஜப்பூர் மீது இப்பொழுது முதல் ஒரு வருடம் வரை வரக் கூடாது. அதற்கு ஏதாவது ஒரு காரணத்தை சோதிடத்தின் மூலம் கூறி தடுத்து நிறுத்திவிட வேண்டும். அவ்வாறு நீங்கள் அரசரிடம் கூறி நிறுத்திவிட்டால், மேலும் ஒரு லட்சம் வராகன் கொண்டு வந்து உமக்குத் தருவோம்" என்று கேட்டுக் கொண்டனர்.

ஒரு லட்ச ரூபாயை ஓரே சமயத்தில் கண்ணால் கண்ட சோதிடருக்குச் சபலம் உண்டாயிற்று. உளவாளி களிடம் "உங்களுக்குக் கவலை வேண்டாம். எப்படியாவது படையெடுப்பை நிறுத்துமாறு செய்துவிடுகிறேன். தாங்கள் வாக்கு அளித்தபடி மேலும் ஒரு லட்சத்தைக் கொண்டு வந்து தந்துவிட வேண்டும்" எனறார் சோதிடர்.



தாங்கள் மேற்கொண்ட காரியம் எளிதாக நிறைவேறிவிட்டதால், மகிழ்ச்சியோடு உளவாளிகள் பீஜப்பூர் சென்று சுல்தானிடம் தெரிவித்தனர்.

அரண்மனை சோதிடர், ரூபாயை வீட்டினுள் பத்திரப்படுத்தி விட்டு, அரண்மனைக்குப் புறப்பட்டார்.

அரசரைப் பார்த்து, "மன்னர் பிரானே! இன்றைய நிலையில், கிரகங்களை ஆராய்ந்து பார்க்கும் போது, அவை நமக்குச் சாதகமாக இல்லை. இப்பொழுது முதல் ஒரு வருடம்வரை கால பலன் சரி இல்லை. அதை மீறிப் படையெடுத்துச் சென்றால் வெற்றியும் கிட்டாது. அரசருடைய உயிருக்கும் ஆபத்து நேரிட்டுவிடும்" என்று அழுத்தமாகக் கூறினான் நயவஞ்சகச் சோதிடன்.

அரசர் புன்னகையோடு, "நம்மிடம் வலிமையும் திறமையும் கொண்ட படை இருக்கும்போது, நமக்கு என்ன கவலை? வெற்றி நமதே!" என்றார்.

அமைச்சர்களும், அரச குருவும் ஒருங்கே, "மன்னர் அவர்களே, கிரக நிலையை ஆராய்ந்து, சோதிடர் கூறுவதால் அதை நாம் நம்பத்தான் வேண்டும். மேலும், நம் நாட்டு மக்களுடைய நல் வாழ்வும், பாதுகாப்பும் தங்களுடையது. அவர்கள் பொருட்டாவது, தங்கள் உயிருக்கு ஆபத்து நேரிடாமல், காப்பாற்றிக் கொள்வது மிக முக்கியம். ஒரு வருடம் பொறுத்து இருப்பதால் தீமை எதுவும் இல்லை," என்று பல உதாரணங்களையும் எடுத்துக் கூறினர்.

RangaRakes

tamilnavarasam.com

அந்தப்புரத்து இராணிகளும், இந்த வருடம் முஸ்லீம் அரசனை எதிர்த்துப் படையெடுக்க வேண்டாம், என அரசரை வேண்டிக் கொண்டனர்.

"இந்த வருடமே, இந்தப் போரை எப்படியாவது நடத்தி முடித்துவிட வேண்டும் என்ற துடிப்பு எனக்கு அதிகமாக இருக்கிறது. ஆனால் ஒரு சோதிடர் சொல்லை நம்பி அமைச்சர்களும், அரச குருவும், இராணிகளும் தடுக்கிறார்கள். அவர்களை மீறி எவ்வாறு ஈடுபடுவது? மிகவும் குழப்பமாக இருக்கிறது. இதற்கு என்ன யோசனை?" என்று தெனாலிராமனிடம் ஆலோசனை செய்தார் அரசர்.

"எல்லார் சோதிடர்கள் கூறுவதையும் நாம் நம்பிவிடக் கூடாது" என்றான் தெனாலிராமன்.

"வெறுமனே சொன்னால் போதுமா? அரண்மனைச் சோதிடனின் குறிப்பு தவறு என்று யாராவது நிரூபித்துக் காட்டினால், ஒரு லட்சம் வராகன் பரிசு தருகிறேன்" என்றார் அரசர்.

"சோதிடன் பொய் சொன்னான் என்பதை நிரூபிக்கும்போது, என்னால் அவனுக்கு ஏற்படக் கூடிய துன்பத்தை தாங்கள் மன்னிப்பதானால், இந்தக் காரியத்தைச் செய்ய முற்படுகிறேன்" என்றான் தெனாலிராமன்.

"சோதிடன் சொன்னது பொய் என்று தெரிந்தால், உடனே அவனுக்கு மரண தண்டனை அளிக்க வேண்டி நேரிடும்" என்றார் அரசர்.



மறுநாள், அரண்மனைக்கு சோதிடன் வரவழைக்கப்பட்டான். அவனைப் பார்த்து, "ஐயா, தங்களுடைய எதிர்காலக் குறிப்புகள் யாவும் உண்மைதானா?" என்று தெனாலிராமன் கேட்டான்.

"அதைப் பற்றிய சந்தேகம் என்ன! யாராவது பொய் என்று நிரூபிப்பார்களானால் என் உயிரையே பணயமாக வைக்கத் தயாராக இருக்கிறேன்" என்றான் சோதிடன்.

"சிறப்புமிக்க சோதிட வல்லுநர் நம்முடைய நாட்டில் வாழ்வது பெருமையாகும். இப்பொழுது தங்களுக்கு வயது என்ன? இன்னும் எத்தனை ஆண்டுகள் வாழ்வீர்கள்?" என்று கேட்டான் தெனாலிராமன்.

"இப்பொழுது எனக்கு வயது நாற்பத்து இரண்டு. இன்னும் இப்புவியில் முப்பது ஆண்டுகள் புகழோடு வாழ்வேன்" என்று பெருமிதச் சிரிப்போடு கூறினான் சோதிடன்.

"அடே ராஜதுரோகி! முப்பது ஆண்டுகள் உனக்கு வாழ்வு கணித்து வைத்துள்ள நீ இப்பொழுதே மடியப்போகிறாய்!" என்று கூறி, வாளால் அவன் தலையை வெட்டி வீழ்த்தினான் தெனாலிராமன்.

அரசர் முதல் அனைவரும் அந்த நிகழ்ச்சியைக் கண்டு வியப்பும் திகைப்பும் அடைந்தனர்.

பிறருடைய நன்மை தீமைகளை, முன் கூட்டியே அறிந்து சொல்லக்கூடிய இவன் தன்னுடைய முடிவைத்

RangaRakes

tamilnavarasam.com

தெரிந்து வைத்துக் கொள்ளவில்லையே! என்ன பேதைமை!" என்றான் தெனாலிராமன். மேலும்,

"அரசர் பிரானே! இந்த ராஜத் துரோகியின் வீட்டை உடனே சோதனை செய்யுமாறு உத்தர விட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

அரண்மனைச் சேவகர்களும் அதிகாரிகளும் சோதிடன் வீட்டிற்குச் சென்று சோதனையிட்டனர். பீஜப்பூர் சுல்தானுடன் ராஜத்துரோகம் சம்பந்தமாகத் தொடர்பு வைத்திருந்ததற்கான தடயங்களும், ஒரு லட்சம் வராகன்களும் சோதிடன் வீட்டில் அகப்பட்டன.

தெனாலிராமனுடைய அறிவுக் கூர்மையையும், ராஜவிசுவாசத்தையும் எல்லோரும் பாராட்டினர்.

அரசர் வாக்களித்தபடி ஒரு லட்சம் வராகனை, தெனாலிராமனுக்குப் பரிசாக அளித்தார்.

அரசர் விரும்பியபடி, பீஜப்பூர் மீது படையெடுத்து, மிகப் பெரிய வெற்றி பெற்றார்.

"இப்போதையப் படையெடுப்புக்கும், வெற்றிக்கும் தெனாலிராமனே காரணமாக இருந்தான்" என்று அரசர் நன்றிப் பெருக்கோடு கூறினார்.

29

# கிருஷ்ணன் வாங்கிய அடி

கவிஞர்கள், பாடகர்கள், புலவர்கள், மல்யுத்த வீரர்கள், நாட்டியக்காரர்கள் முதலானவர்கள் அரசசபைக்கு வந்து தங்களுடைய புலமையைக் காட்டி அரசரிடம் வெகுமதி பெற்றுச் செல்வது வழக்கம்.

ஒரு சமயம், குச்சிப்புடி என்னும் ஊரிலிருந்து நாட்டியத்திலும், பாட்டிலும் திறமையான ஒருவர் அரசரிடம் வந்தார்.

அரண்மனையின் அந்தப்புரத்தில் ராணிகளுக்காக குச்சிப்புடிக்காரரின் கிருஷ்ண லீலா என்னும் நாட்டிய இசை நடத்த ஏற்பாடாயிற்று.

நாட்டிய இசை ஆரம்பம் ஆயிற்று.

தெனாலிராமனோ குறும்புக்காரன். ஏதேனும் கேலிசெய்து கொண்டிருப்பான். அதனால், "இசை நிகழ்ச்சி நடைபெறுவது அவனுக்குத் தெரியக் கூடாது. அவனை உள்ளே அனுமதிக்கவும் கூடாது" என அரசர் உத்தரவிட்டிருந்தார்.

தெனாலிராமனுக்கு எப்படியோ தெரிந்து விட்டது அவன் அரண்மனைக்கு வந்தான்.

RangaRakes

tamilnavarasam.com

"இந்த நிகழ்ச்சி நடைபெறுவதே உனக்குத் தெரியக் கூடாது. ஆகையால், உன்னை உள்ளே போக அனுமதிக்க இயலாது" என்று கூறினர் வெளிவாயிலில் இருந்த காவலர்கள்.

"நிகழ்ச்சியைத் தெரிந்து வந்தால், உள்ளே வரக்கூடாது என்று அரசர் உத்தரவிடவில்லையே, அப்படியிருக்க என்னை ஏன் தடுக்கிறீர்கள்? தவிர, என்னை உள்ளேபோக விட்டால், எனக்குக் கிடைப்பதில் பாதியை உனக்குத் தருகிறேன்" என்றான் தெனாலிராமன்.

அவனுடைய நகைச் சுவையையும், அடிக்கடி அவன் பெறும் வெகுமதிகளையும் அறிந்த காவலர், தங்களுக்கும் பாதி கிடைக்கும் என்ற சபலத்தில், "உம்மை உள்ளே செல்ல அனுமதிக்கிறோம். ஆனால், தவறாமல் கிடைப்பதில் பாதியைத் தந்துவிட வேண்டும்" என்று கூறி, உள்ளே செல்ல விட்டனர்.

வெளி வாயிலைக் கடந்து உள்ளே சென்றான் தெனாலிராமன். உள்வாயிலில் உள்ளே காவலர் அவனைத் தடுத்தனர்.

"எனக்குக் கிடைப்பதில் பாதியைத் தருவதாக, வெளிவாயில் காவலருக்குக் கூறியுள்ளேன். அதைப் போல், மற்றொரு பாதியை உங்களுக்கும் தருகிறேன்" என்று கூறினான் தெனாலிராமன்.

"அப்படியானால் சரி, மறந்து விடாமல் பாதியைத் தாருங்கள்" என்று மகிழ்ச்சியோடு உள்ளே போக விட்டனர்.

RangaRakes



இசை நாட்டிய நிகழ்ச்சி நடை பெறுகிறது. அதில், கிருஷ்ணன் சிறுவயதில் வெண்ணெயைத் திருடித் தின்றபோது, கோபிகைப் பெண்டிர் பிரம்பால் அவனை அடிப்பதைப் பற்றிப் பாடி நடித்துக் கொண்டிருந்தார் நாட்டியக்காரர்.

அப்பொழுது தெனாலிராமன் ஒரு பிரம்பால் அந்த நாட்டியக்காரர் தலையில் ஒரு அடி அடித்தான். அவர் பொறுக்கமாட்டாமல் அலறினார். அவனைப் பார்த்து தெனாலிராமன்,

"அந்த கிருஷ்ணனோ தான் செய்த குறும்புத் தனத்துக்கு கோபிகைப் பெண்களிடம் எவ்வளவோ பெரிய மத்தால் அடி வாங்கியிருக்கிறான். ஆனால், அவனே வாய்திறந்து ஒரு முறைகூட அலறவில்லை. நீங்களும் கிருஷ்ணனாக நடிக்கும்வரை அம்மாதிரி பொறுமையாக இருக்க வேண்டும்" என்று கூறிச் சிரித்தான்.

சபையில் இருந்தோர் அனைவரும் சிரித்தனர். ஆனால், அரசருக்குக் கோபத்தை உண்டாக்கியது. அருகில் நின்ற அதிகாரியை அழைத்து, "இராமனுடைய குறும்புத்தனங்களுக்கு அவ்வப்போது பாராட்டும், வெகுமதிகளும் கிடைப்பதால், சந்தர்ப்பம் தெரியாமல் நடந்துகொள்கிறான். ஆகையால், இப்பொழுது அவனுக்கு இருபத்து நான்கு சவுக்கடி கொடு" என்று உத்தரவிட்டார்.

உடனே தெனாலிராமன், அரசர்பெருமானே! என் நகைச்சுவைக்குத் தாங்கள் அளித்த பரிசுக்கு மிக்க நன்றி. ஆனால், எனக்கு இங்கே கிடைப்பதில் சரிபாதி

tamilnavarasam.com

உள்வாயில் காப்போருக்கும், மறுபாதியை வெளிவாயில் காப்போருக்கும் தருவதாக வாக்களித்திருக்கிறேன். ஆகையால், தாங்கள் கொடுக்கப் போகும் இருபத்துநான்கு சவுக்கடிகளையும் அவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து விடுங்கள்" என்றான்.

அரசருடைய கோபம் தணிந்தது. வியப்பு மேலிட்டது, "இராமா! சவுக்கடிகளை எவ்வாறு பகிர்ந்து பெற்றுக்கொள்ளச் சம்மதித்தார்கள்?" என்று கேட்டார்.

தன்னை உள்ளே விட வாயில் காப்போர் மறுத்ததையும், தனக்குக் கிடைக்கும் பரிசில் பாதியை வெளிவாயில் காப்போருக்குத் தருவதாகவும், மற்றொரு பாதியை உள்வாயில் காப்போருக்குத் தருவதாகவும் கூறிய பிறகே, அவர்கள் என்னை உள்ளே விட்டனர்' என்றான் தெனாலிராமன்.

அரசர், அவர்களை வரவழைத்து உண்மையை அறிந்தார்.

அதன் பின்னர் அவர்களுக்குச் சவுக்கடிகள் கொடுக்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியைக் கண்டு மகிழ்ந்த அரசர், "இராமா! உன்னுடைய செயல், அந்த நாட்டிய இசை நிகழ்ச்சியைக் காட்டிலும் சிறப்பாக இருந்தது" என்று புகழ்ந்து, ஒரு பொன் முடிப்பையும் பரிசாக அவனுக்கு அளித்தார்.

## 30

# அவமானம் அடைந்த அரசர்

ஒரு சமயம் அரசரும் தெனாலிராமனும் உரையாடிக் கொண்டிருக்கும்போது, "இராமா! சமய சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி உன்னால் நகைச்சுவையாகவும், குறும்பாகவும் பேச முடியுமே தவிர, அனுபவத்தில் எந்தப் பிரமாதமான செயலையும் செய்ய முடியாது" என ஏளனமாகச் சொன்னார் அரசர்.

"சந்தர்ப்பம் வாய்க்கும்போது செய்வேன்" என்றான் தெனாலிராமன். மேலும், "பெரிய சாம்ராஜ்ய மன்னராகிய தங்கள் மீது யாரைக் கொண்டாவது, ஒரு காலணியை விட்டெறியும் படி செய்யக்கூட முடியும்" என்றான்.

"ஆ! அப்படி உன்னால் செய்ய முடியுமா?" என்று சற்று படபடப்பாகக் கேட்டார் அரசர்.

"அரசர்பிரானே! தவறாகக் கருதக் கூடாது! இது ஒரு சவாலே தவிர வேறு எதுவும் இல்லை என்பதை தாங்கள் நிதானமாக உணர வேண்டும். மற்றும் எனக்கு மூன்று மாதங்கள் தவணை கொடுங்கள். அதற்குள் என்னால் நிறை வேற்ற இயலாவிடில், நீங்கள் கொடுக்கும் தண்டனையை ஏற்றுக் கொள்வேன்." என்றான் தெனாலிராமன். அரசரும் சம்மதித்தார். சில நாட்கள் கழிந்தன!

RangaRakes tamilnavarasam.com

தெனாலிராமனின் சபதத்தை அரசர் மறந்து விட்டார்.

தம்முடைய சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியிலுள்ள மலை நாட்டுத் தலைவனுடைய மிக அழகான பெண்ணை மணம் புரிந்து கொள்ளத் தீர்மானித்தார் அரசர்.

மலைநாட்டுத் தலைவனுக்கு, அரச பரம்பரையைப் பற்றியோ, அவர்களுடைய சம்பிரதாயச் சடங்குகளைப் பற்றியோ, எதுவுமே தெரியாது.

அரசர், மலைநாட்டுத் தலைவனிடம், "அழகு மிக்க உன் மகளை மணம் செய்து கொள்ள வேண்டும் என்பதே என் ஆசை. மற்றபடி உங்களுடைய குல சம்பிரதாயப்படி, எத்தகைய சடங்குகளையும் நீங்கள் செய்து கொள்ளலாம். அதைப் பற்றி எவ்வித தவறும் இல்லை" என்று கூறினார்.

ஆயினும், அரச வம்சத்துத் திருமணம் என்பதால், எல்லாச் சடங்குகளையும் சிறப்பாக நடத்த வேண்டும் என்று ஆவலாக இருந்தான் மலைநாட்டுத் தலைவன்.

திருமணத்திற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அப்பொழுது, தெனாலிராமன் போய் மலை நாட்டுத் தலைவனைச் சந்தித்து, தான் முக்கியமான ஒரு விஷயத்தைத் தெரிவிக்க வந்திருப்பதாகவும், அதை யாரிடமும் தெரிவிக்கக் கூடாது என்றும் சொன்னான்.



அதாவது: "அரச குடும்பத்தின் பழைய வழக்கப்படி திருமணம் முடிந்ததும் மணப்பெண் தான் அணிந்திருக்கும் பட்டுக் காலணி ஒன்றை எடுத்து, முதல் இரவு அறைக்குள் அரசர் நுழையும் போது, அவர் மீது விட்டெறிவது முக்கியமானது. அதை அவர்கள் மிகவும் விரும்புவது இயல்பு. அதற்காக, பாரசீக நாட்டிலிருந்து என் நண்பன் கொண்டு வந்திருக்கும் பட்டுக் காலணிகளை அவனிடமிருந்து பெற்றுக்கொண்டு வந்திருக்கிறேன்" என்று பலவாறு விளக்கிக் கூறினான்.

"என்ன இருந்தாலும் முதல் இரவில் கணவன் மீது மனைவி காலணியை வீசுவது முறையாகுமா?" என்று தயங்கினான் மலைநாட்டுத் தலைவன்.

"தங்களுக்கு விருப்பம் இல்லையேல் விட்டு விடலாம். எனக்கு ஒன்றும் இல்லை. அரச குடும்பத்தின் விருப்பமான சடங்கு முறையைச் சொன்னேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்படத் தயாரானான் தெனாலிராமன்.

"என் பெண், எந்த அரசிளங்குமரிக்கும் குறைந்தவள் அல்லள்" என்று கூறி, துணிந்து காலணிகளை அவனிடமிருந்து பெற்றுக் கொண்டான் மலைநாட்டுத் தலைவன்.

"இந்தச் செய்தியை எவரிடமும் வெளியிடுவது இல்லை" என்று தெனாலிராமனிடம் உறுதி அளித்து, அவனுக்குப் பரிசுகளைக் கொடுத்து அனுப்பிவைத்தான் மலைநாட்டுத் தலைவன்.

திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது!

RangaRakes tamilnavarasam.com

முதல் இரவு. ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்டிருந்த அறையினுள் மணமகனான அரசர் நுழைகிறார். மணப்பெண், மலர்ந்த முகத்தோடு, பட்டுக்காலணியைக் கழற்றி, அவர் மீது விட்டெறிகிறாள். அரசருக்கு வியப்பும் திகைப்பும் உண்டாகிறது. இது ஒரு மலைநாட்டுச் சம்பிரதாயம் போலும் என்று கருதினார் அரசர். உடனிருந்த தெனாலிராமன், "அரசர் பெருமானே! என்னை மன்னித்து விடுங்கள். இது என்னால் ஏற்பாடு செய்யப்பட்ட செயல்! மூன்று மாதங்களுக்கு முன் நமக்குள் உண்டான சபதத்தை, தங்களுடைய அபிமானத்துக்கு உரிய இளைய ராணியைக் கொண்டு நிறைவேற்றி வைத்தேன்" என்றான்.

அறியாமையாலும் தெனாலிராமனின் சூழ்ச்சியாலும் தவறு செய்த மலைநாட்டுத் தலைவனும் அவர் மகளான இளைய ராணியும் அரசரால் மன்னிக்கப்பட்டனர்.

அரசர், தெனாலிராமனை மன்னித்துவிட்டு, "இராமா! பேச்சில் மட்டும் அல்ல, செயலிலும் கெட்டிக்காரன் என்பதை நான் தெரிந்து கொண்டேன்" என்றார்.

## 31

## தலையைக் காட்டாதே!

**ம**லைநாட்டுத் தலைவன் மகளைத் திருமணம் செய்தபோது தெனாலிராமன் செய்த செயலை அரசர் மன்னித்து விட்டார். ஆயினும் உள்ளூர அவன்மீது ஆத்திரம் இருக்கவே செய்தது. சந்தர்ப்பம் வாய்க்கும் போது அவனைப் பழிவாங்க எண்ணியிருந்தார்.

ஒரு சமயம் தெனாலிராமனிடம், "நாளை நடைபெற இருக்கும் அரச சபையில் என் முன் உன் தலையைக் காட்டாதே. மீறினால் உனக்குச் சவுக்கடி கிடைக்கும்" என்று எச்சரித்தார் அரசர்.

மறுநாள் அரசர், சபைக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும்போது, அங்கே தெனாலிராமன் தன்னுடைய கோமாளித்தனத்தால் எல்லோரையும் சிரிக்கும்படி செய்து கொண்டிருக்கிறான். அவனைச் சுற்றிலும் பலர் கூடியுள்ளனர் என்பதை அரசர் கேள்வியுற்றார்.

'முட்டாள்! என் எச்சரிக்கையையும் மீறி வந்திருக்கிறானே' என்று கோபத்தோடு அரசர், சபையினுள் நுழைந்தார்.

தெனாலிராமனைச் சுற்றியிருந்த கூட்டம் விலகியது.

ஒரு பானையை தன் தலை மீது கவிழ்த்துக் கொண்டு தெனாலிராமன் நின்று கொண்டிருந்தான்.

"இராமா! இது என்ன கோமாளிக் கூத்து என்னுடைய எச்சரிக்கையை மீறிச் சபைக்கு வந்ததற்காக நீ சவுக்கடி வாங்கிக்கொள். இந்தத் தடவை நீ தப்ப முடியாது" என்றார் கோபத்தோடு.



RangaRakes tamilnavarasam.com

மன்னர் பெருமானே! என் மீது வீணாகக் கோபித்துக்கொள்ளாதீர்கள். தங்கள் உத்தரவுப்படியே நான் நடந்துகொண்டிருக்கிறேன். என் தலையைக் காட்டக் கூடாது என்று உத்தர விட்டீர்கள். அதற்காக என் தலையைப் பானையால் மூடிக்கொண்டிருக்கிறேன். என் தலை இப்பொழுது உங்களுக்குத் தெரிகிறதா?" என்று நிதானமாகக் கூறினான் தெனாலிராமன்.

அரசர் சிரிப்பை அடக்கிக்கொண்டு, பைத்தியக் காரனிடமும், விகடகவியிடமும் கோபம் கொள்வதில் பயன் இல்லை என்று எண்ணினார்.

## 32

# அரச குருவின் கலக்கம்

**வி**ஜயநகரில் நவராத்திரி விழாக் கொண்டாட்டத்தின்போது கலைஞர்கள், அறிஞர்கள், தத்துவஞானிகள் ஆகியோருக்கு அரசர் பரிசுகள் அளித்து கௌரவிப்பது வழக்கம்.

அரசருடைய மகள் இளவரசி மோகனாங்கி சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்தவள். அவளுடைய சிறப்பு விருந்தினராக தஞ்சாவூரிலிருந்து தத்துவஞானி ஒருவர் வந்திருந்தார்.

'தஞ்சையிலிருந்து வந்திருக்கும் பண்டிதர் தத்துவஞானத்திலும் மத விஷயத்திலும் என்னைச்



சுலபமாய்த் தோற்கடித்து விடுவார்' என்று கருதியே மோகனாங்கி அவரை வரவழைத்திருக்கிறாள். ஆகையால் ஏதாவது காரணத்தைக் கூறி, சபையில் நடைபெறப் போகும் விவாதத்திற்கு நான் போகாமல் இருந்தால் தான் என் பெருமையைக் காப்பாற்றிக்கொள்ள முடியும்' என்று தமக்குத்தாமே புலம்பிக்கொண்டிருந்தார் அரச குரு.

அரச குருவின் நெருங்கிய நண்பனான ரங்காச்சாரியை வரவழைத்து, விவரத்தைக் கூறி, "இப்பொழுது நான் என்ன செய்வது?" என்று ஆலோசனை கேட்டார்.

அதற்கு ரங்காச்சாரி, "தங்களைப் பெருமைப் படுத்தக் கூடிய ஒரு காரணத்தை, தாங்கள் வராததற்காக நான் எடுத்துக் கூறுகிறேன்" என்றான்.

அரச சபை கூடியது. அரச குரு தாத்தாச்சாரியார் வரவில்லை.

ரங்காச்சாரி எழுந்து, "அரச குரு அதிகமான சிந்தனையில் ஈடுபட்டதால், அவருக்கு மூளைக் கொதிப்பு ஏற்பட்டு, அதனால் அவர் துன்புற்றுக் கொண்டிருக்கிறார். அதனால் அவர் வர இயலவில்லை" என்றான்.

அதைக் கேட்ட அரசர், "என்ன வேடிக்கை! இத்தகைய ஒரு நோயைப் பற்றி நான் கேள்விப்பட்டதே இல்லை. அப்படி ஒரு நோய் இருப்பதாகவும் எனக்குத் தோன்றவில்லை" என்றார்.

RangaRakes tamilnavarasam.com

"மன்னர் பிரானே! அப்படி ஒரு நோய் இருக்கக் கூடும். ஏனெனில், நான் அதிகமாகப் படிப்பதன் பயனாக, எனக்குக் கண் கொதிப்பு உண்டாக, நான் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறேன்" என்றான் தெனாலிராமன்.

"என்ன முட்டாள்தனம்! நீ படித்தே நான் பார்த்ததில்லையே" என்றார் அரசர்.

சபையில் இருந்தோர் அனைவரும் சிரித்தனர்.

"அரசர்பிரானே! அரச குரு அதிகமான சிந்தனையில் ஈடுபட்டதை எப்பொழுதாவது தாங்கள் பார்த்தது உண்டா?" என்று கேட்டான் தெனாலிராமன். மீண்டும் சபையில் சிரிப்பு.

"மிகப் பெரிய தீர்க்கதரிசிகளான சங்கரர், இராமானுஜர், மத்வாச்சாரியார் போன்றோருக்கு உண்டாகாத மூளைக் கொதிப்பு நம்முடைய தாத்தாச்சாரியருக்கு ஏற்பட்டிருக்கிறது. தெனாலி ராமனைக் காட்டிலும் அதிகமாகப் படித்திருக்கும் இந்தத் தீட்சிதருக்குக் கண் எரிச்சல் உண்டானதே இல்லை. இவையெல்லாம் புரிந்துகொள்ள முடியாத புதிராக இருக்கிறதே" என்று அரசர் கூறினார்.

"அரசர் பெருமானே, அதில் ஒரு புதிரும் இல்லை. படிப்பின் காரணமாகவோ, சிந்தனையினாலோ நோய் உண்டாவதில்லை. தங்களைப் பற்றி அதிகமாக நினைத்துப் பெருமைப்பட்டுக் கொள்வதனால்தான் மூளைக் கொதிப்பு ஏற்படுகிறது" என்றான் தெனாலிராமன். சபையிலிருந்தோர் அனைவரும் கர ஒலி எழுப்பினர்.

"இராமா! அரச குரு முக்கியமானவர்களில் ஒருவர் என்பதை மறந்து நீ அவரைப் பரிகாசம் செய்வது தவறு" என்றான் ரங்காச்சாரி.



"முக்கியமானவர்கள், பெரியவர்கள் என்று மக்களால் கூறப்படாமல் சிலர் தங்களைத் தாங்களே பெரிய மனிதர்களாகக் கருதிக் கொள்கின்றனர்" என்றான் தெனாலிராமன்.

"இராமா எப்படியிருந்தபோதிலும், உன்னைக் காட்டிலும் அவருக்கு அதிகமான மதிப்பு இருக்கிறது. ஏனென்றால், அவர் கருத்துக்கள் முதலில் கவனிக்கப்படுகின்றன. ஆகையால், அவர் உன்னைக் காட்டிலும் சிறந்தவரே" என்று வாதித்தான் ரங்காச்சாரி.

அதனால், அரச குருவின் முக்கியத்துவம் தெரிகிறதா? "நாம் முகம் கழுவுவதற்கு முன்னால் முதலில் கை கால்களைத்தான் கழுவிச் சுத்தம் செய்து கொள்கிறோம். அதனால் அவை முகத்தை விடச் சிறந்தது என்று கூற முடியுமா?" என்று கேட்டான் தெனாலிராமன். சபையோர் கரவொலி எழுப்பி ஆரவாரம் செய்தனர்.

ரங்காச்சாரியால் மேற்கொண்டு எதுவும் பேச முடியவில்லை.

தெனாலிராமன் சுடச் சுடக் கிண்டலாகக் கூறியவற்றை சபையோர் மிகவும் ரசித்தனர்.

அரச குரு சபைக்கு வராதது அவருக்குப் பெரிய ஏமாற்றமே.

தஞ்சாவூர் தத்துவ நிபுணருக்குப் பயந்தே அரச குரு வரவில்லை என்று அரசர், அரசிளங்குமரி மற்றும் சபையோர் அனைவரும் கருதிவிட்டனர்.

RangaRakes

tamilnavarasam.com

# 33

## புதுமையான ஓவியம்

**கோ**டை காலத்திதல் அரசர் வசிப்பதற்காக புதிய அரண்மனை ஒன்று நிர்மாணிக்கப் பெற்றது. அதில் ஒரு பகுதியில் சித்திரக் கூடம் ஒன்று அமைக்கப்பெற்றது. வட இந்தியாவிலிருந்து வந்த ஓவியன் ஒருவன் பல வண்ணங்களில் மங்கையர் மற்றும் மகாபாரதம், இராமாயணம் முதலியவற்றிலிருந்து சில நிகழ்ச்சிகளைத் தீட்டியிருந்தான்.

அரசர் அமைச்சர்களுடன் சென்று அந்த ஓவியங்களைப் பார்வையிட்டார். தெனாலிராமனும் உடன் சென்றிருந்தான்.

ஒவ்வொன்றாக அரசர் பார்த்துக் கொண்டு இருக்கும்போது, "நான் தத்ரூபமாக வரைந்து உள்ளேன். இதைப் போன்ற ஓவியங்களைத் தென்னாட்டில் எவராலும் தீட்ட முடியாது" என்று அகம்பாவத்தோடு கூறினான் வடநாட்டு ஓவியன்.

உடனே தெனாலிராமன், "தத்ரூபமான ஓவியங்கள் என்று நீரே புகழ்ந்து கொள்கிறீர். சில ஓவியங்கள் முன்புறம் மட்டுமே காணப்படுகின்றன. அவற்றின் பின்புறம் எங்கே?" என்று கேட்டான்.



அதற்கு ஓவியன், "உமக்குக் கலையறிவு போதாது. ஓவியங்களின் பின் புறத் தோற்றங்களையும் உறுப்புகளையும், கற்பனைக் கண்ணால் கண்டு களிக்க வேண்டும்" என்று பதில் அளித்தான்.

அரசரும் புன்னகையோடு ஓவியன் கூற்றை ஆமோதிப்பவர் போல் "ராமா! உனக்கு நகைச் சுவையாகவும், குறும்பாகவும் பேசத் தெரியுமே தவிர ஓவிய ரசனை கிடையாது. கலைகளை ரசிக்க தனியான மனோபாவம், கற்பனை வளமும் இருக்க வேண்டும்" என்று கூறினார்.

தெனாலிராமன், அரசர் கூறியதை ஆமோதிப்பவன் போல் மௌனமாக இருந்து விட்டான்.

சில மாதங்களுக்குப் பிறகு அரசரிடம் வந்து, தான் சித்திரக் கலையைக் கற்றுக் கொண்டிருப்பதாகவும், வடநாட்டுச் சித்திரங்களையும் மிஞ்சும்படி தன்னால் ஓவியங்களைத் தீட்ட முடியும்" என்றும் தெரிவித்தான் தெனாலிராமன். மேலும்,

அரசருடைய அனுமதி பெற்று, முன்பு வடநாட்டு ஓவியன் தீட்டியிருந்த ஓவியங்களை அழித்து விட்டு, புதுச் சித்திரங்களை வரையலானான் தெனாலிராமன். அவை மிகவும் விசித்திரமாகவும் வேடிக்கையாகவும் இருந்தன. ஒரு கால், ஒரு கை, ஒரு தோள், ஒரு இடை, ஒரு பாதி முகம் இவ்வாறு ஒன்றுக்கு ஒன்று தொடர்பு இல்லாமல், தனித்தனி உறுப்புகளாகக் கிறுக்கி வைத்திருந்தான்.

RangaRakes
tamilnavarasam.com

அவற்றைப் பார்வையிடுமாறு அரசரை அழைத்தான் தெனாலிராமன்.

அமைச்சர்கள், கலைஞர்கள், பழைய ஓவியர் ஆகியோர் சூழ அரசர் வந்து சித்திரங்களைப் பார்த்தார்.

எல்லாமே அரை குறையாக இருந்தன. "இராமா! சித்திரங்கள் யாவும் இன்னும் பூர்த்தியாகவில்லையா? மற்ற உறுப்புகள் எங்கே?" என்று கேட்டார் அரசர்.

"அரசர் பெருமானே! அவை மறைந்திருப்பதாகப் பாவனை! கலையறிவுள்ளோர் அவற்றைக் கற்பனைக் கண்ணால் காண வேண்டும்" என்று குறும்பாகக் கூறினான் தெனாலிராமன்.

அரசர் உணர்ந்து கொண்டார். கோபமும் சிரிப்பும் கலந்து வந்தது. அதை வெளியே காட்டாமல், சித்திரக்கூடத்தைப் பாழடித்ததற்காக தெனாலிராமனைக் கடிந்து கொண்டு, அவன் தலையை வெட்டுமாறு உத்தரவிட்டார்!

## 34

## தலை தப்பியது

அரசரின் உத்தரவுப்படி, தெனாலிராமனின் தலையை வெட்டுவதற்காக, காவலாளிகள் இருவர் அவனை அழைத்துச் சென்றனர்.



அந்தக் காவலர்கள் இருவரும் முன்பு தெனாலிராமனின் தந்திரம் காரணமாகச் சவுக்கடி பட்டவர்கள். ஆகையால், இப்பொழுது அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததால், தன் தலையை வெட்டாமல் விடமாட்டார்கள் என்று எண்ணினான்.

காவலர்களுடன் அரசரிடம் சென்று, மன்னர் பிரானே! நான் சாகப் போகும் தருணத்தில் இறுதியாக ஓர் வேண்டுகோள். நான் இத்தனை ஆண்டுகளாக சூரிய பகவானை தியானித்து வழிபட்டதே இல்லை. இறக்கும்போது, கழுத்து அளவு தண்ணீரில் நின்றுகொண்டு, பிரார்த்தனை செய்த படியே உயிர் நீத்தால் மன அமைதி பெறுவேன்" என வேண்டிக் கொண்டான் தெனாலிராமன்.

அரசரும் அப்படியே அனுமதி அளித்தார்.

காவலர் இருவரும் உருவிய வாளுடன் தெனாலிராமனைக் கூட்டிக்கொண்டு ஆற்றுக்குச் சென்றனர். தெனாலிராமன் கழுத்து அளவு தண்ணீரில் நின்று கொண்டு, "காவலாளிகளே! எனக்கு இருபுறமும் நீங்கள் பாதுகாப்பாக வாளை ஏந்தியபடி நின்று கொள்ளுங்கள். என் பிரார்த்தனை முடிந்ததும், வெட்டுங்கள் என்று கூறுகிறேன். நீங்கள் இருவரும் உடனே என்னை வெட்டிவிடுங்கள்" என்று கூறி விட்டு பிரார்த்தனையில் ஈடுபட்டான்.

பிரார்த்தனை எப்பொழுது முடியும், வெட்டுங்கள் என்று எப்பொழுது சொல்வான் என்று நீண்ட வாளுடன் இருவரும் காத்திருந்தனர்.

RangaRakes tamilnavarasam.com

ஒரு மணி நேரம், பிரார்த்தனை செய்பவன் போல் கழுத்து அளவு தண்ணீரில் நின்று கொண்டிருந்த தெனாலிராமன், 'வெட்டுங்கள்' என்று சொல்லிவிட்டு, சட்டென்று தண்ணீருக்குள் மூழ்கிவிட்டான். உடனே ஒரே சமயத்தில் கத்திகளை வீசிய காவலர்கள் தங்கள் தலைகளை வெட்டிக்கொண்டு வீழ்ந்தனர்.

மறுநாள், அரசரின் கோபம் தணிந்திருந்த சமயம் அறிந்து தெனாலிராமன் அரசரிடம் சென்று, "மன்னர் பெருமானே! பாழாக்கப்பட்ட ஒரு சித்திர கூடச் சுவரைக் காட்டிலும், ஒரு மனிதனின் உயிர் மதிப்பு வாய்ந்தது என்பதால், நான் தலை தப்பி வந்தேன்!" என்றான்.

வியப்படைந்த அரசர், "எவ்வாறு தப்பி வந்தாய்?" என்று கேட்டார்.

"என் தலையை வெட்டும்படி நீங்கள் அனுப்பி வைத்த காவலர்கள் மூடர்களாகவும், லஞ்சம் வாங்கும் முரடர்களாகவும் இருந்தபடியால், தங்கள் தலைகளையே வெட்டிக்கொண்டு அவர்கள் மடிந்தார்கள்" என்று நடந்ததை விவரித்தான் தெனாலிராமன்.

அரசர் மகிழ்ச்சி அடைந்து அவனை மன்னித்து விட்டார்.

## 35

## மணலா? சர்க்கரையா?

அரசருக்குப் புதுமையான பொருள்கள் மீது ஆசை உண்டாவது இயல்பு.



அதை அறிந்த அமைச்சர் ஒருவர், ஈரான் தேசத்திலிருந்து மிகவும் சுவையான சர்க்கரையை வரவழைத்து, அரசரிடம் அளித்தார்.

அரசர், சர்க்கரையைச் சுவைத்துச் சாப்பிட்டு விட்டு, அந்தப்புரத்திற்கும் அனுப்பி வைத்தார்.

சர்க்கரையை எறும்புகள் மொய்த்ததால், அதை முற்றத்தில் வெய்யிலில் காயவைக்கப்பட்டது.

அங்கே வந்த தெனாலிராமன், அதைப் பார்த்துவிட்டு, அது என்ன? என்று கேட்டான்.

"ஈரானிலிருந்து வந்த புதுமையான மணல்!" என்று வேடிக்கையாகச் சொன்னார் அரசர்.

உள்ளே சென்று, அரசர் இராணிகளிடம், "சர்க்கரையை மணல் என்று கூறி, தெனாலிராமனை ஏமாற்றிவிட்டேன். அவனும் நம்பி விட்டான்!" என்று பெருமையாகச் சொன்னார்.

"ஏன் அவ்வாறு சொன்னீர்கள்?" என்று கேட்டனர் இராணிகள்.

"அந்தப் புதுமையான சர்க்கரையை அவன் கேட்டால், என்ன செய்வது? அதற்காகவே அப்படிச் சொன்னேன்" என்றார் அரசர்.

அப்பொழுது வெளியே இராணிகள் எட்டிப் பார்த்தபோது, தெனாலிராமன், காயவைத்திருந்த சர்க்கரையை அள்ளி வாயில் போட்டுச் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அரசரிடம் அதைத் தெரிவித்தார்கள் இராணிகள்.

RangaRakes tamilnavarasam.com

அரசர், தெனாலிராமனைப் பார்த்து, "என்ன செய்து கொண்டிருக்கிறாய்" என்று கேட்டார்.

"அரசே! என் வீட்டு எருமைக் கன்றுக்குட்டி ஒன்று இறந்து விட்டது. அந்தத் துக்கம் தாளாமல், இந்தப் புதுமையான மணலைத் தின்று கொண்டிருக்கிறேன்" என்றான்!

"இராமா! உன்னை ஏமாற்றவே முடியாது போலும்!" என்று கூறி, சர்க்கரையை எடுத்து உள்ளே வைக்கும்படி சொன்னார்.

'மிகவும் சுவையாக இருக்கிறது!" என்று கூறிச் சிரித்தான் தெனாலிராமன்.

## 36

## கொட்டாவி விடாதவர் யார்?

**அ**ரசருடைய பட்டத்து ராணியான திருமலாம்பாள் தேவி ஒரு நாள் இரவு அரசருடன் உல்லாசமாக இருக்கும்போது, கொட்டாவி விட்டார். அரசர் அதைக் கண்டு அருவருப்புற்றார். 'சோம்பல் காரணமாக அல்லது தூக்கக்கலக்கத்தில் கொட்டாவி விடுவது மனித இயல்பு' என்று சமாதானம் கூறினாள் இராணி. அரசர் அதை ஏற்காமல் அந்தபுரத்திலிருந்து வெளியேறி விட்டார். பல நாட்கள் வரை இராணியை நெருங்காமலேயே இருந்து வந்தார்.



இந்த நிகழ்ச்சியைத் தன்னுடைய அந்தரங்கத் தோழி மூலமாகத் தெனாலிராமனுக்குத் தெரிவித்தாள் இராணி. மேலும், கிருஷ்ணலீலாவில் ருக்மணி, சத்திய பாமாவுக்கிடையே நிகழ்ந்த பாரிஜாத நிகழ்ச்சியை கவிதையாக எழுதி, அரசருடைய மனத்தை மாற்றலாமா என்றும் ஆலோசனை கேட்டிருந்தாள் இராணி. 'எனக்குக் கவிதை எழுதத் தெரியாது. ஆனால், எப்படியாவது, அரசருடைய மனம் திருந்தும்படி செய்கிறேன்' என்று ஆறுதல் சொல்லி அனுப்பினான் தெனாலிராமன்.

ஒரு நாள் அரச சபையில், அமைச்சர்கள் மற்றும் வேளாண்மைத்துறை அதிகாரிகள் ஆகியோருடன், பஞ்சப்பகுதியான இராயலசீமைப் பகுதியில், நெல் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டம் பற்றி அரசர் விவரித்துக் கொண்டிருந்தார்.

தெனாலிராமன் அங்கே வந்து, ஒரு பொட்டலத்தை அவிழ்த்துக் காட்டி, "இது ஒரு புது வகையான நெல். தமிழ் நாட்டின் வளமான பகுதியான தஞ்சாவூரிலிருந்து கொண்டு வரப்பட்டது. இந்த வகையான நெல்லை விதைத்துச் சாகுபடி செய்தால் முப்போகம் விளையும். மூன்று மடங்கு அதிகமான விளைச்சல் உண்டாகும். ஆனால், இந்த அற்புதமான நெல்லை விதைத்துத் தண்ணீர் பாய்ச்சி, அறுவடை செய்பவர்கள் கொட்டாவியே விடாதவர்களாக இருக்க வேண்டும்."

"என்ன முட்டாள்தனம்! அப்படிப்பட்ட ஒரு மனிதன் உலகில் இருக்க முடியுமா?" என்று அரசர் கேட்டார்.

RangaRakes tamilnavarasam.com

"அரசர் பிரானே! என்னே என் அறியாமை! தக்க சமயத்தில் தாங்கள் எடுத்துக் கூறியது மிகுந்த பயனை அளிக்கக்கூடியது. நான் செய்த ஒரு முட்டாள்தனமான காரியத்துக்கு பட்டத்து ராணியார் திருமலாம்பாள் தேவியார் அவர்களிடம் கூறி நான் மன்னிப்பு வேண்டிக் கொள்ள வேண்டும்" என்று எதுவுமே அறியாதவன் போல் கூறினான் தெனாலிராமன்.

அமைச்சர்கள் முதலானோருக்கு தெனாலிராமன் கூற்று ஒன்றுமே புரியவில்லை.

ஆனால், அரசர் இராணியிடம் தாம் நடந்து கொண்டதற்கு அறிவுறுத்தவே, தெனாலிராமன் அவ்வாறு கூறினான் என்பதை உணர்ந்தார். மனம் மாறி, பட்டத்து ராணியின் அந்தப்புரத்துக்குச் சென்றார். தெனாலி ராமனின் மதி நுட்பத்தை இராணியிடம் தெரிவித்தார்.

இராணியிடமிருந்து தெனாலிராமனுக்குப் பரிசுகள் கொண்டு வந்தாள் அந்தரங்கத் தோழி.

## 37

## குளிர் காய வசதி

**அ**ரசருடைய படை வீரர்கள் இராம துருக்கத்தில் முகாம் இட்டிருந்தனர்.

RangaRakes



குதிரைச் சவாரி செய்து அந்த இடத்திற்கு வந்தான் தெனாலிராமன். மழையில் நனைந்து, குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தான்.

அரண்மனை அதிகாரிகளுக்கு என்று குறிப்பிடப்பட்டிருந்த சாவடியில், நெருப்புக் குண்டத்தின் அருகில் அனைவரும் குளிர் காய்ந்து கொண்டு இருந்தனர். அதோடு இறைச்சித் துண்டுகளை நெருப்பில் சுட்டுத் தின்று கொண்டிருந்தனர்.

தெனாலிராமன் அவர்களிடம் சென்று, "என் குதிரை பட்டினியால் வாடிக் கொண்டிருக்கிறது. அதற்குக் கொஞ்சம் இறைச்சித் துண்டங்களைத் தர முடியுமா?" என்று கேட்டான்.

அவர்கள் ஆச்சரியத்தோடு, "உம்முடைய குதிரை மாமிசம் தின்னுமா?" என்று கேட்டனர்.

"நீங்கள் சென்று, கொடுத்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்" என்றான் தெனாலிராமன்.

கொஞ்சம் மாமிசத் துண்டங்களை எடுத்துக் கொண்டு நான்கு, ஐந்து பேர் குதிரையைக் கட்டி இருந்த இடத்திற்குச் சென்றனர்.

காலியான இடத்தில் தெனாலிராமன் வசதியாக அமர்ந்து குளிர் காய்ந்தான்.

சிறிது நேரத்தில், திரும்பிய அதிகாரிகள் "நாங்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் உம்முடைய குதிரை இறைச்சித் துண்டங்களைத் தின்னவில்லையே" என்றனர்.

tamilnavarasam.com

"அதனுடைய சொந்தக்காரன் வசதியாகக் குளிர் காய்ந்து கொண்டிருப்பதால், வழக்கம்போல் தனக்குக் கொள்ளும் புல்லும் கிடைக்கும் என்று இறைச்சித் துண்டங்களைச் சாப்பிடவில்லை போலும்!" என்று சிரித்துக் கொண்டே சொன்னான் தெனாலிராமன்.

தான் குளிர் காய்வதற்காக, இப்படி ஒரு தந்திரத்தைக் கையாண்டான் தெனாலிராமன்.

38

## தனக்கு வந்தால் தெரியும்.

ஒரு நாள் அரசரும், தெனாலிராமனும் உலாவச் சென்றனர். இருவரும் பேசிக்கொண்டே போய்க் கொண்டிருந்ததால், தெருவின் ஓரத்தில் இருந்த அசுத்தத்தைத் தெனாலிராமன் மிதித்து விட்டான்.

உடனே ஓடிப்போய், அருகில் இருந்த வாய்க் காலில், கால் கட்டைவிரலைத் தேய்த்துக் கழுவிக் கொண்டு திரும்பினான்.

"நீ எவ்வளவுதான் கழுவினாலும் உன் விரலில் உள்ள அசுத்தம் முழுதும் போகாது. அந்த அசுத்தம் நீங்குவதற்கு ஒரே வழி, அந்தக் கட்டைவிரலை நீக்கிவிட வேண்டியதுதான்" என்றார் அரசர்.

RangaRakes



"நான் தான் மண்ணில் தேய்த்து, தண்ணீரில் சுத்தமாகக் கழுவி விட்டேனே, பிறகு என்ன?" என்றான் தெனாலிராமன்.

"எப்படிக் கழுவிய போதிலும் துளி அளவாயினும் அசுத்தம் உள்ளே சென்றிருக்கும். அந்த அசுத்தமான விரலுடன் உயர்ந்த கம்பளங்கள் விரிக்கப்பட்டிருக்கும் என் சொந்த அறைக்குள் நீ வரவே கூடாது" என்று கூறி முகத்தைச் சுளித்தார் அரசர்.

நம்முடைய உடலில் இருக்கும் அசுத்தத்தை முற்றிலுமாக அகற்ற முடிவதில்லையே? அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? என்றான் தெனாலிராமன்.

"அது அவரவர் உடலோடு ஒட்டிய அசுத்தம். பிறருடைய அசுத்தத்தைப்பற்றி அல்லவா நான் சொல்கிறேன்" என்றார் அரசர்.

"அரசே! உங்கள் கருத்து தவறானது என்பதை, நீங்களே உணரக் கூடிய சந்தர்ப்பம் வரக்கூடும். அதுவரை காத்திருப்போம்" என்றான் தெனாலிராமன்.

சில மாதங்கள் கடந்தன. எனினும், தெனாலிராமன் அந்த நிகழ்ச்சியையும், உரையாடலையும் மறக்கவில்லை. ஆனால், அரசரோ அதை மறந்து விட்டார்.

அழகான ரோஜாமலர்கள் கொண்ட சில செடிகளைக் கொண்டுவந்து, அசுத்தம் நிறைந்த குழியில் வைத்து, அதைச் சுற்றிலும் பசும்புல்லோடு கூடிய மண்ணைப் பரப்பி, மேல் பகுதியை மூடி வைத்தான் தெனாலிராமன்.

tamilnavarasam.com

ஒரு நாள் அரசரிடம் சென்று "ஒரு இடத்தில் அழகான ரோஜாச் செடிகளைக் கண்டேன். ரோஜா மலர்களோ கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. உங்களுக்கு ரோஜாமலர்களின் மீது பிரியமாயிற்றே வந்து பாருங்கள்" என்று அழைத்தான் தெனாலிராமன்.

அரசரும் தயங்காமல் உடனே அவனுடன் சென்றார்.

ரோஜாமலர்களைக் கண்டு அற்புதமான மலர்கள் என்று கூறி மகிழ்ந்தார். மலர்களைப் பறிக்க அருகில் சென்றார். அப்படியே அந்தக் குழியில் விழுந்து விட்டார். இடுப்பு அளவு குழி. அரசரால் எழுந்திருக்க முடியவில்லை.

"இராமா! என்னை வெளியே தூக்கி விடு" என்றார் அரசர்.

"அரசர் பிரானே! சற்றுப் பொறுங்கள். கத்தி எடுத்து வருகிறேன்" என்றான் தெனாலிராமன்.

"எதற்காக?" என்று கேட்டார் அரசர்.

"அசுத்தமாகிவிட்ட பகுதிகளை வெட்டி விடுகிறேன். முன்பு நீங்கள் சொல்லியிருக்கிறீர்களே, நினைவு இருக்கிறதா?" என்று கேட்டான்.

"இராமா! இப்பொழுதுதான் எனக்கு நினைவு ஏற்படுகிறது. தவறான என் எண்ணத்தை மாற்றிக் கொள்கிறேன். அசுத்தமான பகுதியைத் தேய்த்துக் கழுவிவிட்டால், போதும். அதை வெட்ட வேண்டியது இல்லை. மற்றவர்கள் பார்ப்பதற்கு முன் என்னைத் தூக்கிவிடு" என்று கேட்டுக் கொண்டார் அரசர்.





தெனாலிராமன் உடனே அரசரைத் தூக்கி விட்டான்.

அருகில் இருந்த தெனாலிராமன் வீட்டிற்குச் சென்று அரசர் குளித்து, உடை மாற்றிக் கொண்டிருந்தார். அதற்குள் அரண்மனையிலிருந்து ராஜ உடைகள் வந்து சேர்ந்தன. அவற்றை அணிந்து கொண்டு அரசர் புறப்பட்டுச் சென்றார்.

## 39

## மாறுவேடத்தில் ஒற்றன்

**வி**ஜயநகர அரசர் ரெய்ச்சூர், பீஜப்பூர், கோல் கொண்டா ஆகியவற்றைப் பிடிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்து கொண்டிருந்தார்.

தமக்குக் கீழ் உள்ள இரு நூறு ராஜப் பிரதி நிதிகளுக்குப் பணமும் பட்டாளமும் அனுப்பி வைக்குமாறு செய்தி அனுப்பினார் அரசர்.

போருக்கான ஆயத்தங்கள் பெரும் அளவில் இருந்தன. அரசரிடம் இருக்கும் செல்வமும் அளவிட முடியாதது. அவருடைய ஆற்றலோ அனைவரும் கண்டு வியக்கத்தக்கதாகும்.

இத்தகைய வலிமையை உணர்ந்த பீஜப்பூர் சுல்தான், ராஜா சாகிப் என்னும் திறமையுள்ள முஸ்லிம் உளவாளியை அந்தணனைப் போல் வேடம் அணிந்து, விஜயநகரம் சென்று, அங்கே அரசருடைய ஆதரவைப் பெற்று, சந்தர்ப்பம் வாய்க்கும் போது அரசனைக் கொன்று விடுமாறு அனுப்பி வைத்தான்.

அரசர் கொல்லப்பட்டு விட்டால், படையெடுப்பு நின்றுவிடும். மேலும், அங்கு பெருங் குழப்பம் ஏற்படும். அப்பொழுது விஜயநகரத்தை வெற்றியோடு தன் கைப்பற்றி விடலாம் என்ற எண்ணத்திலேதான் சுல்தான் உளவாளியை அனுப்பிவைத்தான்.

ராஜா சாகிப் மதுரையைச் சேர்ந்தவன். விஜயநகர அரசரால் அடியோடு அழிக்கப்பட்ட மதுரைச் சுல்தான் வம்சத்திற்கு நெருங்கிய உறவினன். மேலும் தன் மூதாதையரை அழித்தவர்களை பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று அவன் தீர்மானித்துக் கொண்டான்.

அவன் மத வைராக்கியம் உள்ள கருப்பு முஸ்லிம். தமிழ் நாட்டுப் பிராமணர்களுடைய பழக்க வழக்கங்கள், சடங்குகள் ஆகியவற்றை அவன் நன்றாக அறிவான். ராஜா சாகிப், தமிழ் நாட்டுப் பிராமணனைப் போல் வேடம் தரித்து நடித்து, பரந்த மனப்பான்மையும் படித்தவர்களிடம் பற்றுதலும் உடைய விஜயநகர அரசரின் அன்பையும் ஆதரவையும் பெற்றான்.

சமஸ்கிருதப் பயிற்சியும், புராணங்கள், சாஸ்திரங்கள், நாடகங்கள், வேதங்கள் ஆகியவற்றிலிருந்து



மேற்கோள் எடுத்துக் காட்டிப் பேசி சிறந்த பிராமணன் என்ற கருத்தை உறுதிப்படுத்தினான். ராஜா சாகிப் என்னும் தன்னுடைய பெயரை 'ராஜா அய்யர்' என்று மாற்றிக் கொண்டான். இரவிலோ பகலிலோ எந்த நேரத்திலும், அரண்மனைக்குச் சென்று வருவதற்கு அரசரிடமிருந்து அனுமதியும் பெற்றான்.

தன்மீது சந்தேகம் ஏற்படாத முறையில் மிகவும் எச்சரிக்கையோடு நடந்து கொண்டான்.

அரசரைத் தாக்குவதற்குத் தகுந்த இடத்தைக் கண்டுபிடிக்க, அரசர் இல்லாத சமயத்தில், அரண்மனையின் பல பகுதிகளையும் ஆராயத் தொடங்கினான்.

அரசரை அனைவரும் நேசித்தனர். அரசரும் எல்லோரையும் விரும்பினார். அதனால், அரசரைச் சுற்றி எப்பொழுதும் கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். அவர்களைத் தவிர, தெனாலிராமனும் அரசரை விட்டுச் சிறிது நேரம் கூடப் பிரியாமல் இருந்து வந்தான். இதனால் ராஜா அய்யன் திட்டம் தடைப்பட்டது.

தெனாலிராமனிடம் ராஜா அய்யனுக்கு வெறுப்பு. தெனாலிராமனும் அதை உணர்ந்ததோடு, அவன் ஒரு முஸ்லிம் வேடதாரியாக இருக்கலாம் என சந்தேகித்தான்.

ஒரு நாள் அரசர் முன்னிலையில், ராஜா அய்யனிடம் " நான் சுக்ல யஜுர் வேதம், கௌண்டின்ய கோத்திரத்தைச் சேர்ந்தவன். உம்முடைய வேதம், கோத்திரம் யாது?" என்று கேட்டான் தெனாலிராமன்.

RangaRakes
tamilnavarasam.com

அதற்கு ராஜா அய்யன், "நான் கிருஷ்ண யஜுர் வேதம், சாங்கிரிதி கோத்திரத்தைச் சேர்ந்தவன்" என்று பதில் அளித்தான்.

அதைக் கவனித்துக் கொண்டிருந்த அரசர் புன்னகையோடு தெனாலிராமனிடம், "இந்தப் பதில் எனக்கு முன்னரே தெரியும். நீ சிவப்பாயிருக்கிறாய்; சுக்ல யஜுர் வேதம். அவன் கறுப்பாயிருக்கிறான், அதனால் அவன் கிருஷ்ண யஜுர் வேதம்" என்று கூறினார்.

அனைவரையும் தான் ஏமாற்றிக் கொண்டு இருக்கிறோம் என்று பெருமையாக நினைத்து அகமகிழ்ந்து, ராஜா அய்யன் சபையை விட்டு வெளியே போனான்.

அப்பொழுது அரசர் "நீ ஏன் அவனிடம் அந்தக் கேள்வி கேட்டாய்?" என்று தெனாலிராமனிடம் கேட்டார்.

"அவன் ஒரு முஸ்லிம் உளவாளி என யூகிக்கிறேன். அதனால் அவ்வாறு கேட்டேன். அவனை முழுமையாக நம்புவதற்கு முன் நன்றாக ஆராய வேண்டும். தகுதி இல்லாதவர்களுக்குத் தாங்கள் அளிக்கும் சலுகைகள் தங்களுக்கே தீமையை உண்டாக்கும்" என்றான் தெனாலிராமன்.

"இந்தப் பைத்தியக்கார எண்ணம் உன்னை விட்டு எப்பொழுதுதான் நீங்குமோ?" என்றார் அரசர்.



தன்னுடைய சந்தேகம் மேலும் அதிகரித்து இருக்கிறது. ஆகையால், இன்னும் நன்றாக ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று கூறினான் தெனாலிராமன்.

"இது என்ன முட்டாள்தனம். பிராமணனுக்கு உரிய ஆசாரங்களை உன்னைவிடச் சிறப்பாகச் செய்கிறானே. அவனைச் சந்தேகிக்கலாமா?" என்றார் அரசர்.

"அதனால் அவன் பிராமணன் என்பது உறுதியாகி விடவில்லையே? பாசாங்கு செய்பவன் எல்லாச் சடங்குகளையும் எப்பொழுதும் செய்யத் தவற மாட்டான். துரோகிகளை நம்புவது ஆபத்தாய் முடியும் என்பது என் எண்ணம்" என்றான் தெனாலிராமன்.

"நீ சொல்வதிலும் ஓரளவு உண்மையும் இருக்கலாம். என்னைக் கொன்றுவிடுவதால் பீஜப்பூர் சுல்தானுக்கு என்ன லாபம்? ஆயிரக்கணக்கான வீரர்கள் அடங்கிய நம்முடைய படை இருக்கும்போது நான் ஏன் அஞ்ச வேண்டும்?" என்றார் அரசர்.

"ஒரு சிங்கம் ஆயிரம் ஆடுகளுக்குச் சமம். ஒரு பொருளின் மதிப்பு அதன் எண்ணிக்கையில் அல்ல. ஒற்றுமையே பலம். தாங்கள் இல்லாவிடில் நம்முடைய படையின் ஒற்றுமை குறையும். அப்பொழுது எதிரி எளிதில் தாக்கலாம். அவன் ஒரு உளவாளி என்பதை நான் நிரூபிக்கிறேன். அதற்கு அனுமதி தருவீர்களா?" என்று கேட்டான் தெனாலிராமன்.

"அதை எவ்வாறு செய்யப் போகிறாய்?" என்றார் அரசர்.

RangaRakes
tamilnavarasam.com

தீங்கற்ற ஒரு எளிதான பரிசோதனை மூலம் அவன் ஒற்றன், வேடதாரி என்பதை நிரூபித்து விடுகிறேன். ஏனெனில் உடலோடு பிறந்தது உடலை விட்டு ஒருபோதும் அகலாது அல்லவா?" என்றான் தெனாலிராமன்.

"நீ அவனைப் பரிசோதிக்க உத்தரவு அளிக்கிறேன். ஆனால் அவனுக்கு எவ்விதத் தீங்கும் நேரிடக்கூடாது. சோதனையின் போது நானும் இருப்பேன்" என்றார் அரசர்.

அரண்மனையின் ஒரு அறையில் ஒற்றன் தூங்கிக் கொண்டிருந்தான். அட்டைகள் மிதந்து கொண்டிருந்த குளிர்ந்த ஒரு சட்டி நிறைய உள்ள தண்ணீரை, திடீரென்று அவன் மீது கொட்டினான் தெனாலிராமன். எதிர்பாராத அதிர்ச்சியில் "அல்லா! அல்லா!" என்று உரக்கக் கூவிக் கொண்டே, தன் தலைமாட்டில் வைத்திருந்த கத்தியை எடுத்து, தெனாலிராமனை தாக்கச் சென்றான் ஒற்றனான ராஜா அய்யன். அதைக் கவனித்த அரசர், உடைவாளால், அந்த ஒற்றனின் தலையை வெட்டி வீழ்த்தினார்.

ஒற்றனின் சூழ்ச்சியைக் கண்டுபிடித்தற்காக அரசர் தெனாலிராமனைப் பாராட்டி பத்தாயிரம் பொன் பரிசு அளித்தார்.

அதன் பின், "அவன் ஒற்றன் என்பதை எவ்வாறு கண்டுபிடித்தாய்?" என்று அரசர் கேட்டார்.



"முன் ஒருசமயம், ஒரு ஒற்றன், என் உறவினன் போல் வந்து ஏமாற்றியது என் கண்களைத் திறந்தது. மேலும், சதிகாரர்கள் எப்பொழுதாவது ஒரு நாள் ஒரு வார்த்தையிலோ அல்லது ஒரு செய்கையிலோ அகப்பட்டுக் கொள்வது நிச்சயம். நான் ஒரு உண்மையான ராஜவிசுவாசி என்பதைக் காட்டுவதற்கு இந்தச் சந்தர்ப்பம் எனக்கு உதவியது" என்றான் தெனாலிராமன்.

மகிழ்ச்சி அடைந்தார் அரசர். அவர் எழுதிக் கொண்டிருந்த 'அமுக்த மால்யதா' என்று நூலில், "பிற ராஜ்யத்திலிருந்து புதிதாக வரும் பிராமணர்களை அரசன் எப்பொழுதும் நம்பக் கூடாது" என்று குறிப்பிட்டார்.

## 40

# மல்யுத்த சாஸ்திரம்

**டி**ல்லியிலிருந்து பிரசித்தி பெற்ற மல்யுத்த வீரன் ஒருவன் விஜயநகரத்திற்கு வந்தான்.

"என்னுடன் போட்டியிடக்கூடிய மல்யுத்த வீரன் எவனாவது இருந்தால் வந்து என்னுடன் மல்யுத்தம் நடத்தலாம்" என்று அவன் சவால் விட்டான்.

அவனுடைய சவாலைக் கேட்டதும், விஜய நகரத்தில் உள்ள எவரும் முன்வராமல் பயந்து விட்டனர்.

RangaRakes

tamilnavarasam.com

விஜயநகர சாம்ராஜ்யத்தின் தன்மானத்தைக் காக்க தெனாலிராமன் எழுந்து நின்று டில்லி மல்லனின் சவாலை ஏற்றுக் கொண்டான்.

மறுநாள், மல்யுத்த மேடைக்குத் தெனாலிராமன் வந்தான். அவனைப் பார்த்த டில்லி மல்யுத்த வீரன், "இந்த நோஞ்சானா என்னுடன் மல்யுத்தம் செய்ய போகிறான்?" என்று ஏளனமாகக் கேட்டான்.

அதற்குத் தெனாலிராமன், "மல்யுத்த வீரனே! நீ மற்போர் செய்வது சாதாரண பழக்கமான முரட்டுத்தனத்தாலா அல்லது மல்யுத்த சாஸ்திரப்படியா? மல்யுத்த சாஸ்திரம் கற்றிருந்தால், நோஞ்சான்கூட எந்த முரட்டு மல்லனையும், வெகு எளிதாக வெற்றிகொள்ள முடியும் என்பது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

மல்யுத்தவீரன், 'மல்யுத்த சாஸ்திரத்தை, தான் படித்திருப்பதாகப் பெருமைக்காகக் கூறினான்.

"அப்படியானால் சரி, மல்யுத்த முறையில், சாஸ்திரப்படி சில கைமுத்திரைகளைக் காண்பிக்கிறேன். அவற்றிற்கு, சாஸ்திரப்படி, என்ன பொருள் என்று முதலில் கூறு. அதன் பின் மல்யுத்தம் செய்யலாம்" என்றான் தெனாலிராமன்.

"சரி" என்றான் மல்யுத்த வீரன். அவனுக்கு வேறு வழி இல்லை.

உடனே தெனாலிராமன், மிக வேகமாக, மல்யுத்த வீரனின் கைவிரல்களை மடித்து முஷ்டியாக்கி தன் மார்பில் குத்தி, பிறகு இருகைகளையும் தோள்வரை தூக்கி



விரித்துக் காண்பித்துவிட்டு, பிறகு இடது கையின் ஆள்காட்டி விரலால் கழுத்தைச் சுற்றியபடி செய்து, வலது கையால் இடுப்பு உயரத்தில் கவிழ்த்துக் காண்பித்து, "இதற்கு என்ன பதில்?" என்று கேட்டான்.

மல்யுத்த வீரன் திருதிருவென்று விழித்து, "நாளை வந்து கூறுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

மறுநாள் அரண்மனை விளையாட்டுத் திடலில், மல்யுத்தப் போட்டியைக் காண மக்கள் திரளாகக் கூடியிருந்தனர்.

தெனாலிராமன் குறிப்பிட்ட நேரத்தில் வந்து விட்டான். ஆனால், டில்லி மல்யுத்த வீரன் வரவே இல்லை. மக்களின் ஆரவாரம் அதிகமாயிற்று. மல்யுத்த வீரன் தங்கியிருந்த வீட்டிற்குச் சென்று பார்த்தனர். முதல் நாள் இரவே, மூட்டையைக் கட்டிக் கொண்டு டில்லிக்குப் புறப்பட்டு விட்டதாகத் தெரியவந்தது.

அரசர் வியப்படைந்தார். தெனாலிராமனிடம், "இராமா! மல்யுத்த சாஸ்திரப்படி, நீ செய்து காட்டிய கைவரிசைகளின் பொருள் என்ன?" என்று கேட்டார்.

அதற்கு, "அரசர்பிரானே! அது ஒன்றும் பிரமாதம் அல்ல! 'நான் உன்னிடம் மல்யுத்தம் செய்தால் நீ என்னைக் குத்திக் கொன்று விடுவாய். நான் இரு கைகளையும் விரித்துக்கொண்டு கழுத்து முறிந்து மல்லாந்து விழுவேன். அவ்வாறு நான் இறந்து விட்டால் என் மனைவி மக்களை யார் காப்பாற்றுவார்?' இதுவே அதற்குப் பொருள். மேலும், மல்யுத்த சாஸ்திரம் என்று

RangaRakes

tamilnavarasam.com

ஒரு நூலே இல்லை" என்று கூறிச் சிரித்தான் தெனாலிராமன்.

"டில்லியிலிருந்து வந்த மிருக பலத்தை, விஜயநகரத்தின் புத்தி சாதுர்யம் வென்று விட்டது" என்று வியந்தார் அரசர்.

**41**

## பண்டிதருக்குத் தெரியாத நூல்

ஒரிஸா ராஜ்யத்திலிருந்து வித்யாசாகரர் என்னும் பண்டிதர் விஜயநகரத்துக்கு வந்தார்.

அவர், அரச சபையில் இருக்கின்ற புலவர்களைத் தம்மோடு விவாதப் போட்டிக்கு வருமாறு அழைத்தார்.

வித்யாசாகரர் சமஸ்கிருதம், இந்தி, உருது மொழிகளில் பண்டிதப் பட்டம் பெற்றவர். காசி, வங்காளம் முதலான பகுதிகளில் விவாதப் போட்டியில் கலந்து, வெற்றி பெற்று பல பரிசுகள் வாங்கிய மேதை.

அரசர் தம்முடைய அரச சபைப் புலவர்களை அழைத்து நகரத்திற்குத் தம்முடைய விருந்தினராக வந்துள்ள வித்யாசாகரப் பண்டிதரோடு விவாதப் போட்டியில் கலந்துகொள்ளுமாறு சொன்னார்.

"நாங்கள் ஒவ்வொரு துறையில் மட்டும் புலமை உடையவர்கள். வித்யாசாகரர் சகல கலா வல்லவர்" எனக்



கூறி, சபையிலுள்ள ஐந்து புலவர்களும் போட்டியில் கலந்து கொள்ள இயலாமையைத் தெரிவித்தார்கள்.

"நான் கற்ற சம்ஸ்கிருதம் சுத்தமானது அல்ல. வித்யாசாகரர் அதை நிராகரித்து விடுவார்" என்றார் புலவர் பெத்தண்ணா.

"ராணியுடன் கோபமுற்ற அரசரை சமாதானப் படுத்துவதற்காகக் கவிதை இயற்றுபவன் நான். வித்யாசாகரரோடு நான் எவ்வாறு வாதாட முடியும்?" என்றார் புலவர் திம்மண்ணா.

"நானோ புராணங்களை எழுதக்கூடியவன். வாதப் போட்டியில் கலந்து கொள்ளும் ஆற்றல் எனக்கு இல்லை" என்றார் புலவர் இராமபத்திரையா.

"நான் 'காளாஸ்திரி மகாத்மியம்' எழுதியுள்ளவன். ஆனால் வித்தியாசாகரரோ 'காளி மகாத்மியம்' எழுதியவர். அவர் எதிரில் நான் நிற்க இயலுமா?" என்றார் புலவர் தூர்ஜதி.

"நான் காவியங்களை இயற்றியவன் என்றாலும் வித்தியாசாகரர் தர்க்க சாஸ்திரத்திலும், தேர்ந்தவர். அவரோடு வாதாட என்னால் இயலாது" என்றார் புலவர் சூரண்ணா.

"நானோ கண்ணாடி வளையல் போன்றவன். அவரோ பளிங்குக்கல் போன்றவர். மோத இயலுமா?" என்றார் புலவர் பூஷணா.

RangaRakes tamilnavarasam.com

இவ்வாறு ஒவ்வொரு புலவரும், ஒவ்வொரு விதமாக, தங்களுடைய இயலாமையை வெளிப்படுத்தினார்கள்.

சபையிலுள்ள புலவர்களின் புலமையின்மையை அறிந்து, வியப்படைந்தார் அரசர். வித்தியாசாகரருடன் போட்டியிட ஒருவரும் இல்லையே என்று அரசர் கவலையில் ஆழ்ந்தார்.

இவற்றையெல்லாம் மௌனமாக இருந்து கேட்டுக் கொண்டிருந்த தெனாலிராமன், எழுந்து, அரசர் பெருமானே! கவலை வேண்டாம். வித்தியாசாகரருடன் நாளை போட்டியிடுகிறேன்" என்றான்.

அரசர் அவனைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தார்.

மறுநாள் அரச சபைக்கு வருமாறு வித்தியாசாகரருக்குத் தெரிவித்தனர்.

பண்டிதரைப் போல் உடை அணிந்து, பட்டுத் துணியால் சுற்றப்பட்ட சிறு மூட்டையைக் கையில் எடுத்துக் கொண்டு தெனாலிராமன் கம்பீரமாக சபைக்கு வந்தான். மற்ற புலவர்கள் அவனைப் பின் தொடர்ந்து வந்தனர். பார்வையாளர்களும் நிறைந்திருந்தனர்.

தெனாலிராமன் கையில் இருந்த மூட்டையை உற்றுப் பார்த்த வித்தியாசாகரர், "அது என்ன நூல்" என்று கேட்டார்.

அதற்கு, தெனாலிராமன், "இந்த நூலின் பெயர் திலகாஷ்ட மகிஷ பந்தனம்! இதன் உள்ளடக்கத்தைப்பற்றி நாளை, நாம் இருவரும் விவாதித்துப் போட்டியிடலாம். அந்த விவாதத்தில் வெற்றி கொள்ள முடியும் என்ற



துணிவு இருந்தால் நாளை, இங்கு வாரும்!" என்றான் தெனாலிராமன்.

சபை கலைந்தது. எல்லோரும் சென்று விட்டனர்.

இரவு முழுவதும் சிந்தனையில் ஆழ்ந்தார். 'நாம் இதுவரை கேள்விப்படாத நூலாக இருக்கிறதே!' திலகாஷ்ட மகிஷ பந்தனம் என்பதின் உட்பொருள் அவருக்கு விளங்கவே இல்லை. அதனால் குழப்பம் அடைந்தார். இவ்வளவு நாட்களாக நமக்கு இருக்கும் நற்பெயர் கெட்டுவிடக் கூடாதே என்று எண்ணினார். அவமானத்துக்கு அஞ்சி, பொழுது விடிவதற்குள், யாரிடமும் சொல்லிக் கொள்ளாமலேயே விஜய நகரத்தை விட்டுப் புறப்பட்டுவிட்டார் வித்தியாசாகரர்.

மறுநாள் சபை கூடியது. ஆனால் வித்தியாசாகரர் வரவில்லை. அவர் புறப்பட்டு விட்ட செய்தி தெரிந்தது.

அரசரும், அரச சபைப் புலவர்களும் தெனாலிராமனின் துணிவைப் புகழ்ந்து, "இராமா! உன் கையில் வைத்திருக்கும் பட்டுத்துணி மூட்டையைப் பிரித்துக் காட்டு. நீ சொன்ன நூலின் பெயர், இதுவரை கேட்டறியாத புதுமையாய் இருக்கிறதே?" என்றனர்.

பட்டுத்துணி மூட்டையைப் பிரித்து, அதில் உள்ள எள், விறகு, எருமை கட்டும் கயிறு முதலானவற்றை தெனாலிராமன் எடுத்துக் காட்டினான். அதைப் பார்த்ததும் எல்லோரும் திடுக்கிட்டனர்.

தெனாலிராமன் அமைதியாக, 'திலகம்' என்றால் எள்ளு; 'காஷ்டம்' என்றால், விறகு, மகிஷ பந்தனம் என்றால் எருமை கட்டும் கயிறால் கட்டப்பட்டிருக்கிறது

RangaRakes tamilnavarasam.com

என்று பொருள். இந்த உட்பொருளை உணர முடியாமல் பெரிய பண்டிதரான வித்தியாசாகரர் மிரண்டு ஓடிப்போனதில் ஆச்சரியம் இல்லை" என்று கூறிச் சிரித்தான்.

சபையோர் சிரித்து ஆரவாரம் செய்தனர்.

அரசர், தெனாலிராமனுக்கு மகிழ்ச்சியோடு பொன்முடிப்பு ஒன்றைப் பரிசாக அளித்தார்.

**42**

## தூக்குத் தண்டனை

**வி**ஜயநகரத்திற்குச் சிறப்பு அளிப்பது துங்கபத்திரா நதி ஆகும். அதன் மீது கட்டப்பட்டிருந்த பாலம் வெள்ளத்தால், இரண்டு முறை சேதம் அடைந்தது.

பாலம் அவ்வாறு அழிவதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்தனர். பாலத்தில் ஒரு முனி இருப்பதாகவும் அதற்கு நரபலி கொடுத்தால், பாலத்தை நிரந்தரமாகக் கட்டிவிட முடியும் என்று கட்டிட வேலையில் ஈடுபட்டோர் அரசரிடம் தெரிவித்தனர்.

அரசருக்குத் தெய்வபக்தி இருந்தபோதிலும், நரபலி கொடுக்க விரும்பாதவர். நரபலி என்பது மனிதனைப் பலி கொடுக்கும் கொடூரச் செயல். தம்முடைய நாட்டில் அது அடியோடு ஒழிக்கப் பட்டிருக்கிறது. இப்பொழுது எப்படி மீண்டும் செயல்படுத்துவது என்று அரசர் மிகவும் கவலையில் ஆழ்ந்திருந்தார்.



அப்பொழுது அங்கே வந்த தெனாலிராமன், அரசரிடம், "கவலை வேண்டாம். எல்லோருக்கும் திருப்தி அளிக்கக்கூடிய ஒரு திட்டத்தை நான் கூறுகிறேன்" என்றான்.

"அவ்வாறு நீ கூறும் திட்டம் ஏற்கக் கூடியதாயிருந்தால் உனக்கு ஆயிரம் பொன் பரிசு அளிக்கிறேன்" என்றார் அரசர்.

"கொலைக் குற்றம் புரிந்தவர்களை விசாரித்து, அவர்களுக்குத் தூக்குத்தண்டனை அளிப்பது அரசருடைய கடமை அல்லவா? அத்தகைய குற்றவாளி ஒருவனுக்குத் தூக்குத்தண்டனை அளிப்பதை, அந்தப் பாலத்தின் அடியில் நிறுத்தி, தூக்குத்தண்டனையை நிறைவேற்றி விடலாம். நரபலியும், தூக்குத்தண்டனையும் ஒரே சமயத்தில் நிறைவேறிவிடும். பாலமும் சேதம் ஆகாது" என்றான்.

அவனுடைய ஆலோசனையை அரசரும் மற்றும் உள்ள அனைவரும் ஏற்றுக்கொண்டனர். அது நிறைவேற்றப்பட்டது.

அரசர் வாக்களித்தபடி தெனாலிராமனுக்குப் பரிசு அளித்தார்.

**43**

## அறிவுள்ளவனே அறிவான்

**வி**ஜயநகரத்துக்குப் பெருமை அளிக்கக் கூடிய விட்டலர் கோயிலுக்கும், ஹஜர் ராமர் கோயிலுக்கும்

RangaRakes
tamilnavarasam.com

அரசர், அரசகுரு மற்றும் அரண்மனை அதிகாரிகள் அனைவரும் சென்று, அங்கு உள்ள சிறப்புமிக்க சிற்பங்களைக் கண்டு களித்தனர்.

ஹஜர் இராமர் கோயிலில் இருந்த அழகான சிற்பங்களைப் பார்த்து மகிழ்ந்த அரசர், "உயிருள்ள உருவங்களைப் போல் இவை காணப்படுகின்றன" என்று வியப்படைந்தார்.

"ஹஜர் இராமர் கோவில் என்று எவ்வாறு பெயர் வந்தது, தெரியவில்லையே!" என்றார் அரச குரு.

அதற்கு அரசர், "ஹஜர் என்றால் ஆயிரம் என்பது பொருள்" என்றார்.

"இராமர் ஒருவர் தானே! ஆயிரம் இராமர்கள் எவ்வாறு தோன்றினர்?" என்றார் அரச குரு.

"ஒவ்வொரு பக்தனுக்கும் ஒரு இராமர் இருக்கிறார். சீதாதேவி கண்ட இராமருக்கும், அனுமன் கண்ட இராமருக்கும், நீங்கள் காணும் இராமருக்கும் எத்தனையோ வேறுபாடு உள்ளனவே!" என்று தெனாலிராமன் கூறினான்.

உடனே அரசர் புன்னகையோடு "ஆயினும், இராமா! நீ காணும் இராமர், அவர்கள் கண்ட இராமர்களைக் காட்டிலும் வித்தியாசமானவர்" என்றார்.

"ஆயினும் என்று அரசர் கூறுவது ஏன்?" என்று அரச குரு கேட்டார்.



"கடவுளுக்கு ஆயிரம் முகங்கள் என்று வேதங்கள் சொல்கின்றன. ஆயிரம் என்றால் சரியாக ஆயிரம் என்பது அல்ல. எண்ணிக்கைக்கு அடங்காதது என்று பொருள்" என தெனாலிராமன் விளக்கினான்.

அதன் பின்னர், விட்டலர் கோவிலுக்குச் சென்றனர். அங்கு இருந்த வனப்புமிக்க இரதத்தைக் கண்டு அனைவரும் வியப்படைந்தனர்.

"இந்த அழகான சிற்ப இரதம், உண்மையான இரதத்தைப் போல் காட்சி அளிக்கிறது. ஆனால் கடவுள் ஏன் அதில் அமர்ந்திருக்க வில்லை?" என்றார் அரசகுரு.

"கடவுள் அதில் அமர்ந்திருக்கிறார்!" என்றான் தெனாலிராமன்.

அதற்கு அரச குரு, "அப்படியானால், நாம் ஏன் கடவுளைப் பார்க்க முடியவில்லை" என்றார்.

"நாம் இறைவனுக்கு அளிக்கும் நிவேதனப் பொருள்களை அவர் சாப்பிடுவது நம் கண்ணுக்குப் புலப்படவில்லையே என்று கேட்கலாமே!" என்றான் தெனாலிராமன்.

"ஆம், அதற்கு என்ன காரணம்?" என்றார் அரச குரு.

"நம் கண்ணுக்குப் புலப்படாமல் அளவிலோ, சுவையிலோ மாறுதல் இல்லாமல் இறைவன் புசிக்கிறார். [illegible] புனிதமானவர்களாக இருந்த போதிலும், [illegible] அடைய [illegible] அந்த அற்புத சக்தி

RangaRakes
tamilnavarasam.com

இறைவனிடமே உள்ளது. நமக்குத் தெரியாமல் நம்முடைய அறிவுக்கு எட்டாத முறையில் தெய்வங்கள் உணவு அருந்துகின்றன. 'செயலின்மையில் செயலைக் காணும் அறிவைப் பெற வேண்டும். அறிவு மிகுந்தவனே அவ்வாறு காணமுடியும்' என்று கீதை கூறுகிறது" என்று தெனாலிராமன் விளக்கமாகக் கூறினான்.

அரச குருவின் அறியாமையைக் கண்டு, அங்குள்ளோர் அனைவரும், அரசர் உள்பட ஏளனமாகச் சிரித்தனர்.

எதிலும், அரச குருவை மடக்குவதே தெனாலிராமனின் குறிக்கோள் ஆகும்.

**44**

# இயற்கையும் செயற்கையும்

புதுமையான செயலையும், ஏதாவது பிரச்சனையையும் அரசர் விரும்பி, அதில் ஈடுபடுவது வழக்கம்.

அரச சபையில் ஒருநாள், "இயற்கைத் தன்மையைப் பயிற்சியால் மாற்ற இயலுமா?" என்று விவாதிக்கப்பட்டது.

'இயலும்' என்றனர் சிலர்.

"நாயின் வாலை எவ்வாறு நீட்ட முடியாதோ, அவ்வாறே, இயல்பான தன்மையை மாற்றவே இயலாது" என்றனர் வேறு சிலர்.



"இயல்பான தன்மையானது, செயற்கைத் தன்மையைக் காட்டிலும் வலிமையுடையது. நம்முடைய வழக்கத்தை மாற்றிக் கொண்டாலும் இயற்கையான தன்மையை மாற்றவே இயலாது" என்றனர் மற்றும் சிலர்.

"ஒரு நாயின் வாலை நீட்ட முடியுமானால், மனிதனின் இயல்பான தன்மையைப் பல புதிய பழக்கங்கள் மூலம் மாற்ற முடியும். இல்லையேல் முடியாது" என்றார் அரசர்.

"முறைப்படி பயிற்சி அளித்தால் நாயின் வாலையும் நீட்ட முடியும்" என்றான் அவர்களில் ஒருவன்.

"அவ்வாறு ஆறுமாதங்களில் செய்து காட்ட முடியும்" என பத்துப் பேர்கள் முன் வந்தனர்.

அவர்கள் ஒவ்வொருவருக்கும் உயர்ரக நாய்க் குட்டி ஒன்றும் அதைப் பயிற்சி அளிப்பதற்கும், வளர்ப்பதற்கும் ஆளுக்குப் பத்துப் பொன்னும் அரசர் அளித்தார்.

அந்தப் பத்துப் பேர்களில் தெனாலிராமனும் ஒருவன்.

நாய் வாலை நீட்டுவதற்கு ஒன்பது பேரும் எப்படியெல்லாமோ முயன்று பார்த்தனர்.

வாலின் நுனியில் கல்லைக்கட்டித் தொங்கவிட்டான் ஒருவன்.

பித்தளைக் குழாய் செய்து வாலில் பொருத்தி வைத்தான் ஒருவன்.

நாய் வாலை ஒவ்வொரு நாளும் உருவிவிடச் செய்தான் ஒருவன்.

RangaRakes

tamilnavarasam.com

வாத நோய்க்கான மருந்தை நாய்க்குக் கொடுத்தான் ஒருவன்.

தினசரி பிரார்த்தனை மூலம் சாதிக்க முயன்றான் ஒருவன்.

மந்திரத்தால் அதை நீட்ட முற்பட்டான் ஒருவன்.

கடுமையான உடல் பயிற்சி செய்வித்தான் ஒருவன்.

வாலை வைத்துக்கொள்ளுமாறு நாயிடம் சொற்பொழிவு நிகழ்த்தினான் ஒருவன்.

வாலை நீட்டி வைத்துக்கொள்ளுமாறு தினமும் இச்சகம் பேசினான் ஒருவன்.

இவ்வாறு ஒன்பது பேரும் முயன்று பார்த்தனர்.

ஆனால், தெனாலிராமன் நாயைப் பட்டினி போட்டிருந்தான்.

ஆறு மாதங்கள் ஆயின.

நாய்களைக் கொண்டுவந்து காட்டுமாறு அரசர் உத்தரவிட்டார்.

ஒன்பது நாய்களின் வால்களிலும், எவ்வித மாறுதலும் காணப்படவில்லை.

"இராமா! உன்னுடைய நாய் எங்கே?" என்று கேட்டார் அரசர்.

தெனாலிராமன் வளர்த்த நாய் உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்தது. ஆனால் பலம் இழந்த வால் மட்டும் நீண்டிருந்தது போல் தெரிந்தது.



"அரசர் பிரானே! என் நாயின் வாலை நீட்டி விட்டேன்" என்றான் தெனாலிராமன்.

அரசர் அதைப் பார்த்ததும், "முட்டாளே, இந்த வாயில்லா ஜீவனைப் பட்டினி போட்டுக் கொன்று விட்டாயே, தன் வாலை அசைக்கக்கூட அதற்குச் சக்தி இல்லையே" என்று வருத்தத்தோடு கூறினார்.

"அரசர் பிரானே! இயற்கைக்கு முரண்பாடாக நாயின் வாலை நீட்டச் செய்வது, பட்டினி மூலமும், சாவினாலுமே சாதிக்கமுடியும்" என்று தெனாலிராமன் விளக்கிக் கூறினான்.

அரசர் உண்மையை உணர்ந்தார்.

## 45

## அறிவினால் உயர்வு பெறு

**அ**ரசர், தினமும் பொழுது விடியுமுன் எழுந்து விடுவது வழக்கம். ஒரு நாள் பொழுது விடிந்த பின்னும் தூங்கிக் கொண்டிருந்தார். அன்று சவரம் செய்து கொள்ளும் தினம். சவரத் தொழிலாளி வந்தான். தூங்கிக் கொண்டிருந்த அரசரை எழுப்பாமல், சவரம் செய்துவிட்டு போய் விட்டான்.

அரசர் எழுந்தார். கண்ணாடியில் முகத்தைப் பார்த்தார். முகமோ மழமழ வென்று இருந்தது. மகிழ்ச்சி அடைந்த அரசர் சவரத்தொழிலாளியைக் கூட்டி வருமாறு ஆள் அனுப்பினார். 'அரசர் தூங்கும்போது சவரம் செய்ததற்காக அரசர் கோபமுற்றிருக்கிறார் போலும்.

RangaRakes tamilnavarasam.com

என்ன தண்டனை கொடுப்பாரோ' என்று பயந்து கொண்டே வந்தான் சவரத் தொழிலாளி.

அரசர் அவனைப் பாராட்டி, "உனக்கு என்ன விருப்பம்?" என்று கேட்டார்.

"அரசர் பெருமானே! என்னை அந்தணனாகச் செய்து, அறிஞர், அந்தணர், சைவப் பெரியார் அனைவரும் அமர்ந்து சாப்பிடக் கூடிய அறச்சாலையில், நானும் அவர்களோடு இருந்து சாப்பிட வேண்டும் என்பது, என்னுடைய வெகுநாளைய ஆசை" என்று தெரிவித்தான் சவரத் தொழிலாளி.

அரசரும் அவ்வாறே செய்வதாகக் கூறிவிட்டு, அந்தணர்களை வரவழைத்தார். அவர்களிடம், "அந்தணர்களே! நம் அரண்மனை சவரத் தொழிலாளியை அந்தணனாக்கி அறிஞர், அந்தணர், சைவப்பெரியார் ஆகியோர் சாப்பிடக் கூடிய அறச்சாலையில் அவனையும் சாப்பிடும்படி ஆறு மாதங்களுக்குள் அதற்கானதைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் உங்களுக்கு அளித்துள்ள அரச மான்யங்களை எல்லாம் பறிமுதல் செய்ய நேரிடும்" என்று எச்சரித்தார்.

அந்தணர்கள் ஒன்று கூடி ஆலோசித்து, தெனாலிராமனிடம் சென்று அரசருடைய கட்டளையைக் கூறி வருத்தமுற்றனர்.

"கவலை வேண்டாம். நான் கவனித்துக் கொள்கிறேன்" என்று அந்தணர்களுக்கு ஆறுதல் கூறி அனுப்பி வைத்தான் தெனாலிராமன்.



ஆறு மாதங்கள் முடிவடையும் நாள். அரசர் அறச்சாலைக்கு வந்து பார்வையிடுவதாகச் சொல்லி அனுப்பினார்.

அறச்சாலைக்கு அருகில் உள்ள குளக்கரையில் நான்கு அந்தணர்களைக் கொண்டு ஓமம் வளர்க்கச் செய்து மந்திரங்களை கூறச் செய்து, ஒரு கறுப்பு நாயைக் குளிப்பாட்டி ஓம குண்டத்தைச் சுற்றி இழுத்து வந்தான் தெனாலிராமன்.

அறச்சாலைக்குச் சென்று கொண்டிருந்த அரசர், அந்த நிகழ்ச்சியைக் கண்டார். வியப்படைந்து, "இராமா! என்ன கூத்து?" என்று கேட்டார்.

"அரசர் பெருமானே! கறுப்பாக உள்ள இந்த நாயை வெள்ளை நாயாக ஆக்கப் போகிறேன். புலால் உணவு உண்ணும் சவரத் தொழிலாளி அந்தணனாக மாறும்போது, என்னுடைய கறுப்பு நாய் வெள்ளை நாயாக மாற முடியாதா என்ன?" என்றான்.

அரசர் உடனே அவனுடைய உட்கருத்தை உணர்ந்துகொண்டு அரண்மனைக்குத் திரும்பி விட்டார். சவரத்தொழிலாளியை வரவழைத்து, "உன்னுடைய ஆசை விபரீதமானது. ஒருவன் தானாகவே, மாறினால் உண்டு. மற்றவர்களால் மாற்ற இயலாது" என்று கூறி, அவனுக்குப் பொருள் கொஞ்சம் கொடுத்து, "நீ சுய அறிவினால் உயர்வு பெற முயற்சி செய்" என்று கூறி அவனை அனுப்பினார்.

அந்தணர்கள் ஆறுதல் அடைந்து, தெனாலிராமனின் அறிவு நுட்பத்தைப் புகழ்ந்து, நன்றி தெரிவித்தனர்.

RangaRakes tamilnavarasam.com

**46**

# டில்லியில் தெனாலிராமன்

**டி**ல்லியில் மொகலாயச் சக்கரவர்த்தி பாபர் ஆட்சி செய்துகொண்டிருந்தார்.

'தென்னாட்டில் விஜயநகர அரச சபையில், தெனாலிராமன் என்னும் விகடகவி இருக்கிறான். அவன் பிராமணனாக இருந்தாலும், யுக்தியிலும் அறிவுக் கூர்மையிலும் சிறந்தவன். அவனுக்கு நிகர் எவரும் இல்லை!' என்று பலரும் சக்கரவர்த்தி பாபரிடம் புகழ்ந்தனர்.

அதனால் பாபர் தெனாலிராமனுடைய திறமையைச் சோதிக்க எண்ணினார்.

விஜயநகர அரசருக்கு, தெனாலிராமனை ஒரு மாதத்திற்கு டில்லியிலுள்ள தம்முடைய சபைக்கு அனுப்பி வைக்குமாறு கடிதம் எழுதினார்.

கடிதத்தைக் கண்ட அரசருக்கு மகிழ்ச்சி பொங்கியது. உடனே தெனாலிராமனை வரவழைத்து, விவரத்தைச் சொல்லி, "தென்னகத்தின் பெருமையையும், திறமையையும், வடக்கே டில்லியில் ஓங்கச் செய்து, சக்கரவர்த்தியிடமிருந்து பரிசு பெற்றுவர வேண்டும். அதற்காக நான் உனக்கு ஆயிரம் பொன் பரிசு அளிப்பேன். நீ பரிசு பெறாமல் இங்கே வந்தாயானால், உன் தலையை மொட்டை அடித்து, கரும்புள்ளி, செம்புள்ளி, குத்தி, விஜயநகரத்தை விட்டே விரட்டி



விடுவேன்" என்று கூறி, தெனாலிராமனை அனுப்பி வைத்தார்.

தெனாலிராமன் டில்லிக்கு வருவதை அறிந்த சக்கரவர்த்தி பாபர் தம் சபையிலுள்ளோர் அனைவரிடமும் "நம்மிடம் வரக்கூடிய விகடகவி தெனாலிராமனை நான் கடுமையாகச் சோதிக்க எண்ணியுள்ளேன். அதனால் அவன் எவ்வித அகடவிகடம் செய்தபோதிலும், எவரும் சிரிக்கக் கூடாது. மற்றும் அவனுடைய திறமையைப் பாராட்டவும் கூடாது. இந்த மாபெரும் சபையில் அவனுக்கு எந்தப் பரிசும் அளிக்கக் கூடாது. மீறி நடப்பவர்கள் தங்களுடைய தலையை இழக்க நேரிடும்" என்று கண்டிப்பாக எச்சரித்தார்.

தெனாலிராமன் டில்லிக்கு வந்து, அரச சபையில் புகழும் பரிசும் பெறுவதற்காகத் தன்னுடைய விகடத் திறமையையும், சாதுர்யத்தையும் தொடர்ந்து பதினைந்து நாட்கள் மிகத் தீவிரமாய் காட்டியும்கூட ஒருவரும் பாராட்டவில்லை. பரிசும் கிடைக்கவில்லை.

அதன் பின் அரச சபைக்குச் செல்லாமல் இருந்து விட்டான்.

ஒரு நாள் சக்கரவர்த்தி பாபர், வழக்கம்போல் தம்முடைய மெய்க்காப்பாளருடன் உலாவச் சென்று கொண்டிருந்தார். வழியில் முஸ்லிம் பெரியவர் ஒருவர் குழி தோண்டி, புளியங்கன்று ஒன்றை நட்டுக் கொண்டிருந்தார். அதைக் கண்ட சக்கரவர்த்தி, அவரை அணுகி, "கிழவரே, இந்த வயதில் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

RangaRakes tamilnavarasam.com

முதியவர், "புளிய மரம் ஒன்றை நட்டுக் கொண்டிருக்கிறேன். அதன் பழங்களை விற்றால் லாபம் கிடைக்கும்" என்றார்.

"நீரோ வயதானவர்; அது மரமாகிக் காய்த்து, அதன் பழங்களால் கிடைக்கக்கூடிய லாபத்தை நீர் அனுபவிக்குமுன் இறந்து விடுவீரே, ஏன் இந்தச் சிரமம்?" என்று கேட்டார் பாபர்.

"சக்கரவர்த்தி அவர்களே! கடவுளின் கருணை எல்லையற்றது. இதுவரை நம்முன்னோர்கள் நட்டுவைத்த மரங்களிலிருந்து, பழங்களைப் பறித்து வாழ்ந்து வந்தேன். அதுபோல், நமக்குப் பின்னால் வருபவர்கள் பழம் பறித்து வாழ்வதற்காக, நாம் மரம் நட்டுவைத்துவிட்டுப் போவது நமது கடமை அல்லவா?" என்றார் முதியவர்.

"நீர் செய்வதும் சொல்வதும் மிகப் பெரிய சிறப்பாகும்" என்று பாராட்டிவிட்டு அவருக்கு ஒரு பொன் முடிப்பைப் பரிசாக வழங்கினார் பாபர்.

முதியவர் அகமகிழ்ந்து, கடவுள் கருணை மிக்கவர். சக்கரவர்த்தி மிக நல்லவர். "சக்கரவர்த்தி அவர்களே! மரத்தை நட்டவர்கள் அனைவரும், மரம் வளர்ந்த பின்னரே, லாபம் அடைவார்கள். ஆனால், நானோ கன்றை நடும்போதே தங்களிடமிருந்து பொன்முடிப்பை லாபமாகப் பெற்று விட்டேன். மற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணமே நமக்கு நன்மை செய்யும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை" என்றார்.



அவர் கூறிய உயர்வான சொற்களையும், சாதுர்யத்தையும் பாராட்டிய பாபர் மீண்டும் ஒரு பொன்முடிப்பைப் பரிசாக அளித்தார்.

நன்றிப் பெருக்கோடு அதைப் பெற்றுக் கொண்ட பெரியவர், "சக்கரவர்த்தி அவர்களே! இந்த மரங்களை நட்டவர்கள் எல்லோரும் ஆண்டுக்கு ஒரு முறைதான் பயன் அடைவார்கள். ஆனால், நானோ அல்லாவின் கிருபையாலும், தங்களின் கருணையாலும், இதை நட்ட அன்றே இருமுறை பயன் பெற்றுவிட்டேன்" என்றார்.

"முதியவரே! உம்முடைய சிறந்த பேச்சும், அறிவுக் கூர்மையும் கண்டு மிகவும் களிப்படைகிறேன்" என்று பாராட்டிவிட்டு, மறுபடியும் ஒரு பொன்முடிப்பை பரிசாக அளித்தார் பாபர்.

மிகுந்த நன்றியோடு அதையும் பெற்றுக் கொண்டார் பெரியவர்.

இனியும் அங்கே நின்று கொண்டிருந்தால், முதியவர் தம் பேச்சுத் திறமையால், கையிலுள்ள பொன் முடிப்புகளை எல்லாம் பரிசாகப் பெற்றுக் கொண்டு விடுவார் என்று எண்ணி, பாபர் புறப்பட்டார்.

அப்பொழுது, "சக்கரவர்த்தி அவர்களே! சற்றுப் பொறுங்கள்," என்று கூறி, முதியவர் தம் வேடத்தைக் கலைத்தார்.

தெனாலிராமனே முஸ்லிம் பெரியவர் வேடத்தில் வந்து, திறமையாகப் பேசி, தம்மிடம் பரிசுகளைப் பெற்றிருக்கிறான் என்பதை வியந்து, மேலும் அவனைப்

RangaRakes
tamilnavarasam.com

பாராட்டினார் பாபர். தம் மெய்க் காப்பாளரிடமிருந்த பொன்முடிப்புகளையெல்லாம் அவனிடம் வாரிக் கொடுத்து, நீ பெற்ற வெற்றியையும், அடைந்த பரிசுகளையும் விஜயநகர அரசரிடம் தெரிவி," என்று மனப்பூர்வமாக மகிழ்ச்சிப் பெருக்கோடு வழி அனுப்பினார்.

தென்னகத்தின் திறமையை டில்லியில் நிலைநாட்டி வந்த தெனாலிராமனை, அரசர் பாராட்டி, முன்பு வாக்களித்தபடி ஆயிரம் பொன் பரிசு அளித்தார்.

டில்லி சென்று புகழும், பரிசும் பெற்றுவந்த பிறகு அரச சபையில் இருப்போரும், நகரமக்களும் பலவாறு புகழ்ந்து கொண்டாடினார்கள்.

**47**

# திருடர்களின் ஏமாற்றம்

**வி**ஜயநகரத்திலும் அதைச் சுற்றிலும் உள்ள வட்டாரத்தில், கோடை காலத்தில் பெரும் வறட்சி உண்டாயிற்று.

தெனாலிராமனின் வீட்டைச் சுற்றியிருந்த அவனுடைய பெரியத் தோட்டம் நீர் இல்லாமல் பயிர், செடி, கொடி, மரங்கள் யாவும் வாடின. அவனுடைய தோட்டத்திலிருந்த கிணறு ஆழமானது. அதிலிருந்து தண்ணீர் இறைப்பது தெனாலிராமனுக்குச் சிரமமாக இருந்தது. அதனால் அதிகச் செலவை உண்டாக்கக் கூடியதாகவும் தோன்றியது. அதனால் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.



அப்பொழுது, ஒரு நாள் இரவு, நான்கு முரட்டுத் திருடர்கள் தெனாலிராமனின் வீட்டில் திருடுவதற்காக, தோட்டத்தின் பின்புறத்தில் பதுங்கி இருந்தார்கள். அதைக் குறிப்பாகக் கண்ட தெனாலிராமன், வெளியே காட்டிக்கொள்ளாமல், வீட்டினுள் சென்று மனைவியிடம், பஞ்சகாலத்தில், திருடர்கள் நம் வீட்டில் புகுந்து திருடவரக்கூடும். ஆகையால், நாம் முன் எச்சரிக்கையாக நம்மிடம் உள்ள பொன், பொருள், ஆபரணங்களை எல்லாம் பழைய பெட்டிகளில் வைத்துப் பூட்டி, தோட்டத்துக் கிணற்றில் போட்டு வைத்தால், பாதுகாப்பாக இருக்கும்" என்று திருடர்களின் காதில் விழும்படி உரக்கக் கூறினான். திருடர்கள் அதைக் கேட்டு ஆவலோடு காத்திருந்தனர்.

உடனே மூன்று பெட்டிகளில் கற்களைப் போட்டு நிரப்பி, பூட்டி, தெனாலிராமனும் அவன் மகனும் சேர்ந்து மூன்று பெட்டிகளையும் ஒவ்வொன்றாகத் தூக்கி வந்து, கிணற்றில் தொப்பென்று போட்டார்கள். பிறகு வீட்டிற்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டு உட்கார்ந்திருந்தான் தெனாலிராமன்.

கிணற்றில் பெட்டிகள் விழுந்த சத்தம் கேட்டதும் திருடர்கள் ஆவலோடு வந்து, பெட்டிகளை எடுப்பதற்காக, கிணற்றில் உள்ள ஏற்றத்தின் மூலம் தண்ணீரை இறைத்து வெளியே கொட்டிக் கொண்டிருந்தார்கள்.

தெனாலிராமன் சிறு மண்வெட்டியை எடுத்து வந்து, திருடர்களுக்குத் தெரியாமல், கிணற்றிலிருந்து இறைக்கும் தண்ணீரை யெல்லாம் தோட்டத்தில் உள்ள பயிர்கள், செடி, கொடி, மரங்களுக்குப் பாத்திகளில் பாயும்படி வெட்டி விட்டான்.

RangaRakes tamilnavarasam.com

பொழுது விடியும் நேரம். மக்கள் எழுந்திருக்கும சமயம். தெனாலிராமன் திடீரென்று "ஐயா, நல்லவர்களே! தண்ணீர் இறைத்தது போதும்! தோட்டத்தில் தண்ணீர் பாய்ந்துவிட்டது. அதற்குக் கூலியாகப் பெட்டிகளில் உள்ள கற்களை எடுத்துக் கொண்டு பொழுது விடியுமுன் நீங்கள் பத்திரமாகப் போய்ச் சேருங்கள்" என்று கூறி, கடகடவென்று சிரித்தான்.

திருடர்கள் 'திடுக்கிட்டு, நம்மைப் பிடிக்காமல் இந்த மட்டோடு விட்டானே, அதுபோதும்' என்று பயந்து ஓடினார்கள்.

**48**

## தெனாலிராமனின் பிரிவு

**தெ**னாலிராமன் ஒரு நாள் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு நல்ல பாம்பு அவனைக் கடித்துவிட்டது.

இனி உயிர் பிழைக்க முடியாது என்பதை அவன் உணர்ந்தான்.

அரசரைக் கடைசி முறையாகக் காண ஆவலோடு செய்தி சொல்லி அனுப்பினான்.

அரசர் இதைக் கேட்டதும், "இவ்வளவு சீக்கிரததில், இராமன் மறுபடியும் இறந்து விட்டானா? என்னை இப்பொழுதும் ஏமாற்ற முடியாது!" என்று சொல்லி வர மறுத்துவிட்டார்.



முன்பு ஒருமுறை தான் இறந்துவிட்டதாக தெனாலிராமன் அரசருக்குத் தெரிவித்து, ஏமாறச் செய்துவிட்டான் அல்லவா!

அரசர் வராததை அறிந்த தெனாலிராமன், "ஒரு முறை பொய் சொன்னவனை, மறு முறை உண்மை சொல்லும் போது அவனை யாரும் நம்புவது இல்லை. என்ன வருந்தத்தக்க விஷயம்! நான் விகடகவியாகவே நடித்து, வாழ்ந்து விட்டேன். அதனால், என் பேச்சை, அரசர் விளையாட்டாகவே கருதுகிறார். நான் இறந்து விட்டதைக் கேள்விப்பட்டால், அரசர் மிகவும் வருந்துவார் என்பதில் சந்தேகம் இல்லை. அரசர் மிகவும் தங்கமான குணங்கள் உடையவர். விகடமான பேச்சுக்களை எப்பொழுதும் ரசிப்பவர். ஏராளமான பரிசுகளை எனக்கு மனப்பூர்வமாக அளித்திருக்கிறார். அரசர்களுக்குள் தலைசிறந்தவர். மாந்தருக்குள் ஈடு இணை இல்லாதவர்" என்று உணர்ச்சி ததும்பக் கூறினான்.

சிறிது நேரத்தில் தன் மனைவியிடத்திலும், மகனிடத்திலும் விடைபெற்றுக் கொண்டான்.

"தாயே! என்னைத் தேடிக்கொண்டு நீயோ வந்துவிட்டாயா? உன்னுடைய தொளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது முகங்கள் எங்கே?" என்று வேடிக்கையாகக் கேட்டவாறு கடைசி மூச்சு விடும் நேரத்திலும், விகடம் செய்து, எமனையும் நோக்கிச் சிரித்தவாறு உயிர் நீத்தான்.

RangaRakes tamilnavarasam.com

அதன் பின் அரசர் அங்கே வந்தார். கண் கலங்கினார். எத்தனையோ ஆண்டுகளாக, என்னை உற்சாகப்படுத்தி, அளவற்ற ஆனந்தத்தில் ஆழ்த்திய உன்னைக் கடைசி முறையாக வந்து பாராமல் போனேனே என்று புலம்பினார்.

தெனாலிராமன் மறைந்துவிட்டான் என்றாலும், தெனாலிராமனின் நகைச்சுவைகளையும், சாதுர்யமான பேச்சுக்களையும், வழி வழியாகக் கேட்டும், படித்தும் உலகம் சிரித்துக் கொண்டு இருக்கிறது.

RangaRakes

tamilnavarasam.com